# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 03 திங்கட்கிழமை (15.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 081


# பொதுச் சின்னத்துக்கு ஐ.தே.கட்சி

# இணங்காவிடில் ஜே.வி.பி. தனி வழியில்!

## பொன்சேகாவை முன்னிலைப்படுத்தி போட்டியிடும்



கொழும்பு, பெப்ரவரி 15

**ஜனாதிபதித் தேர்தலைப் போன்று நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிர்க் கட்சிகள் அனைத்தும் அன்னச் சின்னத்தில் போட்டியிடவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு இணங்காவிடில் சரத்பொன்சேகாவை முன்னிலைப்படுத்தி மாற்று அணியொன்றின் ஊடாக நாம் தேர்தலில் குதிப்போம்.**

இவ்வாறு ஜனதா விமுக்தி பெரமுனவின்(ஜே.வி.பியின்) பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

நாம் யானைச் சின்னத்தில் ஒருபோதும் போட்டியிடமாட்டோம் அனைவரும் ஒன்றிணைந்து அன்னச் சின்னத்தில் போட்டியிடுவதையே விரும்புகிறோம் - என்றும் அவர் கூறினார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஹற்றன் நகரசபைத் தலைவர் நந்தகுமார் பிணையில் விடுதலை

கொழும்பு,பெப்.15

ஊடகவியலாளர் ஸ்ரீரங்காவின் பாதுகாப்பு ஊழியர்மீது நடத்தப்பட்டதாகக் கருதப்படும் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகிக்கப்படும் ஹற்றன் நகரசபைத் தலைவர் நந்தகுமார் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஹற்றன் நீதிமன்ற நீதிவான் சந்துன் விதான, மூவாயிரம் ரூபா காசுப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையிலும் இவரை விடுவிக்க உத்தரவிட்டார்.

ஹற்றன் - டிக்கோயா நகரசபைத் தலைவர் டாக்டர் அழகமுத்து நந்தகுமார் தனது சட்டத்தரணிமூலம் ஹட்டன் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து நீதிவான் இந்தப் பிணை விடுதலையை வழங்கினார். (சி)

## பொதுச் சின்னம் குறித்துத் தொடர்ந்தும் கட்சிகளுடன் பேச்சு என்கின்றது ஐ.தே.க.

### அடுத்தவாரத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமாம்

கொழும்பு,பெப்.15

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவதா, இல்லையா என்பது குறித்து இன்னும் பல கட்சிகளுடன் தொடர்ந்து பேசி வருவதாகக் கூறியுள்ள ஐ.தே.கட்சி, இவ்விடயம் குறித்து அடுத்த வாரமளவில் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார். ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுவதற்கு அதிக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. எமது கட்சியின் வேட்பு மனுக்குழு வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்.

**மாற்று யோசனைகள் பரிசீலிக்கப்படும்**

எமது கட்சியின் மாவட்டத் தவிசாளர்கள், யானைச் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்று யோசனை தெரிவித்தனர். இந்த யோசனை கட்சியின் செயற் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. யானைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு செயற் குழு முடிவெடுத்தது. இருப்பினும், இதுதொடர்பில் இன்னும் பல கட்சிகளுடன் பேச்சுகள் நடத்தி மாற்று யோசனைகளைப் பெறுவதற்கான

(24ஆம் பக்கம் பார்க்க)


கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான கணக்கீடு மாதிரி வினாத்தாள்.

நாளை

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான புவியியல் மாதிரி வினாத்தாள்.


## ஜெனரல் பொன்சேகாவை விடுவிக்குமாறு ராஜபக்ஷ குடும்பத்திடம் கெஞ்சமாட்டோம்!

### மனைவி அனோமா பேட்டியில் தெரிவிப்பு



கொழும்பு,பெப். 15

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, இராணுவ நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு ராஜபக்ஷ குடும்பத்தினரிடம் கெஞ்சப்போவதில்லை என பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவி வகிப்பதை ராஜபக்ஷ குடும்பத்தினர் விரும்பாததே அவர்களுக்கும் முன்னாள் இராணுவத் தளபதிக்கும் இடையிலான மனக்கசப்பிற்கு முக்கிய காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் 'ஸ்ரெய்ட் ரைம்ஸுக்கு' அளித்துள்ள பேட்டியில் இதனைக் குறிப்பிட்டுள்ள அனோமா பொன்சேகா அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கேள்வி:- ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் இடையிலான உறவில் எப்படிப் பிரச்சினை ஏற்பட்டது?

பதில்:-என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. நாங்கள் நல்ல நண்பர்களாக இருந்தோம். யுத்தம் முடிவடைந்த பின்னர் புரிந்துணர்வின்மை ஏற்பட்டது. யுத்தத்திற்குப்

(23ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்களாக இருந்த பன்னிருவருக்கு இம்முறை கல்தா?

கொழும்பு,பெப். 15

இதுவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களாக இருந்த 12 பேருக்கு இந்தத் தடவை வேட்பாளர் நியமனம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் மிக அரிதாக உள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ விசாரணைக்கு ஒத்துழைக்க ஜெனரல் சரத் பொன்சேகா மறுப்பு

கொழும்பு,பெப்.15

இராணுவத்தின் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத்தின் ஆரம்பகட்ட விசாரணைகளுக்கு ஒத்துழைப்பதற்கு மறுத்துவிட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

ஜெனரல் பொன்சேகாவின் சுருக்கமான சாட்சியத்தைப் பெறுமாறு பணிக்கப்பட்ட மூத்த இராணுவ அதிகாரியின் முன்னிலையில் தோன்றுவதற்கு ஜெனரல் சரத் பொன்சேகா மறுத்துவிட்டார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பிரச்சினையில் இலங்கை அரசு அதிக அக்கறை எடுத்துச் செயற்படவில்லை

### இந்திய வெளிவிவகார அமைச்சர் விசனம்

சென்னை,பெப்.15

ஈழத்தமிழர் விவகாரத்தில் இலங்கை அரசு அதிக ஆர்வம் காட்டி செயற்படுவதாகத் தெரியவில்லை என்று இந்தியா விசனம் தெரிவித்துள்ளது.

நேற்று சென்னை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தமிழர்கள் விடயத்தில் இலங்கை அரசு அதிக அக்கறை எடுத்து செயற்படவில்லை என்று கூறினார்.

இந்த விடயம் குறித்துத் தாம் கவலை

(24ஆம் பக்கம் பார்க்க)

## தங்காலையில் நேற்று ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் தடியடி!

கொழும்பு,பெப்.15

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஜே.வி.பி. நேற்று தங்காலையில் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸார் தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன், பலரைக் கைது செய்துமுள்ளனர்.

தங்காலை பஸ் நிலையத்திற்கு முன்பாக சுமார் 150 இற்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீதே பொலிஸார் தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட மோதலில் பொலிஸ் அதிகாரிகள் மூவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்ப நிறுவன யாழ். கிளையின் கல்வி வளாகத் திறப்பு விழா வைபவம் இன்று

தகவல் தொழில்நுட்ப நிறுவன யாழ்.கிளையின் கல்வி வளாகம் வைபவ ரீதியாக இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சென்.மாட்டீன் கட்டடத்தொகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பணிப்பாளர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க கலந்து கொள்கிறார். கணனிப்பிரிவின் பீடாதிபதி பேராசிரியர் அல்பிரட் பெரேரா, கணினி விரிவுரையாளர் துசிதா கல்பகே, நிறுவனத்தின் நிர்வாகப்பணிப்பாளர் நீல் செனவிரத்ன, யாழ். கிளையின் கல்வி இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து உரையாற்றவுள்ளனர்.

மதத்தலைவர்கள், கல்வியியலாளர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோரின் ஆசி உரைகளும் இடம்பெறும்.

ஆர்வலர்கள் வருகை தந்து நிகழ்ச்சியைச் சிறப்பிக்குமாறு விழாக்குழுவினர் கேட்டுள்ளனர். (04)


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

**மீண்டும் யாழில்**

இன்று 15.02.2010 முதல் நேரில் சந்திக்கலாம்

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம், நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், தலை யிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு) (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

மானிப்பாய் வீதியிலிருந்து "செல்வமாளிகை"
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (c/564876)
T.P. 0719315664, 0777569205


## Invitation

UDUVIL GIRLS' COLLEGE

**Annual Inter - House Sports Meet**

16 Tuesday, February 2010

At 1.30 p.m

Principal, Staff & Students (C/564893)


## தேவை

01. தலைமைச் சமையலாளர்
02. சமையல் உதவியாளர் (ஆண், பெண்)
03. சுத்திகரிப்புத் தொழிலாளர்.
04. Room Boy
05. வீட்டுப்பணிப்பெண் (வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்)

நேர்முகத்தேர்வு:
யாழ்.ரெஸ்ட் இன், 337, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி.
காலம்: 15, 16.02.2010 மு.ப. 10மணி (94869)

## தேவை

பனிக்கட்டி (ஐஸ்) தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு (வயதெல்லை 18-40) ஆர்வமுடையோர் தமது விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு 22.02.2010இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

ஸ்ரார் இன்டஸ்ரியல் சேர்விசஸ் பிரைவேட் லிமிற்டெட்,
15/1, பிள்ளையார் கோவில் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (94870)


## கண்ணீர் அஞ்சலி



கோகுல வீதி, உரும்பிராய் மேற்கை நிரந்தர முகவரியாகவும் 3 ஆம் வட்டாரம் மந்துவில், புதுக் குடியிருப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட

**சண்முகராசா சந்திரமோகன்**

13.02.2010 சனிக்கிழமை இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்திற்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேடியுமே கிடைக்காத மாணிக்க கல்லொன்று
தேடியெங்கள் மனைவந்து சோதரியின் கரம்பற்றி
கூடிக்குலவியிங்கு ஐந்தாண்டுகள் ஆகுமுன்னே
கூடிழந்து துணைவிடுத்து எம் உறவை பிரிந்ததேனோ?
வாடியிங்கு துடிக்கின்ற சோதரியின் நிலைதன்னை
வடித்திடவே வார்த்தையின்றி அழுகின்றோம் நாம் இங்கு
ஒடி வந்து முகம்காண வழியின்றிக் கலங்கிடும்
உனதருமை மைத்துனரைக் கலங்க விட்டுப் போனதேனோ?

தகவல் :
செ. செல்வகுமார் (சுவிஸ்),
செ. லலித் (குபேரன் - இந்தியா).
(மச்சான்மார்).

## ஐ.தே.கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலைப் போல அன்னச் சின்னத்தில் போட்டியிடுவதையே நாம் விரும்புகின்றோம். ஜனாதிபதித் தேர்தல் கூட்டணி இத்தேர்தலிலும் தொடர்வதை நாம் விரும்புகின்றோம்.

ஆனால், யானைச்சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது. நாம் யானைச் சின்னத்தில் போட்டியிடமாட்டோம். அனைவரும் ஒன்றிணைந்து பொதுவான அன்னச் சின்னத்தில் போட்டியிடுவதையே நாம் விரும்புகிறோம்.

இது தொடர்பாக நாம் அக்கட்சியுடன் பேசுவோம். அப்படி இல்லாது போனால், நாம் சரத் பொன்சேகாவை முன்னிலைப் படுத்தி மாற்று அணியொன்றின் ஊடாகத் தேர்தலில் போட்டியிடுவோம்

அரசுக்கு எதிராக இப்போது யாரும் அரசியல் செய்யமுடியாது. அவ்வாறு செய்பவர்கள் காணாமல் போவர் அல்லது கைது செய்யப்படுவர். சரத் பொன்சேகா இதற்கு நல்ல உதாரணம்.

யுத்தத்தை வெற்றிகொண்ட - 41 லட்சம் பேரின் வாக்குகளைப் பெற்ற - சரத் பொன்சேகாவுக்கே இந்நிலை என்றால் சாதாரண மக்களுக்கு என்ன நடக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

நாட்டில் முழுக்கமுழுக்க இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இந்த இராணுவ ஆட்சியையும் அராஜகத்தையும் நியாயப் படுத்தி அவற்றை மக்கள் ஏற்கவேண்டும் என்று அரசு விரும்புகின்றது.

யுத்தம் முடிவுற்ற நிலையில் முதலில் ஜனநாயகம் தலைதூக்கியிருக்க வேண்டும். ஆனால், அது முற்றாக அழிந்துவிட்டது. இந்த ஜனநாயகத்தை மீண்டும் கொண்டுவர மக்கள் ஒன்றிணைய வேண்டும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்தி ஜனநாயகத்தைக் காப்பாற்ற அனைவரும் முன்வரவேண்டும் - என்றார். (அ-சி)


## தேவை

★ கணக்காளர்
★ பில்கிளார்க்
★ விற்பனையாளர்
★ சாரதி (40வயதிற்கு மேல்)

குறிப்பு: யாழ்.மாநகர சபைக்கு உட்பட்டவர்களில், காகிதாதிகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 0778393975 (C/564894)

## ஓட்டோ விற்பனைக்கு

NP HK XXXX தொடர் இலக்கமும், கூட்டெண் 5உடைய பச்சைநிற ஓட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777110569 (92863)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள IZUSU Journey M ரக வாகனம் Roude இல்லாமல் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0772097009, 0773543507 (C/564900)


யாழ்.மாவட்ட போதகர், ஊழியர்களின் ஐக்கியம்
விசேஷித்த கருத்தரங்கு
"தேவனின் இருதயத் துடிப்பு"
போதகர் லக்கி கனகசபை (AG அவுஸ்திரேலியா) அவர்கள் கலந்துகொள்கிறார்.
இடம்: அசெம்பிளி ஒவ்கோட் சேச், இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
காலம்: 18.02.2010, 19.02.2010. நேரம்: காலை 9மணி
பங்குபற்றுவோர்: போதகர், தேவ ஊழியர், தலைவர்கள்.
தகவல்: P.விஜியன் (கௌரவ காரியதரிசி) (C/564895)

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் உதவிப்பதிவாளரும், தற்போதைய விரிவுரையாளருமான K.L.ரமணன் அவர்களின் அன்புத் தங்கை

**திருமதி பிரணவன் சியாமளா**

அவர்கள் நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்துக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகக்கிளை ஊழியர்கள், யாழ்.பல்கலைக்கழகம். (C/564897)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் எட்வேட் அருந்தவசீலன் (சீலன்-நெடுந்தீவு பிரதேச சபை) அவர்களின் அன்புத் தந்தை

**நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எட்வேட் J.P.**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிஷாவந்தா ஜுவெலரி,
யாழ்ப்பாணம். 0212227985 (C/564891)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வடிவேலு

(முன்னாள் சாரதி, இ.போ.ச.)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் அன்னசத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வடிவேலு நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் மூத்த மகனும் முருகேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக்கணவரும் விக்னேஸ்வரன், மகேஸ்வரன், விக்கினேஸ்வரி, ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற குணதீஸ்வரன் மற்றும் விமலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் முகுந்தா, பிறேமராணி, யோகரெட்ணம், ஜெயந்தி, மீனா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் பாலசிங்கம், நாகேஸ்வரி, சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரனும் பாலசுப்பிரமணியம், யோகாம்பிகை, காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் கர்வுனா, அசோக், ஜெனனி, ரிஷிகேசன், உமேஸ், டிலானி, கபிலன், சுகன்யா, ஜெகதர்ஷன், கீர்த்தனா அர்ச்சனா, டினிசியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58/2 காமானிலா அவென்யூ,
அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம். (94873)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வி சாவித்திரி விநாசித்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியை, யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்)

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும், இல 11, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாவித்திரி விநாசித்தம்பி நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய ஆசிரியர்களான கந்தையா விநாசித்தம்பி-பாக்கியம் தம்பதிகளின் புதல்வியும், செல்வரத்தினம், சாரதாதேவி- இராசநாதன், செல்வி சிவமணி, சறோஜினிதேவி - ரெத்தினகுமார், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மாதேவி - செல்வரெட்ணம், மகேஷன்-இராசநாதன், கந்தையா, இரத்தினகுமார், சாரதாதேவி-பத்மநாதன் ஆகியோரின் மைத்துனியும், கல்யாணி, கந்தன், காஞ்சனா, சுகந்தன், வசந்தன் ஆகியோரின் மாமியாரும், தமயந்தி, குமணன் ஆகியோரின் சிறிய தாயாரும், அமுதம்-தர்மலிங்கத்தின் அன்பு பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரத்னம் மலர்ச்சாலையில் இன்று முற்பகல் 10 மணிமுதல் மாலை 6 மணிவரை வைக்கப்பட்டு நாளை (16.02.2010) செவ்வாய்க்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 10மணியளவில் தகனக்கிரியைக்காகக் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, 1/6 ரோகினி வீதி,
கொழும்பு - 06.
58 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (C/564898)

தகவல்:
சகோதரர்கள்.
0112595642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொன்சேகா கைது விடயத்தில் பொங்குகிறது பௌத்த மதபீடம்

இலங்கையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும், அதைத் தக்கவைத்துக் கொள்ளவும் அரசியல் தரப்புகள் வழமையாகக் கையிலெடுக்கும் மார்க்கம் - உத்தி - தந்திரோபாயம் - பௌத்த, சிங்களப் பேரினவாதம் தான். பௌத்த மதவாதத்தையும், சிங்கள இனவாதத்தையும் தீ மூட்டி எரிய வைத்து அந்த அரசியல் நெருப்பில் சுகம் - அதிகாரம் - பதவி - ஈட்டிக் குளிர் காய்வதே தென்னிலங்கையின் பரவணி அரசியலாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கூட தமிழர் தரப்பில் அதிகம் செல்வாக்குப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா இணக்கம் கண்டவுடன் இதே இனவாத உணர்ச்சியூட்டும் பிரசாரமே தெற்கில் கட்டவிழ்ந்தமையையும், அது அதைக் கிளப்பி விட்டவர்களுக்குப் பெரு வெற்றியை ஈட்டிக் கொடுத்தமையையும் நாம் கண்டோம்.

ஆனால் அதே பௌத்த மதவாதம் - அல்லது மதத் தலைமை - இப்போது ஆளும் தரப்புக்குத் தலையிடியாக வந்து அமைந்திருக்கும் திடீர் மாற்றத்தை நாடு தற்சமயம் சந்தித்திருக்கின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகாவை அதிரடியாகக் கைது செய்து, இராணுவத் தடுப்புக் காவலில் வைத்து, இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தி, தனது அரசியல் எதிரியை வசமாக அடக்கி, ஒடுக்கி, அரசியல் களத்திலிருந்து அகற்றிவிட அரசுத் தலைமை வகுத்த திட்டத்துக்குப் பெரும் சவாலாகக் கிளம்பியிருக்கின்றது பௌத்த மதபீடம்.

ஜெனரல் சரத் பொன்சேகாவையும் அவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய இராணுவ அதிகாரிகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரும் - கடும் தொனியிலான - செய்தி ஒன்றை இலங்கையின் மூன்று நிக்காயக்களையும் சேர்ந்த நான்கு மகா நாயக்கர்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் வண. திபெட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண. உடுகம புத்தரகீத்த தேரர், அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் வண. டவுல்தென ஞானஸார தேரர், இராமாண்ய பீடத்தின் மகாநாயக்கரான வண. வெவல்தெனிய மேதாலங்கார தேரர் ஆகியோரே தமது ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு இந்தச் செய்தியை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

ஜெனரல் பொன்சேகா கைதினால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி தொடர்பாக ஆராய்வதற்காக மகாசங்கத்தினர் அனைவரையும் எதிர்வரும் வியாழனன்று கண்டியில் கூடுமாறும் அவர்கள் அழைத்திருக்கின்றனர்.

அந்தக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு அரசுத் தலைமை உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் தவறுமானால் அந்தக் கூட்டத்தில் மகாசங்கத்தினர் கடுமையான முடிவை - அரசுக்கு நெருக்கடியைத் தரும் தீர்மானத்தை - எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவர் என்று பௌத்த மதபீடங்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

''கடந்த முப்பது வருடம் பிரிவினை யுத்தத்தின் போது நாட்டுக்காகத் துணிச்சலுடன் போராடியவர் ஜெனரல் பொன்சேகா. இந்த யத்தத்தில் அரசுக்கு எதிரான தரப்பில் நின்று போர் புரிந்த விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) போன்றோரை அரசினால் ஏற்றுக்கொண்டு அமைச்சர் பதவி மற்றும் முதலமைச்சர் பதவி போன்றவற்றை அவர்களுக்கு வழங்க முடியுமானால், அதே அரசினால் ஜெனரல் பொன்சேகாவையும் விடுதலை செய்கின்றமை அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.'' - என்று சுட்டிக்காட்டியிருக்கின்றனர் பௌத்த மதத் தலைவர்கள்.

வெறும் கடும் தொனியிலான செய்தியுடன் அமையாமல், அதற்கு அப்பாலும் தொடர் நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கத்துடனேயே நான்கு மகாநாயக்கர்களும் மகாசங்கத்தினரின் உயர்மட்டக் கூட்டத்தை ஒன்றுபட்டுக் கூட்டியிருக்கின்றார்கள் என்பது தெளிவு.

பொதுத் தேர்தலை ஒட்டிப் பிளவுபட்டுக் கிடக்கும் எதிர்க்கட்சியினரை அவர்களின் பொதுவேட்பாளரான பொன்சேகாவின் கைது இன்னும் சிதறிச் சின்னாபின்னமாகிப் பிளவுபட வைக்கும் என அரசுத் தலைமை மனக்கோட்டை கட்டியிருக்கக்கூடும்.

ஆனால் வழமையாகத் தனித்தனியாகத் தமது காரியங்களைப் பார்க்கும் பௌத்த மதபீடத்தை, இந்தக் கைதும், அதையொட்டிக் கட்டவிழ்ந்த சம்பவங்களும் ஒன்றுபட்டு - ஐக்கியப்பட்டு - சிந்திக்கவும் அரசுக்கு எதிரான தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆராயவும் கூடத் தூண்டிவிட்டிருக்கின்றன என்பது புதிய - கவனிக்கத்தக்க - அம்சமாகும்.

பொன்சேகா கைதை ஒட்டித் தென்னிலங்கையில் எழுந்துள்ள உணர்வலைகளை நோக்கும்போது, அரசுக்கு இந்த விவகாரம் 'பிள்ளையார் பிடிக்கப் போய் வேறு ஏதோவொன்று ஆன' கதையாகிப் போய் முடியுமோ என்ற சந்தேகம் வெளிப்படையாகவே எழுகின்றது.

# கைதுசெய்யப்பட்ட ஜெனரல் சரத் இழுத்துச் செல்லப்பட்ட விதம்....!

**நேற்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனத்தில் இருந்து ஒரு பகுதி இங்கு.**

கடந்தவாரம் திங்கட்கிழமையன்று உயர் இராணுவ பொலிஸ் குழுவைச் சேர்ந்த சிலர் இரகசியப் பயிற்சியொன்றில் ஈடுபட்டிருந்தார்கள். நாரஹேன்பிட்டியிலுள்ள அவர்களின் தலைமை நிலையத்தில் இந்தப் பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் எழுப்பிய கேள்விகளையும் அவைகளுக்குக் கிடைத்த விடைகளையும் கவனித்தால் அவர்கள் மிக நுணுக்கமானதொரு பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது தெரிந்தது. சம்பந்தப்பட்ட ஒரு நபரை எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் வைப்பது-அவர் நின்றிருக்கையில் அல்லது அமர்ந்திருக்கையில் - என்பதுவும்கூட இந்தப் பயிற்சியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அன்று இரவு 9 மணிக்குப் பிறகு பிரிகேடியர் விஜயசிறியும் அவரது ஆள்களும் புறப்பட்டார்கள். கொழும்பு நடவடிக்கைப் பிரிவைச் சேர்ந்த 200 ஆயுதம் தரித்த படையினரும் அவருடன் இணைந்து சென்றார்கள்.

இவர்களுக்கு மேஜர் ஜெனரல் சுமித மனவாடுகே தலைமை வகித்தார். குற்றவியல் புலனாய்வுப் பகுதியைச் சேர்ந்த ஒரு குழுவும் அவர்களுக்கு அனுசரணை வழங்க இருந்தது. படையினர் பரவலாக நின்று றோயல் கல்லூரிக்கு நேர் எதிரிலிருக்கும் ராஜகிரிய மாவத்தைக்குச் செல்லும் வழிகளைத் தடை செய்துவிட்டார்கள். இவ்வாறு நிலை எடுத்து நின்ற இராணுவத்தினருக்குப் பின்னால் மூன்று பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்த; அப்பகுதிக்குள் எவரும் உடைத்துக்கொண்டு நுழைவதைத் தடுப்பதற்காக. இந்த மூன்று இராணுவ அதிகாரிகளும் இராணுவப் பொலிஸாரும் குறித்த இரண்டு மாடிக்கட்டடத்தின் வளவுக்குள் பிரவேசித்தார்கள். அதுதான் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் காரியாலயமாக ஜனவரி 26ஆம் திகதியிலிருந்து செயற்பட்டு வந்தது.

இருந்தாலும் அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் அதே இடத்தைக் காரியாலயமாகப் பயன்படுத்த அவர் தீர்மானித்திருந்தார்.

வாயிலில் அவர்கள் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சில அதிகாரிகளை எதிர்கொண்டார்கள். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றும் தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியவர்களின் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரிகளாவர். அவர்களில் இருவர் அவசரமாகப் படிகளில் ஏறி மேலே செல்ல முனைவதைப் புலனாய்வு அதிகாரிகள் கண்டுவிட்டனர். அங்கு அழையா விருந்தாளிகளாக வந்திருக்கும் இராணுவத்தினர் பற்றி எச்சரிக்கை செய்யவே அவர்கள் அவசரப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் ஒரு மூலையில் ஒன்றாக நிறுத்தப்பட்டனர்.

அவர்களின் ஆயுதங்கள் களையப்பெற்றன. இராணுவப் பொலிஸார் மேல் மாடிக்குச் செல்லும்போது அங்கு ஆயுதம் தரித்தவர்கள் எவரும் இல்லாதபடி செய்யப்பட்டது. ஒளிப்பதிவுக் கருவி செயல் இழக்கச் செய்யப்பட்டு பதிவு செய்யும் கருவி கைப்பற்றப்பட்டது.

மேல்மாடியில் பணிபுரியும் அறையில் ஜெனரல் சரத்பொன்சேகா இருந்தார். ஜனதா விமுக்தி பெரமுனைத் தலைவர் சோமவன்ச அமரசிங்க, அவரது கட்சியைச் சேர்ந்த சுனில் ஹந்துன்நெத்தி, ஹக்கீம் மற்றும் மனோகணேசன் ஆகிய வர்களுடன் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக அவர் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார்.

அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப்படக்கூடிய அரசியல் கட்சிகள் பற்றிய உரையாடலில் அவர்கள் ஈடுபட்டிருந்த போதிலும், முற்றிலும் வேறுபாடான காட்சியொன்றுக்கு வழிகோலும் நடவடிக்கைகள் வெளியில் நடந்துகொண்டிருந்ததை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

பிரிகேடியர் விஜேசிறியும் இராணுவப் பொலிஸாரும் உள்ளே நுழைந்தார்கள். அறையை விட்டு வெளியேறும்படி அந்த மூன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமரசிங்கவுக்கும் அவர் உத்தரவு பிறப்பித்தார். அவர்கள் மறுத்தார்கள். குற்றப் பத்திரிகையின் ஒரு பகுதியை அவர் வாசித்துக்காட்டினார். ஜெனரல் பொன்சேகாவும் அவரது தனிப்பட்ட செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் எஸ்.எச்.ஏ.(ரேகை) சில்வாவும் கைது செய்யப்படவிருக்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார். இந்தவேளையில் ஜெனரல் மனவாடுகே உள்ளே வந்தார்.

ஜெனரல் சரத் பொன்சேகா இரண்டு இராணுவ அதிகாரிகளோடு வாதிட்டுக் கொண்டிருப்பதை நான்கு அரசியல் வாதிகளும் கவனித்துக்கொண்டு இருந்தனர்.

ஓர் அறையில் போராட்டம் ஒன்று நடந்திருப்பதை அவதானித்துள்ளார்கள். சில ஜன்னல்கள் உடைக்கப்பட்டிருந்தன. கதிரைகளும் தேநீர் கோப்பைகளும் குப்புறப் புரட்டப்பட்டிருந்தன. சிற்றுண்டித் தட்டங்கள் சிதறிக் கிடந்தன. ஓர் அதிகாரியின் பெயர் பொறித்த அட்டை கிழிந்து தரையில் வீசப்பட்டுக் கிடந்துள்ளது. அந்த அறையை பொன்சேகாவின் உதவியாளர்கள் அப்படியே வைத்திருக்கிறார்கள். அங்கு என்ன நடந்தது என்பதை ஏனையவர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக.

ஆனால் அங்கே நிறுத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் ஊடகவியலாளர்களைப் பலவந்தமாகக் கட்டுப்படுத்தியதுடன் அவர்களின் கமராவிலிருந்த பதிவுகளையும் அப்புறப்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறுதான் இலங்கை இராணுவத்தில் 40 ஆண்டுகள் பணிபுரிந்தவரும் எட்டு மாதங்களுக்கு முன் பெரும்போர் வீரன் என்று போற்றப்பட்டவரும் உலகிலேயே திறமையான இராணுவத்தள பதி என்று பாராட்டப்பட்டவருமான ஒரு இராணுவ அதிகாரியானவர் தமது கட்டளைக்குக் கீழே சமீபகாலம் வரை பணியாற்றிய இராணுவக் குழுவொன்றினால் கைது செய்யப்பட்டார். உண்மையில் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இது ஒரு மிகவும் அவமானத்துக்குரிய சந்தர்ப்பமாகும்.

நேற்றையதினம் புகழ்பெற்றதோர் நாட்டுப்பற்றாளராக இருந்தவர் இன்று தேசத்துரோகியாகிவிட்டார்.

இது முன்னாள் இராணுவத் தளபதியான அவருக்கு கர்மபலனாக சம்பவித்திருக்கின்றது என்று கூறலாம். அவர் ஊடகவியலாளர்கள் உட்படப் பலரை முன்னர் துரோகிகள் என்று வர்ணித்திருக்கிறார்.

இந்த ''ஒபரேஷன் பொன்சேகா'' இராணுவ நடவடிக்கையானது ராஜகிரிய மாவத்தையில் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளை, குயீன்ஸ் வீதியில் ஜெனரல் பொன்சேகாவும் அவரது துணைவியர் அனோமாவும் வாடகைக்கு இருந்த வீட்டிலும் சி.ஐ.டி புலனாய்வாளர்கள் தமது தேடுதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தியுள்ளார்கள். ஓய்வுபெற்ற ஜெனரலிடமிருந்ததாகக் கருதப்படும் சேவைக் காலத்துக்குரிய றிவோல் வரை அவர்கள் தேடிக் கண்டுபிடித்து நள்ளிரவு ஆன பிறகும் அனோமாவின் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளார்கள்.

அனோமா இரகசியப் பொலிஸாருக்கு வாக்குமூலம் கொடுத்துக் கொண்டிருந்தபோது அந்த விடயம் கேள்விப்பட்டு மங்களசமரவீரவும் ரவிகருணாநாயக்கவும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். சமரவீர தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில்'', இடிஅமீனின் கூலிகளுக்கு வாக்குமூலம் கொடுப்பதை நிறுத்துங்கள்.'' என்று உரத்து கத்தியுள்ளார். அவ்வேளை உதவியாளர் ஒருவர் அருகில் வந்து அவரை வேறுபக்கம் அழைத்துச் சென்றுள்ளார்.

இதெல்லாம் நடந்த போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் இருந்தார். விஷயத்தை கருஜயசூரிய மூலம் கேள்வியுற்று ரணில் தமது விஜயத்தை பாதியில் நிறுத்திக் கொண்டு நாடு திரும்பினார்.

## "நான் சிவிலியன், இராணுவம் என்னைக் கைது செய்ய முடியாது" என்று வாதிட்டார்

தாம் ஒரு பொதுமகன் என்ற முறையில் தம்மை இராணுவத்தால் கைது செய்ய முடியாது என்று பொன்சேகா கூறினார். பொலிஸார்தான் அவ்வாறு செய்யலாம் என அவர் கூறினார். பொலிஸ் (புலனாய்வுத் துறையினர்) கீழ்மாடியில் இருக்கிறார்கள் என்று மேஜர் ஜெனரல் மானவகொட கூறினார்.

''ஐயா நான் கட்டளைகளை நிறைவேற்றுகின்றேன். தயவுசெய்து வாருங்கள்'' என்றார்.

**சூடான வார்த்தைப் பிரயோகங்கள்**

ஜெனரல் பொன்சேகா கோபமுற்று எதிர்த்தார். சூடான வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றன. அவைகளில் சில பிரசுரிக்கமுடியாதவை.

ஒரு குற்றப்பத்திரிகையை ஓர் அதிகாரி வாசிக்கத் தொடங்கினார். ஹக்கீம் கூற்றின்படி மேஜர் ஜெனரல் மனவாடுகே கூறினார். ''இங்கே அதையெல்லாம் வாசித்துக்கொண்டிருக்க நேரமில்லை. அவரைப் பிடித்துக்கொண்டு போங்கள்'' என்று.

பொன்சேகாவைத் தங்கள் பொறுப்பில் எடுக்கும்படி இராணுவப் பொலிஸார் உத்தரவிடப்பட்டனர்.

''என் உடம்பில் கை வைக்க வேண்டாம்'' ஜெனரல் பொன்சேகா சீறினார்.

விரைவிலேயே 59 வயதான முன்னாள் இராணுவத் தளபதியை இராணுவப் பொலிஸார் கைகளிலும் கால்களிலும் பிடித்துக் கீழ்மாடிக்குப் படிகள் வழியாகக் கொண்டு சென்று ஒரு வானில் ஏற்றினார்கள். அவரது அந்தரங்க செயலாளர் சில்வாவும் கைது செய்யப்பட்டு கை விலங்கிடப்பட்டார். தாம் ஒரு சிவிலியன் என்றும் தன்னை இராணுவத்தினர் கைது செய்யமுடியாது என்றும் அவர் கூறினார். ஆனால் பயனேற்படவில்லை.

மனோகணேசனைப் பொறுமையாக இருக்கும்படி ஹக்கீமும் அமரசிங்கவும் கேட்டுக்கொண்டதாகத் தெரிகின்றது.

உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சத்தியக்கடதாசி ஒன்றின்படி கட்டடத்துக்குள் வைத்து அரசியல் வாதிகள் நால்வரும் பூட்டப்பட்டிருந்தனர் என்று ஹக்கீம் கூறியுள்ளார். நிலத்தில் போட்டு பொன்சேகா இழுத்துச் செல்லப்பட்டமையைத் தாங்கள் பார்த்தார்கள் என்று பணியாளர்கள் கூறியிருக்கிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## போராட்டம் நடந்ததற்கான அறிகுறிகள் அவர் இருந்த அறையில் உள்ளன

இராணுவப் பாதுகாப்புடன் வான் புறப்பட்டுச் சென்றது. காரியாலய அறைகள் யாவும் இராணுவப் பொலிஸாரால் துருவித் துருவி சோதனையிடப்பட்டன.

அது முடிந்தவுடன் தாங்கள் சுமார் 45 நிமிடங்கள் வரை உள்ளே வைத்துப் பூட்டப்பட்டிருப்பதை நான்கு அரசியல் வாதிகளும் உணர்ந்தார்கள். வெளியில் கேற்றுகளும்வந்தவர்களால் பூட்டப்பட்டிருந்தன.

**போராட்டம் நடந்த அறிகுறி**

அவர்கள் தமது கைத் தொலைபேசிகளில் ஊடகங்களுடன் தொடர்பு கொண்டு அறிவித்தார்கள்.

ஊடகத்தினர் வந்து சேர்ந்தபோது

ஜெனரல் பொன்சேகா கைது தொடர்பாக எதிர்க்கட்சிகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசின் நடவடிக்கையைக் கடுமையாக விமர்சித்துக் கண்டித்துள்ளன. இது வேண்டுமென்றே செய்யப்பட்ட அரசியல் பழிவாங்கல். முன்னாள் ஜெனரல் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கேட்டிருந்தனர்

சட்டவிரோதமாக ஜெனரல் கைது செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அவர் காவலில் இருந்து தப்ப முயன்றார் அல்லது தாக்குதல் நடத்த முயன்றார் என்பதாகச் சோடிக்கப்பட்ட குற்றச் சாட்டில் படுகொலை செய்யப்படலாம் என்பதற்குத் தங்களிடம் போதிய காரணங்கள் உள்ளன என்றும் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி 04 | 16.02.2010 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | துதியை |
| | பி.ப. 12.20 வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | மு.இ. 11.47 வரை |
| சுபநேரம்: | 11.03-12.33 வரை |
| ராகுகாலம்: | 03.33-05.03 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## விசுவலிங்கம் நாகரத்தினம் (வேவி)

(வல்லை வீதி; சங்கானை)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், தற்போது டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் நாகரத்தினம் (வேவி) 13.02.2010 சனிக்கிழமை டென்மார் க்கில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், விஜயகுமாரி (திருகோணமலை), சந்திரகுமாரன் (இந்தியா), ஜீவகுமாரன் (டென்மார்க்), திலககுமாரி (சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயா வெதுப்பகம்,
வல்லை வீதி,
சங்கானை.

(94872)

தகவல்:
மு.ஜெயச்சந்திரன்
(மருமகன்).

## சின்னையா தம்பியையா

(இளைப்பாறிய ஆசிரியர், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்)



துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தம்பியையா 12.02.2010 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-இளையபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கோப்பாய் மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி S.V.சின்னப்பா தம்பதிகளின் மருமகனும், றோசலின் இராசமலரின் (இளைப்பாறிய ஆசிரியை, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) அன்புக் கணவரும், தேவநேசன் (UK), திருமதி மீரா நிமல்ராஜ் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமினி தேவநேசன் (UK), பேட்ரணட் நிமல்ராஜ் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், றேச்சல், ஏரன், றூத், நயோமி (UK), ஜெரமி தேவறூபன் (மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி), கிறிஸ்ரீனா, தேவறூபி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற தெய்வானை மற்றும் மயில்வாகனம், காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் சரஸ்வதி, ஆனந்தராஜா, காலஞ்சென்றவர்களான Rev.A.C.துரைராஜா, A.C.செல்வராஜா, A.C.ஜெயராஜா, A.C.முத்துராஜா, A.C.கனகராஜா மற்றும் திருமதி கிறேஸ் சற்குணசிங்கம், திருமதி மேசி இராஜநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.02.2010) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரி.கன்னிமரியாள் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
தொ.பே: 0776304951

தகவல்:
நிமல்ராஜ்.(மருமகன்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி)

## நடேசு வள்ளியம்மை



அம்பனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு வள்ளியம்மை நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசுவின் பாசமிகு மனைவியும் கனகரத்தினம், அமரர் அரசரத்தினம், விஜயரத்தினம் (ஜேர்மனி), கோகுலரத்தினம், குபேந்திரரத்தினம் (லண்டன்), நற்குணரத்தினம் (ஜேர்மனி), புஸ்பரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, சாரதாதேவி, விஜயகுமாரி (ஜேர்மனி), சின்னையா, வற்சலா தேவி (ஜேர்மனி), சுந்தரேஸ்வரன் (லண்டன்), நவரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரபாகரன் (ஆசிரியர்-அம்பன்), ஜெயாநிதி, கருணாகரன், சிவாகரன், சதீஸ், சுவிதா (ஜேர்மனி), புருசோத்தமன், கஞ்சுகன் (வவுனியா வளாகம்), வினோஜா, கிருபாரத்தினம், துஷ்யந்தி (ஜேர்மனி), ஜேக்குமார், சசிகலா (ஜேர்மனி), சிவபாலசிறி, சிறிகலா (அமெரிக்கா), திருக்குமார், திவ்யா (லண்டன்), திருவதனி (யாழ். பல்கலைக்கழகம்), சிவாகரன் (லண்டன்), மாருஷன் (ஜேர்மனி), ராகுலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரியந்தன், பிரியாழினி, பிரவீன் (ஜேர்மனி), தர்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக அம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பன்.

(92153)

தகவல்:
குடும்பத்தினர்.

# 'காஸ் சிலிண்டர்' வெடித்து காயமுற்ற பெண் மரணமானார்

யாழ்ப்பாணம், பெப்.15

'காஸ் சிலிண்டர்' வெடித்துப்படுகாயமடைந்த வயோதிபப் பெண் நேற்று மரணமானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சமையல் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மேற்படி வயோதிபப்பெண் காஸ் சிலிண்டர் வெடித்ததில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவசரமாக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

மரணமானவர் ஓய்வு பெற்ற ஆசிரியை ஆவார். செல்வி விநாசித்தம்பி சாவித்திரி தேவி (வயது 65) என்ற இவர் யாழ்.நகர் பிறவுண் வீதி இரண்டாம் ஒழுங்கையில் வசித்து வந்தார். (ஒ-16)

# பாதாளக்கிணற்றில் மோ.சைக்கிள் ஓட்டம்

சங்கானை, பெப்.15

சங்கானை, பஸ் நிலைத்திற்கு அருகில் தென்னிலங்கையில் இருந்து வந்துள்ள குழுவினர் பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று சில்லுச் சைக்கிள் ஓட்ட நிகழ்ச்சியை நடத்திவருகின்றனர்.

இந்த நிகழ்ச்சியை சிறுவர் முதல் பெரியோர் வரை திரண்டு வந்து ஆர்வத்துடன் பார்த்து ரசித்து வருகின்றனர். (ஒ-29)

# ஆயுள்வேத கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.15

சுதேச ஆயுள்வேத கண்காட்சி எதிர்வரும் 27,28, மார்ச் 1 ஆகிய திகதிகளில் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

ஆயுள்வேதத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இக் கண்காட்சியில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளைப் பங்குபற்றுமாறு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.15

சாவகச்சேரி மகளிர் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப 1.30மணிக்கு கல் லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தன் கலந்து கொள்வார். (ஒ-207)

* * *

யாழ்ப்பாணம், பெப்.15

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஸ்ணனும் சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான ஐ.புவனேந்திரன், அ.ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-16)

* * *

யாழ்ப்பாணம், பெப்.15

வட்டு.கார்த்திகேய வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு ''சுப்பர் ஸ்ரார்'' விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக்கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசுவும், சிறப்பு விருந்தினர்களாக வட்டு. தெற்கு கிராம உத்தியோகத்தர் செ.சிவபாலன் மற்றும் ஈ.பி.டி.பியின் வலி.மேற்குப் [illegible] ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-16)


# வேலைக்கு ஆள்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் பிரபல வர்த்தக நிறுவனத்தின் யாழ்.கிளைக்கு பின்வரும் வேலைக்கு ஆள்கள் தேவை.

01. முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள்
02. காவலாளி/சுத்திகரிப்பாளி (ஆண்)
03. கணக்காளரும் அலுவலக உதவியாளரும் (இருபாலாரும்)

தகுந்த ஆவணங்களுடன் 17.02.2010 அன்று மு.ப. 10.30 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

56, மணிக்கூட்டு வீதி, (பொருளியற் கல்லூரிக்கு அருகிலுள்ள வீதி), யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0776647976, 0770641273

(C/564896)


# இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 14 ★ 11 ★ 1946

உதிர்வு 09 ★ 03 ★ 2008



## அமரர் கந்தையா கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர் (பளை), சமாதான நீதிவான், கலைஞானகேசரி, ஸ்ரீரங்ககானசபா இயக்குநர்)

அன்பெனும் மலர் தூவி ஆசை மொழி பல பேசி
எம் இதயங்களில் குடி கொண்ட குல விளக்கே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் இதயம்.

**இன்று (15.02.2010) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:*
தம்பகாமம், பளை.
*தற்காலிக முகவரி:*
26/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(94864)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி கந்தையா தையலம்மா

கேணியடி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா தையலம்மா நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(94865)

தகவல்:
N.தனபாலசிங்கம்
(மருமகன்).

## செல்வத்துரை செல்வேந்திரன்

(அன்ரப்பா லக்சுமி உணவக உரிமையாளர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை செல்வேந்திரன் நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், லீலாவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், செல்வராசா மற்றும் செல்வநாயகம் (சுன்னாகம் ப.நோ.கூ.ச.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோகரன் (Engineer, USA), சுசீந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ.ச.), உமாகரன், கவிதா (ஆசிரியை), குணலஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீஸ்வரனின் (இந்து சமய அபிவிருத்தி உதவியாளர்) அன்பு மாமனாரும், கர்ணிகாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம்-கமலாதேவி, பாக்கியவதி மற்றும் இராசலிங்கம்- மீனாட்சி, இலகுநாதன்- மங்கையர்க்கரசி, தர்மலிங்கம்- புஸ்பராணி, வைத்தீஸ்வரன், நித்தியானந்தம் - இந்திராதேவி, விவேகா னந்தன்-வரதராணி, பாலசோதி- மகேஸ்வரி, கந்தசாமி, திரவியமலர், சண்முகமலர் ஆகியோரின் மைத்துனரும், ரதிராணி, விக்னேஸ்வரன், ஜெயகாந்தன், சர்மிளா, கஸ்தூரி, மதுரா, கரிகாலன், ராமகீர்த்தன், ராம்பேகன், செல்வக்குமார், சிவனேஸ்வரன், மகேஸ்வரன், விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரி, மகேஸ்வரி, சர்வானந்தன், சண்முகேஸ்வரன், கெங்கேஸ்வரன், தமிழ்ச் செல்வன், தமிழரசி, தமிழ்ச்செல்வி, தமிழ்வாணி, தமிழரசன், தமிழ்வாணன், வேந்தன், வாசன், சிவா, குமார், காருண்யா, லாவண்யா, டிவாகரன், நிவேதினி, வியாசன், மதுரன், தனுசா, விதுரன், அபிநயா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(94874)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.08.1988

* நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஜே.வி.பி சந்தேக நபர்களான கைதிகளுக்கும் சாதாரண கைதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு கைதிகள் கொலை. 17 கைதிகள் படுகாயம்.
* இந்திய-இலங்கை ஒப்பந்தம் சரிவர அமுல் செய்யப்பட்ட பின்னரே இந்திய அமைதிப் படை இலங்கையிலிருந்து வெளியேற வேண்டுமென மேற்கு மாகாண அமைச்சர் செல்லச்சாமி இந்தியாவில் வைத்து தெரிவிப்பு.

02.08.1988

* வன்செயல் காரணமாகக் கடமை நேரத்தில் ஊனமுற்ற, காயமுற்ற அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் பலவித நிதிக் கொடுப்பனவுகளை வழங்க அரசு முடிவு.
* வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தும் திகதி குறித்து அரசு இவ்வாரம் தீர்மானிக்கும் என கொழும்பு அரசு வட்டாரங்கள் தகவல்.
* நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலையே நடத்துவதெனவும், அதில் மூன்றாவது தடவையாக ஜே.ஆர் போட்டியிட மாட்டாரெனா அரசு உயர்வட்டாரங்கள் தகவல்.

03.08.1988

* வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலைச் சுமுகமாக நடத்த இயலுமா என்பது குறித்து இரகசிய மதிப்பீடு ஒன்றைச் செய்வதில் அரசு ஈடுபட்டுள்ளதாக அரசியல்வட்டாரங்கள் தகவல்.
* சோவியத் யூனியனில் செய்யப்பட்டதாக நம்பப்படும் ஏவுகணையொன்றை நல்லூரில் இந்திய அமைத்திப்படையினர் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிப்பு.
* இலங்கை கூட்டுப் படைகளின் தளபதிப்பதிவியிலிருந்து சிறில் ரணதுங்க ஓய்வு பெற்றார்.

04.08.1988

* இந்திய அமைதிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான தகராறு விரைவில் முடிந்துவிடும் எனவும், வடக்கு, கிழக்கில் இந்திய இராணுவத்தினர் விரைவில் அமைதியை நிலை நாட்டுவர் எனவும் ஜனாதிபதி ஜே.ஆர். நம்பிக்கை தெரிவிப்பு.
* திருகோணமலை கோணேசர் ஆலயம் கடந்த மாத கடைசி வாரத்திலிருந்து பூட்டப்பட்ட நிலையில் உள்ளது.
* இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று எதிரிகளில் ஒருவர் புதுடில்லி சுப்ரீம் கோட்டால் விடுவிப்பு.

05.08.1988

* பூஸா தடுப்பு முகாமிலுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்யக்கோரி அடுத்த வாரத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதிக்கு அறிவிப்பு.
* தமிழீழ விடுதலைப்புலிகளுடன்பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசு புதிதாக முயற்சி எதையும் மேற்கொள்ளுமா என்பதை பொறுத்திருந்து பார்க்குமாறு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.

06.08.1988

* ஈழப்பிரச்சினைக்கு மத்திய அரசு விரைவில் தீர்வு காணாவிட்டால் மாபெரும் போராட்டமொன்றை நடத்தப்போவதாக தி.மு.க தலைவர் கருணாநிதி எச்சரிக்கை.
* விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் இந்திய அரசு நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த வேண்டுமென புளொட் அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன் தெரிவிப்பு.
* ஜே.வி.பியின் இராணுவப்பிரிவு ஏராளமான ஆயுதங்களைச் சேகரித்து வைத்துள்ளதாக இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு.

07.08.1988

* இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள், இலங்கை திரும்பித் தமது கல்வியைத் தொடர இலங்கை அரசு சில சலுகைகள் வழங்க இணக்கம்.
* இலங்கையிலிருந்து அமைதிப்படை வெளியேறுவது அங்குள்ள தமிழருக்கு விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தமிழகத்தில் வைத்து தெரிவிப்பு.
* நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் இந்திய அமைதிப்படையினரின் பாதுகாப்புடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணிகள் ரயில் வருகை.

08.08.1988

* யாழ்ப்பாணம் பொலிஸ்அத்தியட்சகர் பொ.இராஜேஸ்வரன் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை.
* இலங்கைப்பிரச்சினை குறித்து புதிதாக உருவாக்கப்பட்ட இந்திய எதிர்கட்சிகளின் தேசிய முன்னணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தநிறுத்தமொன்றை மேற்கொண்டு விடுதலைப்புலிகளுடனும் ஏனைய அமைப்புக்களுடனும் பேச்சுக்களை மேற்கொள்ளுமாறு மத்திய அரசுக்கு வலியுறுத்து.
* இந்திய அமைதி காக்கும் படையினருடான கடந்த 10மாத காலப் போரில் தமது தரப்பில் 299 போராளிகள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவிப்பு.

09.08.1988

* தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 154 போராளிகள் தமிழ்நாடு அரசால் கைது.
* ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு செல்வாக்கு மிக்க ஐ.தே.கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி ஜே.ஆருக்கு நெருக்குதல்.

10.08.1988

* ஈழத்தமிழர் பிரச்சிரனைக்குத் தீர்வுகாண உதவக்கோரி அமெரிக்க ஜனாதிபதி ரேகனின் மாளிகை முன்னால் இந்திய திராவிடர் கழகச் செயலாளர் வீரமணி தலைமையில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்.
* வவுனியாவில் இயங்கும் சகல வங்கிக் கிளைகளையும் மறுஅறிவித்தல் கிடைக்கும் வரைமூடும்படி இந்திப்படையினர் உத்தரவு.

11.08.1988

* இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியாபுதியமுயற்சிகளைமேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் தொண்டமான் சென்னையில் வைத்துத் தெரிவிப்பு.
* நான்கு அம்ச நிபந்தனைகளை முன்வைத்து சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கு இந்தியா தயாரா என விடுதலைப்புலிகள் இந்திய அரசிடம் கேள்வி.
* தென்னிலங்கைச் சிறைகளிலும் முகாம்களிலும் உள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காகப் பொதுமக்கள் குரல் எழுப்ப வேண்டும் என வண.பிதா சிங்கராயர் தெரிவிப்பு.

12.08.1988

* இனப்பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் உரிய வகையில் அமுல் செய்யப்படாததால் 'சார்க்' உச்சி மாநாட்டைக் கொழும்பில் நடத்தாது வேறொரு நாட்டில் நடத்துமாறு சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் கோரிக்கை.
* இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான ஓராண்டு நிறைவு நாளன்று ஈழத்தமிழர் மீதான அடக்குமுறையைக் கண்டித்து பிரான்ஸ் வாழ் ஈழத்தமிழர்கள் பாரிஸ் நகரில் அமைதிப்பேரணி.

13.08.1988

* நிதியமைச்சர் றொனி டி மெல் ஐ.தே.கட்சியிலிருந்து ராஜினாமா. தாம் சுதந்திரக் கட்சியில் இணைந்துகொள்ளப் போவதாக அவர் தெரிவிப்பு.
* இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பிச் செல்ல இந்திய அரசு காலக்கெடு எதனையும் விதிக்கவில்லை என இணை அமைச்சர் நட்வர்சிங் தெரிவிப்பு.

14.08.1988

* மாங்குளம் பகுதியில் ரயில் பாதையில் குண்டுவெடித்ததால் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஏழு இந்திய அமைதிப்படை வீரர்கள் உயிரிழப்பு.
* சுதந்திரமான பொதுத் தேர்தலொன்று நடத்தும்படி கோரி வீதியில் இறங்கிப் போராடப் போவதாக முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தெரிவிப்பு.
* திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்கப் போவதாக அக்கட்சியின்தலைவர் கருணாநிதிதெரிவிப்பு.

15.08.1988

* ஜே.ஆர் போட்டியிடாதபட்சத்தில் பிரதமர் பிரேமதாசவுக்கே ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் கிட்ட அதிக வாய்ப்புள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் ஆரூடம்.
* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தபாலகங்களில் பார்சல்களை ஏற்றுக் கொள்வதற்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்தும் நீடிக்கப்படும் எனத் தெரிவிப்பு.
* ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவிப்பு.

# கனேடியத் தூதரகத்தின் கிளை அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறக்குமாறு கோரிக்கை

## தூதுவரிடம் யாழ். வணிகர் கழகம் விடுத்தது

யாழ்ப்பாணம், பெப்.15

கனேடியத் தூதரகத்தின் கிளை அலுவலகம் ஒன்றை யாழ். மாவட்டத்தில் நிறுவுமாறு யாழ்ப்பாண வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் யாழ். வந்த கனேடியத் தூதருடனான சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்த சூழ்நிலையால் புலம் பெயர்ந்து சென்று கனடாவில் வசிக்கும் அதிகளவான தமிழர்களில் 75 சதவீதமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். எனவே இவர்கள் தமது உறவுகளுடனான தொடர்புகளை மேம்படுத்திக் கொள்வதற்கும், கனடாவுக்கான விசாக்களைப் பெறுவதற்கு கொழும்புக்குச் செல்ல வேண்டிய தேவை இருப்பதாலும் யாழ்ப்பாணத்தில் இந்தத் தூதரகத்தின் கிளை அலுவலகம் திறப்பது பெரிதும் உதவியாக இருக்கும் என வணிகர் கழகம் கோரியுள்ளது.

அத்துடன், எமது மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களையும் கனேடியத் தூதரகம் வழங்க வேண்டும் என இந்தக் கலந்துரையாடலின் போது கோரப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் எஸ். ஜனக்குமார் கருத்துத் தெரிவிக்கையில்:

எமது மக்களுக்கான எல்லாவகையான தேவைகளையும் யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்யக் கூடிய வசதி வாய்ப்புக்களை யாழ். நகரில் ஏற்படுத்தி தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிமாவட்டங்களை மக்கள் நாடுவதைக் குறைப்பதே எமது நோக்கம்- என்றார். (50-16)

## மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள

# வலி.வடக்கின் பாடசாலைகள் மீண்டும் இயங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.15

அதி உயர் பாதுகாப்பு வலயமான வலி. வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள ஆறு பாடசாலைகளை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீமன்காமம் மகா வித்தியாலயம், கொல்லன் கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம், வலித் தூண்டல் றோ.க.பாடசாலை, மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை, மாவிட்டபுரம் அ.மி.த.க. பாடசாலை ஆகியனவே மீள ஆரம்பிக்கப்பட வுள்ளன.

இந்தப் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து, அவற்றை புனரமைத்துத் தருமாறு வலிகாமம் கல்வி வலயத்தினர் வலி.வடக்கு பிரதேச செயலர் ஊடாக யாழ்.அரச அதிபரைக் கோரியுள்ளனர்.

இந்தப் பாடசாலைகளை புனரமைக்க சர்வதேச உதவி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவுமாறு அக் கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு முதல் இந்தப் பாடசாலைகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-1)

# கிராமச்சூழலை தன்னகத்தே கொண்டிருந்த போதும் சாதனைகளால் மிளிரும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

## நிக்கொட் பணிப்பாளர் புகழாரம்

கிராமச்சூழலை தன்னகத்தே கொண்டு சிறிய பாடசாலையாக இருந்தும் சகல துறைகளிலும் சாதனைகளைப் படைத்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிஇன்று முன்னணிப் பாடசாலையாக மிளிர்ந்து கொண்டிருக் கிறது.

''நிக்கொட்'' நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயற்றிட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன் இவ்வாறு தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி கடந்த சனிக்கிழமை கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்ற போது அந்நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாடசாலைகளில் வருடந்தோறும் இல்ல மெய்வன்மைப் போட்டிகளை நடத்துவதென்பது மாணவர்களை மாகாண, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு தயார்படுத்துவதற்காக மட்டுமல்ல. மாணவர்களிடத்தில் புரிந்துணர்வினை ஏற்படுத்தும் வகையில், ஆசிரியர்களிடம் உள்ள உறவினை வளப்படுத்துவதுமே இதன் முக்கிய நோக்கமாகும். இன்று இந்தக்கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் யாவும் விறு விறுப்பாகவும், நேர்த்தியானமுறையிலும் நடைபெற்றிருக்கிறது.

அத்துடன் இந்தக்கல்லூரியின்அதிபரின் அலுவலகத்தைப் பார்த்தபோது இங்கு நல்லதொரு தலைமைத்துவம் மிக்கநிர்வாகக் கட்டமைப்பு உள்ளது என்பதை உணர முடிகின்றது.

''நிக்கொட்'' நிறுவனம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பலமில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளது. இந்தக்கல்லூரியின் வளாகத்தில் கட்டடம் ஒன்று அரைகுறையாக கட்டப்பட்டு அதன்பணிகள் நிறைவு பெறாமல் உள்ளது. அந்தக் கட்டடத்தின் மிகுதிப்பணிகளை ''நிக்கொட்'' நிறுவனத்தின் நிதியுதவியுடன் புதிய ஆண்டுத்திட்டத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுப்பேன்-என்றார்.

நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி தனதுரையில் தெரிவித்தவை வருமாறு:

சண்டிலிப்பாய்கல்விக் கோட்டத்தில் அதிசிறந்த பாடசாலையாக இந்துக்கல்லூரி மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் மகத்தான சாதனைகளைப் பெற்று எமது கல்விக் கோட்டத்திற்கு பெருமை சேர்க்கும் ஒரு கல்லூரியாக இதுவிளங்குகின்றது-என்றார்.

கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தனதுரையில் தெரிவித்தவை வருமாறு:

எமது கல்லூரியின் வரலாற்றுச் சாதனைகளுக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் தமது பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளார்கள். எமதுகல்லூரியின் சாதனைகள் மென்மேலும் அதிகரிக்க அனைவரும் தமது முழுமையான பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்க வேண்டும் -என்றார்.

நிகழ்வில் ''நிக்கொட்'' நிறுவத்தின் செயற்றிட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபனின் பாரியார் திருமதி சி.அபிராமி வெற்றியாளர்களுக்குரிய பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். கல்லூரியின் பிரதி அதிபர் இ.ஆனந்தநடராஜா நன்றியுரையினை நிகழ்தினார். (04-9)

# கழிவுகளின் இருப்பிடமாகமாறி துர்நாற்றம் வீசத்தொடங்கும் செம்மணி இந்துமயானம்



கைதடி.பெப்.15

செம்மணி இந்து மயானம் பல்வேறு கழிவுகள் வீசப்படும் இடமாக அண்மைக் காலமாக மாறிவருவதாக அப்பகுதியால் செல்லும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மயான வளவில் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவு களும் மற்றும் இறந்துபோன நாய் போன்ற மிருகங்களின் உடல்களும் வீசப்படுவதால் இவற் றிலிருந்து கிளம்பும் துர்நாற்றம் காரணமாக அவ்வீதியால் செல்லும் பொதுமக்கள் மூக்கினைப் பொத்தியவாறே பயணம் செய்வதனைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் பூண்டுகளும் வளர்ந்து மயானத்தின் தோற்றத்தை கோரமாக் காட்டு வதாகவும் கூறப்படுகின்றன.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து இந்தக் குறைபாடுகளை நீக்கி மயானத்தைச் சீர்படுத்த வேண்டும் எனப் பலராலும் வேண்கோள் விடுக்கப்பட்டுள்ளது. (ரி-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாண்வரும் பழைய மாணவர் சங்க உப தலைவருமான பேராசிரியர்

**க.தேவராஜா**

அவர்கள் பேராசிரியராகப் பதவி உயர்வு கிடைத்தமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைக் குடும்பம்
யா/தாவடி இ.த.க.பாடசாலை.

(94765)

# இதய அஞ்சலி



அண்மையில் அமரத்துவமடைந்த எமது கல்லூரி ஆசிரியை திருமதி ம.லோகேஸ்வரசர்மா அவர்களின் தந்தையாரும் வயலின் இசை ஆசிரியரும் சிவாச்சாரியாருமான

**அமரர் வேதக்குட்டிக் குருக்கள் தியாகராஜசர்மா**

அவர்களின் ஆத்மா விண்ணுலக வாழ்வில் இறைசாந்தி அடைவதற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(சி/564885)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் தில்லையம்பலம் மயில்வாகனம்**

ஜனனம்: 20.04.1921
மரணம்: 16.01.2010

அன்புத் தெய்வமே! ஆலமரமாய் என்றென்றும் நீங்களிருந்து வழிகாட்டும் வாழ்க்கையில் விழுதுகளாய் நாங்கள் என்றும் உங்கள் நினைவுகளுடன்....

16.01.2010 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் எமது துயரில் பங்கு கொண்டோருக்கும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் 31 ஆம் நாள் நினைவஞ்சலி கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

சன்னதி றோட், தம்பாலை,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## ஆயுள் வேத வைத்தியசாலை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

கைதடி,பெப்.15

கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் கடந்த பல வருடங்களாக தற்காலிகத் தொழிலாளர்களாகப் பணி புரிந்த ஒன்பது பேருக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனக் கடிதங்களை மகரகமவில் உள்ள சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்து இம்மாதம் எட்டாம் திகதி சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வழங்கினார்.

(50-288)

## இலகு வேலைத் திட்டத்தில் வீதி புனரமைப்பு

கைதடி,பெப்.15

உலக உணவு இலகு வேலைத் திட்டத்தின் கீழ் உரும்பிராய் கிழக்கு கரந்தன் வீதியின் முதலாம் ஒழுங்கை தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

உரும்பிராய் கிழக்கு சென் மைக்கேல்சனசமூகநிலையத்தினர் அப்பகுதி மக்களின் பங்களிப்புடன் மேற்படி வீதியை செப்பனிட்டு வருகின்றனர். இவ்வீதி பல காலமாக திருத்தப்படாமல் இருந்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(50-288)

**காணி விற்பனைக்கு**

முதலி கோயிலடி, கொக்குவில்மேற்கில் (K.K.S.வீதியிலிருந்து 50M தூரத்தில்) 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776366308, 0779522027 (94859)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
01 . 11 . 1955

உதிர்வு
27 . 02 . 2009

**அமரர் செல்லையா ஜெயானந்தம் (ஜெயம்)**

திதி: பூர்வ துதியை (15.02.2010)

அன்புத் தெய்வமாய் அவனியிலே வலம் வந்தீர்
என்றும் எங்களுடன் இணைந்தே வாழ்ந்திருந்தீர்
துன்பம் எமை வாட்டத் தூரதேசம் சென்றீரோ
என்றும் உமை நினைத்து இதய அஞ்சலி செய்கின்றோம்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர்
குடும்பமே இன்று தவியாய்த் தவிக்கின்றதையா
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உமது நினைவுகள்
எம்மை விட்டு அகலாது எம் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டு
இருக்கும்.

ஓம் சாந்தி!

டச்சுறோட்,
சித்தன்கேணி.

என்றும் நினைவுடன் வாழும்:
மனைவி,
பிள்ளைகள்.

(94861)

**Affordable and Internationally Recognised**

**JAFFNA**


# MBA

**Master of Business Administration**

Specialize in
Marketing
Human Resources
Information Systems
Finance

Sikkim
**Manipal University**

An integrative program designed to provide an advanced course in management for those seeking senior positions in industry, commerce and public services. The core subjects of the Manipal MBA are aimed at developing knowledge and skills in fundamental management disciplines, improving the decision making abilities of participants and producing managers of the highest quality.



**Admission now on for this Prestigious MBA Program**

**Third Batch Commence on April 2010**

For information contact | Kasthoori 021 4900900

Manipal

Manipal International Study Centre
**IIS CITY CAMPUS**
#200,Sivan Pannai Road, Jaffna.
T.P: 021 222 8060
Web: www.iiscitycampus.com

## நீரிழிவு நோய் பற்றிய விவரணக் கண்காட்சி

மூளாய், பெப்.15

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கமும், சுகாதார அமைச்சும், இலங்கை மருத்துவச் சங்கத்தின் தொற்று நோய் அல்லாத நோய்கள் பிரிவும் இணைந்து நடத்தும் நீரிழிவு நோய் தொடர்பான விவர ணக் கண்காட்சி எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் இரத்தினம் அறக்கட்டளை நிதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளுக்கமைவாகத் தயாரிக்கப்பட்ட நீரிழிவு நோய் தொடர்பான காட்சிப்படுத்தல்கள் கண்காட்சியில் இடம்பெறவுள்ளதாகக் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை அறிவித்துள்ளது.


(04-9-93)

**காணி விற்பனை**

களபூமி,காரைநகர் பிள்ளையார் கோவிலுக்குப் பின்பக்கமாக உள்ள காணி (35பரப்பு) விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய இல:
0779407895 (94860)

புவே செற்

வீட்டுக்கு மற்றும் ஹோட்டலுக்கு



ரூ.3,950/-இலிருந்து

டயிடஸ் ஸ்ரோஸ்
2439422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உருகி மனதால் லயித்துப் பாடலை இசைப்பவர்களே சிறந்த கலைஞர்களாக முடியும்

"குரலினிலே உயர்ஸ்தாயி இனிமை தோன்றும்
குலவிடுமிராகத்தில் பாவம் தோன்றும்
ஸ்வர லயத்தில் கற்பனைகள் மிளிர்ந்து தோன்றும்
கரமலரில் அதிநுணுகத்தாளம் தோன்றும்
கச்சிதம் சேர் உருப்படிகள் நயந்து தோன்றும்
தரணியிலே பெருங்கலைஞன் செல்லத்துரை.."

என மஹாவித்துவான் ந.வீரமணி ஐயரால் புகழ்ந்து பாடப்பட்ட இசைக்கலைஞர் கலாபூஷணம் வ.செல்லத்துரை இசை நாடகச் சிறப்புப் பெற்ற பரம்பரையில் வந்தவர்.

கொல்லங்கட்டி தெல்லிப்பளையில் வல்லிபுரம்-இலட்சுமி தம்பதியினருக்கு 1935 ஆண்டு மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கொல்லங்கட்டி சைவ வித்தியாசாலையிலும், உயர்கல்வியை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் கற்றார். பாடசாலை நாள்களிலேயே இசை நிகழ்வுகளில் சிறந்து விளங்கினார். அச்சுவேலியைச் சேர்ந்த புவனேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்து சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்.

கர்நாடக சங்கீதத்தில் இராகங்களை வளர்த்துப் பாடும் ஆற்றலும், சிறந்த லய ஞானமும், சுருதி சுத்தமும் அமையப் பெற்றவர். பல கோயில்களிலும், சபாக்களிலும், இசைக் கச்சேரிகள் செய்து புகழ்பெற்ற இவரை அவரது இல்லத்தில் உதயன் வாசகர்களுக்காக நேர்கண்டோம்.

**கே:** உங்களுக்கு இசை ஆர்வம் ஏற்படப் பின்னணியாக அமைந்த காரணிகளென எவற்றைக் கூறுவீர்கள்?

**ப:** எனது பரம்பரை இசை நாடகப் பரம்பரை. எனது தகப்பனாரின் தகப்பனும், தாயாரின் தகப்பனும் இதிகாசக் கதைகளில் நடித்துப் புகழ்பெற்றவர்கள். அவர்கள் வழியில் நானும் இசையைக் கேட்டும், பாடிப் பார்த்தும் சிறு வயதிலேயே எனது ஞானத்தை வளர்த்துக்கொண்டேன்.

அக்காலத்தில் "கிராமபோன்" பெட்டியின் மூலம் திருமதி M.S.சுப்புலக்ஷ்மி, முசுரி சுப்பிரமணிய ஐயர், செம்பை வைத்தியநாத பாகவதர், G.N.B, K.P.சுந்தராம்பாள் போன்றோர் பாடல்களைக் கேட்பேன். பின்னர் அவர்கள் பாடலில் காணப்படும் சங்கதிகள், பிருக்காக்கள், நுட்பங்களை எனது குரலில் கொண்டுவர முயற்சிப்பேன். குறிப்பாக இசைக்குயில் K.P.சுந்தராம்பாள் பாடியுள்ள 'ஞானப்பழத்தைப் பிழிந்து' எனும் இராகமாலிகையைக் கேட்டு நானும் 5½ கட்டை சுருதியில் பாடிப்பழகி, கோயில் விழாக்களில், சபாக்களில் அவ் இராகமாலிகையைப் பாடி மற்றவர்களால் பாராட்டப்பட்டுள்ளேன். தவிர கோயில் விழாக்களில் புகழ்பெற்ற பல நாதஸ்வரக் கலைஞர்களின் கச்சேரிகளைத் தவறாது கேட்டு வருவேன். அதனால் கூட எனக்கு இசையில் ஆர்வம் ஏற்பட்டது எனலாம்.

**கே:** இசைக் கல்வியை எங்கு, எப்போது? யாரிடம் பெற்றுள்ளீர்கள். நீங்கள் இசை பயில்வதற்கு குருவாக அமைந்தவர்கள் பற்றி?

**ப:** மாவிட்டபுரம் நாதஸ்வரமேதை உருத்திராபதி அவர்களை எனது ஆரம்பக் குருவாகப் பெற்றமை நான் பெற்ற பாக்கியமே எனலாம். உருத்திராபதி ஆசிரியர் அவர்களிடம் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் இசை கற்று, வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சையில் 6 ஆம் தரத்திலும் சித்திபெற்றேன். தென்னிந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை பயின்று 1961 ஆம் ஆண்டு 'இசைமணி' பட்டம் பெற்று முதற் பிரிவில் சித்தியடைந்தேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை கற்பித்தவர்களான பேராசிரியர் T.K.ரங்காச்சாரி, திரு.M.M. தண்டபாணி தேசிகர், திருப்பாம்புரம் T.N.சிவசுப்பிரமணியபிள்ளை, மன்னார்குடி இராஜகோபால் போன்றோரிடம் இசை பயின்றேன். திரு.M.A.கல்யாண கிருஷ்ண பாகவதர் அவர்களிடம் பஞ்சரத்ன கிருதிகளை நேரடியாகக் கற்றுள்ளேன். பின்னர் இலங்கை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவனாக இணைந்து மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் போன்றோரிடம் இசை பயின்றுள்ளேன்.

**கே:** உங்களுடைய இசைக்கச்சேரிகள் பற்றியும் உங்கள் கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியம் வாசித்த கலைஞர்கள் பற்றியும் கூறுங்கள்?

**ப:** மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் 1962 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அருணகிரிநாதர் விழாவில் எனது இசை அரங்கேற்றம் நடைபெற்றது. அன்றுபக்கவாத்தியக் கலைஞர்களாகப் பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தசர்மா-வயலின், திரு.A.S.இராமநாதன்-மிருதங்கம், திரு.கணேசபிள்ளை-கெஞ்சிரா, திரு.ஆறுமுகம் பிள்ளை- கடம், திரு.நா.குமரகுரு-தவில் ஆகியோர் எனது அரங்கேற்றம் சிறப்பாக அமையத் துணைபுரிந்தனர்.



அதன்பின் 1962 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 400 கச்சேரிகள் வரை செய்துள்ளேன். நல்லூர் உற்சவ காலத்தில் 1964 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டுவரை நல்லை ஆதீன சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க இசைக் கச்சேரிகள் செய்துள்ளேன். தவிர இளங்கலைஞர் மன்றம் போன்ற மன்றங்களிலும், கோயில்களிலும், பாடசாலைகளிலும், எனது கச்சேரிகளைச் செய்துள்ளேன். மாத்தளை முத்துமாரி அம்மன், திருக்கேதீஸ்வரம் போன்ற புகழ்பெற்ற கோயில்களிலும், கொழும்பு தமிழிசைச் சங்கத்திலும் இசைக் கச்சேரிகளைச் செய்துள்ளேன்.

ஈழத்தின் சிறந்த பக்கவாத்தியக் கலைஞர்களான பிரம்மஸ்ரீ வெங்கடேச சர்மா- வயலின், திரு.ஜெயசுந்தரம்-மிருதங்கம், திரு.ஐ.சிவபாதம்-மிருதங்கம் போன்றோரும் சமகால வித்துவான்கள் பலரும் என் கச்சேரிக்குத் துணை புரிந்துள்ளனர்.



**கே:** உங்களுடைய இசைத் தகைமைகள் பற்றியும் பெற்ற பட்டங்கள் பற்றியும் கூறுங்கள்?

**ப:** வட இலங்கை சங்கீத சபையின் 6 ஆம் தரத்தில் சித்தியடைந்து இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் பிரிவில் சித்திபெற்று 'இசைமணி' பட்டம் பெற்றுள்ளேன். கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தேர்வில் சித்திபெற்று A தரப் பாடகராகவும் விளங்கியுள்ளேன். யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களில் தியாகராஜ ஆராதனை விழாக்களில் பங்குபற்றிப் பாடிப்பாராட்டுப் பெற்றுள்ளேன்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன பீடாரோகண விழாவில் 1976 ஆம் ஆண்டு 'கானாம்நாதபூஷணம்' எனும் பட்டம் கொடுக்கப்பட்டமை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலைஞானகேசரி' எனும் பட்டம் 2001 ஆம் ஆண்டு மூத்த கலைஞர் கௌரவிப் பின்போது கொடுக்கப்பட்டமை, இலங்கை இந்து கலாசாரத் திணைக்களத்தினால் 1999 ஆம் ஆண்டு 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை என்பன குறிப்பிடத்தக்க விருதுகள் ஆகும்.

**கே:** உங்களுடைய இசைச்சேவை, எங்கு கற்பித்தீர்கள் என்பது பற்றிக் கூறுங்கள்?

**ப:** மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தில் 12 வருடங்கள் இசையாசிரியராகப் பணியாற்றியுள்ளேன். 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரை கண்டி/தலாத்துஓயா ம.வி, இந்துசீனியர் வித்தியாலயம், மகியாவா கலைமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் பின்னர் 1995 ஆம் ஆண்டுவரை யா/இடைக்காடு மகா வித்தியாலயத்திலும் இசையாசிரியராகப் பணியாற்றியுள்ளேன். 1991 ஆம் ஆண்டு மருதனார்மடம் கோட்ட இசை ஆசிரிய ஆலோசகராகவும், பின்னர் தொலைக்கல்விப் போதனாசிரியராகவும் கடமையாற்றியுள்ளேன்.

அதன்பின்னர் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டுவரை யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும், வேதசிவாகம குருகுல கலாசாலை (ஆனைப்பந்தி) யில் சில வருடங்கள் பண்ணிசை ஆசிரியராகவும் கடமை புரிந்துள்ளேன்.

தவிர பிரத்தியேகமாகப் பல மாணவர்கள் அன்று தொடக்கம் இன்று வரை என்னிடம் இசை பயில்கின்றனர்.

**கே:** இசை வாழ்வில் மறக்கமுடியாத/நினைவுகூரத்தக்க நிகழ்வுகள் ஏதேனும் உண்டா?

**ப:** நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசை பயின்றபோது திரு.T.K.ரங்காச்சாரி அவர்களிடம் குருகுலமுறையில் இசை பயின்றுள்ளேன். அப்போது அவருடைய கச்சேரிகளுக்கு அவருடன் சென்று பாடச் சந்தர்ப்பம் அளித்துள்ளார். அந்நிகழ்வுகள் இன்றும் மனதில் நிலைத்து நிற்கின்றன.

**கே:** உங்களைக் கவர்ந்த இந்திய/இலங்கை இசைக் கலைஞர் யார் என்று கூறமுடியுமா?

**ப:** எனது குருவும் ஈழத்தின் தலைசிறந்த கலைஞர், கவிஞர் மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ N.வீரமணி ஐயர் அவர்கள் என்னை மிகவும் கவர்ந்த ஒரு கலைஞர். தவிர இந்தியக் கலைஞர்களான D.K.பட்டம்மாள், Dr.M.பாலமுரளி கிருஷ்ணா, K.J.ஜேசுதாஸ் போன்றோரின் பாடல்களையும் நான் விரும்பிக் கேட்பதுண்டு.

**கே:** இன்றைய சமுதாயத்தினரிடம் கர்நாடக சங்கீதம் மீதான ஆர்வம் குறைந்து வருவதற்கான காரணிகள் என எவற்றைக் கூறுவீர்கள், அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்?

**ப:** இன்று கர்நாடக சங்கீதம் கற்கும் மாணவர்களுக்கு ஏதுவான சூழ்நிலை காணப்படவில்லை. வீட்டுக்கு வீடு வானொலி, தொலைக்காட்சி போன்றன இருந்தாலும் அவற்றில் கர்நாடக இசை சம்பந்தமான நிகழ்ச்சிகள் மிகமிகக் குறைவு. அவ்வாறு ஒளி/ஒலி பரப்பினாலும் அவற்றினைப் பார்த்து ரசிக்கும் ஆர்வம் மிகக் குறைவு எனலாம். சினிமா பார்ப்பதிலும், பாடல்கள் கேட்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். இயந்திர கதியில் செல்லும் வாழ்க்கையில் எங்காவது இசைக் கச்சேரிகள் நடைபெற்றாலும் அவற்றைக் கேட்டு மகிழ ஆர்வமோ, நேரமோ இருப்பதில்லை. சுதாரண, உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் கூட இசை கற்கும்போது ஒரு கடமையாக மட்டுமே எண்ணி இசை கற்கின்றனர் போன்று தெரிகின்றது. இவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்று கேட்டால் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் கர்நாடக இசைக்காக ஒரு நேரத்தை ஒதுக்கி மாணவர்கள் அவற்றைக் கேட்கக் கூடியவாறு நிகழ்ச்சிகளை நடத்துதல், யாழ்ப்பாணத்தில் காணப்படும் இளங்கலைஞர் மன்றம், திருமறைக் கலாமன்றம், வடஇலங்கைச் சங்கீத சபை போன்ற இசை நிறுவனங்களை கிராமங்களிலும் நிறுவி எளிதில் எல்லோரும் இசை பயில வழிசமைக்கலாம். பாடசாலைக் கல்வியில் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்கலாம்.

**கே:** மாணவர்கள் தமது இசைத் தகைமையை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம். இசை கற்கும் மாணவர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

**ப:** நிறைய கர்நாடக இசைப் பாடல்களைக் கேட்க வேண்டும். இன்று பலமுறைகளில் பாடல்களைக் கேட்க முடியும். நிறையக் கேட்பதன் மூலமே தமது கேள்வி ஞானத்தை வளர்த்துக் கொள்ள முடியும். கேட்கும்போது என்ன ராகம், தாளம், யாருடைய சாகித்தியம் என அறிந்து கேட்க வேண்டும். நிறையக் கேட்பதால் இராகங்களை விஸ்தாரமாகப் பாடவும், புதிய பல உருப்படிகளை அறியவும் முடியும். எந்நேரமும் இசை பற்றியே சிந்திப்பதாலும் அசுர சாதகம் செய்வதாலும் மேம்பட முடியும். ஸ்வர வரிசைகள், ஜண்ட வரிசை, அலங்காரங்கள் போன்றவற்றை 3, 4 காலங்களில் தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் ஸ்வர காணத்தை வளர்த்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு நாளும் 2 மணி நேரமாவது சாதகம் செய்ய வேண்டும். தொழில் வாய்ப்பைப் பெறும் எண்ணத் துடனோ இல்லை பொழுது போக்குக்காகவோ இசை பயிலாமல், உண்மையான ஈடுபாட்டுடன் உள்ளத்தால் உருகி, மனதால் லயித்துதன்னுடையபாடலைத்தானே ரசித்துப் பாடும்போது மட்டுமே சிறந்த இசைக் கலைஞராக மிளிரமுடியும்.

## கலாபூஷணம் செல்லத்துரையுடனான நேர்காணல்

நேர்காணல்:
ஓளண்யன், அம்பிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு — பகுதி - I

**✱ இல. 1-20 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. விற்பனை இன்றேல் திரும்பலென அனுப்பப்பட்ட பொருட்களினுள் கிரயப் பட்டியல் 5,000 பெறுமதியான தொகை, விற்பனைகளிலும் கடன்பட்டோரிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இவற்றின் கிரயம் 4,000 தொகையாகும். இப்பொருட்கள் விற்பனை நிலையத்திலிருந்து வெளியேறி இருப்பதால் அவற்றை விற்பனையாகக் கருதுவதாக உரிமையாளர் கூறினார். இங்கு மீறப்படும் எண்ணக்கரு யாது?
    1) கிரய எண்ணக்கரு. 2) புத்திசாதுர்ய எண்ணக்கரு.
    3) இணைதல் எண்ணக்கரு. 4) தேறல் எண்ணக்கரு.
    5) பழைமை பேணல் எண்ணக்கரு/ மாறாநிலை எண்ணக்கரு.

02. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 5 இன்படி இருப்புக்கள் என்பது,
    1) உற்பத்தி வியாபார நிறுவனம் ஒன்றில் விற்பனை செய்யத்தயாரான முடிவுப் பொருட்கள்.
    2) உற்பத்தி வியாபார நிறுவனம் ஒன்றில் உற்பத்திக்குத் தயாராகவுள்ள மூலப் பொருட்கள்.
    3) ஒரு வியாபார நிறுவனத்தில் காணப்படும் நடைமுறைச் சொத்துக்கள்.
    4) உற்பத்தி வியாபார நிறுவனமொன்றில் விற்பனை செய்யும் நோக்கத்திற்காக உற்பத்திச் செயற்பாட்டில் நுகர்வதற்குத் தயாராக உள்ள மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திசெய்முறையிலுள்ள குறைவேலைகளையும் விற்பனைக்கு தயாரான முடிவுப் பொருட்களுமாகும்.
    5) ஒரு வியாபார நிறுவனத்தில் காணப்படுகின்ற மூலப்பொருள் இருப்பும் குறை வேலைகளும்.

03. பின்வரும் கூற்றுக்களுள் பிழையானக்கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
    1) முதன்மை ஏடுகள் உப ஏடுகள் எனவும் அழைக்கப்படும்.
    2) வியாபாரக்கழிவுகள் முதன்மைப்பதிவு ஏடுகளில் மட்டும் செம்மையாக்கப் படும்.
    3) முதன்மைப் பதிவேடுகள் பேரேட்டின் ஒரு பகுதியாகும்.
    4) ஊடுசெயல் இடம்பெறும்போது அவற்றைப் பதிவுசெய்ய முதன்மை ஏடுகள் தயாரிக்கப்படும்.
    5) மூல ஆவணங்களைப் பார்த்து முதன்முதலாகப்பதிவு செய்யும் ஏடு மூலஏடு எனப்படும்.

04. ஒரு வணிக நிறுவனம் 20,000/= பெறுமதியான சரக்குகளை 20% வியாபாரக் கழிவு நீக்கிய பின்னர் 10% பெறுமதி சேர்த்த வரியுடன் விற்பனை செய்தது. மேலும் கொடுப்பனவை தீர்த்துக்கொள்ளும்போது 5% காசுக் கழிவினை அனுமதித்தது. விற்பனைக் கணக்கில் இக்கொடுக்கல்வாங்கலானது பின்வரும் எப்பெறுமதியில் பதியப்படும்?
    1) 20,000/= 2) 16,000/= 3) 17,600/= 4) 16,700/= 5) 18,000/=

05. வரையறுத்த மாதவன் நிறுவனத்தின் அறவிடமுடியாக்கடன், ஐயக்கடனிற்கான ஏற்பாடு, மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் ஆகியவற்றிக்கான மீதிகள் பின் வருமாறு:

| | 31.03.2008 | 31.03.2009 |
|---|---|---|
| ஐயக்கடன் ஏற்பாடு | 10,000 | 8,000 |
| மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் | 6,000 | 7,000 |
| அறவிடமுடியாக்கடன் | 11,000 | 14,000 |

31.03.2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கணக்கில் பதிவு செய்யத் தக்க பெறுமதி எவ்வளவு?
    1) 5,000/= 2) 19,000/= 3) 12,000/= 4) 14,000/= 5) 9,000/=

06. பின்வருவனவற்றில் எது ஒரு முதன்மை ஏடாகவும் இரட்டைப்பதிவின் ஒரு பகுதியாகவும் காணப்படும்,
    1) பொது குறிப்பேடு. 2) விற்பனை நாளேடு.
    3) சில்லறை காசேடு. 4) வங்கிக்கூற்று.
    5) கொள்வனவு நாளேடு.

07. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்ததன் பின்னர் ஐயக்கடன் ஏற்பாட்டில் ஒரு குறைப்பினை ஏற்படுத்தினால் இது,எவ்விளவை ஏற்படுத்தும்?
    1) நடைமுறைப் பொறுப்பு அதிகரிக்கும், இறுதி மூலதனம் அதிகரிக்கும்.
    2) நடைமுறைச் சொத்து அதிகரிக்கும், இறுதி மூலதனம் அதிகரிக்கும்.
    3) நடைமுறைப் பொறுப்பு குறையும், இறுதி மூலதனம் அதிகரிக்கும்.
    4) நடைமுறைச் சொத்து அதிகரிக்கும், இறுதி மூலதனம் குறைவடையும்.
    5) நடைமுறைச் சொத்து குறையும், இறுதி மூலதனம் அதிகரிக்கும்.

08. ஐந்தொகைத்திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்குள் புறப்பயன்பாட்டாளர்களுக்குக் கணக்கறிக்கைகளை வழங்கல் வேண்டும். என்பது பின்வருவனவற்றில் எந்த முதற் தரப்பண்புரீதியான இயல்பை குறித்து நிற்கின்றது?
    1) நம்பகத்தன்மை. 2) பொருத்தப்பாட்டுத்தன்மை.
    3) ஒப்பீட்டுத்தன்மை. 4) மாறாத்தன்மை.
    5) நடுநிலைத்தன்மை.

09. 31.12.2008 இல் வங்கிக்கூற்று 25,000/= மீதியொன்றைக்காட்டியது. ஆனால் காசேடு 17,500/= வை மீதியாக காட்டியது.அதேதிகதியில்வங்கியில் இன்னும் சமர்ப்பிக்கப் படாமல் 7,500/= பெறுமதியான காசோலைகள் இருந்தமை அத்துடன் நிலையான கட்டளையின் பேரில் வங்கிக்கழிப்பனவு செய்த தொகை 500/= என்பவை கருத்தில் கொள்ளப்படவில்லை. நிறுவனம் 31.12.2008 இல் அதன் ஐந்தொகையில் காட்டப் படும் வங்கிமீதி எவ்வளவு?
    1) 25,000/= 2) 17,500/= 3) 23,000/= 4) 17,000/= 5) 24,500/=

10. ஐந்தொகையில் நடைமுறையல்லாச்சொத்துக்கள் அவற்றின் கிரயத்திலிருந்து தேய்மானம் நீக்கிய பின்னரான தொகையால் காட்டப்படுமேயன்றி அவற்றின் விற்றுத் தேறக்கூடிய தொகையால் காட்டப்படுவதில்லை என்பதற்கு சார்பான கணக்கீட்டு எண்ணக்கரு யாது?
    1) தேறல் எண்ணக்கரு. 2) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு.
    3) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு.
    4) பணஅளவு எண்ணக்கரு. 5) முக்கியத்துவ எண்ணக்கரு.

**✱ 11ஆம், 12 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

| | 31.12.2007 | 31.12.2008 |
|---|---|---|
| பொறி இயந்திரம் கிரயத்தில் | 50,000 | 40,000 |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | 15,000 | 16,000 |

பெறுமானத் தேய்வு கிரயத்தின் இறுதி பெறுமதியில் 10 வீதம்.
பொறி அகற்றியதால் ஏற்பட்ட நட்டம் 2,000 ரூபா.

11. விற்பனை செய்யப்பட்ட பொறியின் தேறிய புத்தகப் பெறுமதி எவ்வளவு?
    1) 10,000/= 2) 1,000/= 3) 7,000/= 4) 9,000/= 5) 5,000/=

12. பொறியானது என்ன விலையில் அகற்றப்பட்டது?
    1) 10,000/= 2) 1,000/= 3) 7,000/= 4) 9,000/= 5) 5,000/=

13. பாவனையிலிருந்த பழைய தளபாடங்களின் விற்பனை உரிமையாண்மையை,
    1) அதிகரிக்கும். 2) குறைக்கும்.
    3) மாற்றத்தை ஏற்படுத்தாது.
    4) மாற்றம் ஏற்படும் அல்லது ஏற்படாது. 5) அதிகளவாகக் குறைக்கும்.

14. கொழும்பு விளையாட்டுக்கழகம் 2005 இல் ஆயுள் அங்கத்துவ சந்தாத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியது. அது தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| ஆண்டு | மேலதிகமாக இணைந்த அங்கத்தவர்கள் | ஒருவருக்கான சந்தா |
|---|---|---|
| 2005 | 10 | ரூபா. 2,000 |
| 2006 | 15 | ரூபா. 2,200 |

ஆயுள் அங்கத்துவ சந்தா 10 ஆண்டுகளில் பதிவழிக்கப்படும் என்பது கழகக் கொள்கை. 2006 ஆம் ஆண்டு முடிவுக்கணக்குகளில் காட்டப்படும் தொகைகளுக்கான சரியான தொகுதி.

| | வருமான செலவுக் க/கு | ஐந்தொகையில் பொறுப்பு |
|---|---|---|
| 1) | 5,100 ரூபா | 47,900 ரூபா |
| 2) | 5,300 ரூபா | 47,700 ரூபா |
| 3) | 5,300 ரூபா | 45,700 ரூபா |
| 4) | 5,100 ரூபா | 45,900 ரூபா |
| 5) | 7,300 ரூபா | 45,700 ரூபா |

15. பண்டங்களையும் சேவைகளையும் கைமாற்றம் செய்யும் போதே விற்பனை ஒரு வருமானமாகக் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு,
    1) அட்டுறு எண்ணக்கரு. 2) பொருண்மை எண்ணக்கரு.
    3) தேறல் எண்ணக்கரு. 4) இரட்டை விளைவு எண்ணக்கரு
    5) நிலைமாறா எண்ணக்கரு.

16. கொள்வனவு திரும்பல் 480 ரூபா பிழையாக விற்பனைத்திரும்பல் கணக்கில் வரவுப் பக்கத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. ஆனால், தனிநபர் கணக்கில் சரியாகப் பதிவிடப்பட்டிருந்தது. இவ்வழு பரீட்சை மீதியை எவ்வாறு பாதிக்கும் என்பதற்கு சரியான கூற்று?
    1) செலவுபக்கம் வரவுபக்கத்தைவிட 480/= கூடுதலாகக் காட்டும்.
    2) வரவுபக்கம் செலவுபக்கத்தை விட 480/= கூடுதலாகக் காட்டும்.
    3) செலவுபக்கம் வரவுபக்கத்தை விட 960/= கூடுதலாகக் காட்டும்.
    4) வரவுபக்கம் செலவுபக்கத்தை விட 960/= கூடுதலாகக் காட்டும்.
    5) இருபக்கமும் சமனடையும்.

17. நிலையான சொத்துக்களின் மீது பெறுமானத்தேய்வு தாக்கீடு செய் வதற்கான நோக்கம்,
    1) தேவையானபோது சொத்துகளைப் பிரதியீடு செய்வதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்தல்.
    2) சொத்துகளை அவற்றின் சந்தை பெறுமானத்தில் ஐந்தொகையில் காட்டல்.
    3) இலாபமானது இழிவுபடுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல்.
    4) சொத்துகளின் தேறியகிரயத்தை அவற்றின் பொருளாதார ஆயுட்காலத்தில் பரவலாக்கல்.
    5) மேற்படி எதுவுமில்லை.

18. பின்வருவனவற்றில் எக்கூற்று பிழையானது?
    1) பெறுமானத்தேய்வு நிறுவனத்தின் தேறிய இலாபத்தைக் குறைக்கும்.
    2) பெறுமானத்தேய்வை தாக்கீடு செய்யத் தவறினால் மூலதனம் பேணப்பட மாட்டாது.
    3) பெறுமானத் தேய்வு ஏற்பாடு காசை உருவாக்கும்.
    4) பெறுமானத் தேய்வை தாக்கீடு செய்யத் தவறினதல் தேறிய இலாபம் மிகைப் படுத்தப்படும்.
    5) பெறுமானத் தேய்வு இணைத்தற் எண்ணக்கருவினை திருப்திப்படுத்துகிறது.

19. பின்வருவனவற்றுள் நிதிக்கூற்றுக்களின் பிரதான தரக்குணவியல்புகள் (பண்புசார் இயல்புகள்) நான்கும் எவை?
    1) விளங்கிக்கொள்ளும் தன்மை, தொடர்பு, நம்பகத்தன்மை, ஒப்பிடக்கூடிய தன்மை.
    2) விளங்கிக்கொள்ளும் தன்மை, பொருண்மை, நம்பகத்தன்மை, ஒப்பிடும் தன்மை.
    3) விளங்கிக்கொள்ளும் தன்மை, புத்திசாதுரியம், சட்டவடிவிலும் பார்க உள்ளடக்கம், ஒப்பிடும் தன்மை.
    4) விளங்கிக்கொள்ளும் தன்மை, நடுநிலைமை, பொருண்மை, நம்பகம்.
    5) மேற்கூறிய எவையுமல்ல.

20. வழங்குநர் கட்டுப்பாட்டுகணக்கு மீதி 01.01.2008 இல் 26,000/= ஆகும். 2008 ஆம் ஆண்டில் 2,000/= வியாபாரக்கழிவினைக் கழிக்கமுன்னருள்ள கொள்வனவுகள் 67,000/= ஆகும். அவ்வாண்டில் கொள்வனவுத்திரும்பல்கள் 3,000/= உம் காசோலைக் கொடுப்பனவுகள் 28,000/= உம் ஆகும். அத்துடன் காலம் தாழ்த்தியமைக்கு அறவிடப்பட்ட வட்டி 200/= எனின், 31.12.2008 இல் உள்ள வழங்குநர் கட்டுப் பாட்டுக் கணக்கு மீதி,
    1) 60,200/= 2) 60,400/= 3) 63,200/= 4) 88,200/= 5) 34,200/=

**✱ 21-30 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

21. லால் கம்பனியானது 4,840/=இற்கு ( 10% VAT உள்ளடங்களாக) பொருள் ஒன்றை சுமனுக்கு விற்பனை செய்தது எனின், இந்நடவடிக்கைகளுக்கான இரட்டைப்பதிவு,

..............................................................................................

22. கணக்கீட்டு தகவல்களின் 4 அலகுசார் பண்புகளைக் குறிப்பிடுக.

..............................................................................................

..............................................................................................

23. பங்குடமை ஒன்றில் பற்றுக்களுக்கு 12% வட்டி அறவிடப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டில் பங்காளர்கள் பின்வருமாறு பற்றுக்களை மேற்கொண்டிருந்தனர்.

| | ரூபா |
|---|---|
| A - ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் 8,000/= வீதம். | 800,000 |
| B - ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் 15,000/= வீதம். | 150,000 |
| C - ஒவ்வொரு மாத இறுதியிலும் 20,000/= வீதம். | |

2007 ஆம் ஆண்டுக்கான ஒவ்வொருவரினதும் பற்று வட்டியை காண்க. 50,000

..............................................................................................

(09 ஆம்பக்கம் பார்க்க)

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி, கொழும்பு விவேகானந்தா கல்லூரி.

"2010 உயர்தர மாணவர்களுக்காக ப[illegible] விசேடமாகத்தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கீடு, பகுதி - I: தொடர்ச்சி.....

24. மெய்க்கணக்குகள், பெயருள் கணக்குகளுக்கு இரு உதாரணங்கள் தருக.
   மெய்க்கணக்கு - ........................................
   பெயரருள் கணக்கு - ........................................

25. பங்குடமை ஒன்றில் தரகு கழிக்கமுன் தேறிய இலாபம் 267,500/=. நிறுவனம் விற்பனைப்பிரிவு முகாமையாளருக்கு தரகு கழித்தபின் தேறிய இலாபத்தில் 7% தரகு வழங்கல் வழக்கமாகும்.
   1) தரகைக் கணிப்பிடுக.
   ........................................
   2) தரகு கழித்த பின் இலாபத்தைக் கணிக்குக.
   ........................................

26. மூலதனச்செலவு, வருமானச்செலவு என்பவற்றுக்கிடையிலான இருவேறுபாடு களைக் குறிப்பிடுக.
   ........................................
   ........................................

27. பொறுப்புக்களின் இரு பண்புகளைக் குறிப்பிடுக.
   ........................................

28. கமல், விமல் பங்குடமையில் நிமல் என்பவர் புதிதாக இணைக்கப்பட்டார். இவரது இணைவின்போது ஏடுகளில் இருந்த நன்மதிப்புக்கணக்கானது பதிவழிக்கப்பட்டது. இது பதிவழிக்கப்பட்டபோது கமல், விமல், நிமல் முறையே 60,000/=, 36,000/=, 24,000/= என மூலதனக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இப்பதிவின் மூலம் கமல், விமல் ஆகியோருடைய மூலதனக்கணக்கில் முறையே 12,000/=, 12,000/= அதிகரிப்பு ஏற்பட்டது எனின், கமல், விமல் ஆகியோருக்கிடையிலான பழைய இலாபநட்ட விகிதம் யாது?
   ........................................
   ........................................

* 29ஆம், 30ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
சுந்தரம் உற்பத்தி நிறுவனத்தில் இருந்து 31.12.2008 இல் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பாக பெறப்பட்ட தகவல்கள்.

உற்பத்திக் கிரயத்தில் 20% தொழிற்சாலை மேந்தலையாகவும் மிகுதி முதற் கிரயமாகவும் காணப்பட்டது. இம் முதற்கிரயத்தில் 60% ஆனவை நேர்ச் செலவு களாகவும் மிகுதி உற்பத்திக்கு பயன்படுத்திய மூலப்பொருட்களாகவும் காணப் பட்டது.

உற்பத்திக்குப் பயன்படுத்தத் தயாராக இருந்த 60,000/= பெறுமதியான மூலப் பொருட்களில் 1/6 பங்கு மூலப்பொருட்கள் இறுதி மூலப்பொருள் இருப்பாக ஆண்டு இறுதியில் காணப்பட்டது. இவ் உற்பத்தி நிறுவனத்தில் ஆரம்ப, இறுதி குறை வேலை இருப்புகள் காணப்படவில்லை.

29. முதற்கிரயம் யாது?
   ........................................

30. உற்பத்திக் கிரயம் யாது?
   ........................................

* 31-35 வரையான கூற்றுக்கள் சரி/பிழை எனக் குறிப்பிடுக.

31. பங்காளர் தமது மூலதனமீதிகளின் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்வு செய்யும்போது மூலதன மீதிக்கு வட்டி செலுத்துவது அர்த்தமற்றதாகும். ( )

32. பகுதி சமப்படுத்தும் முறையிலான கணக்கு வைப்புமுறையில் உபபேரேடுகளில் இரட்டை பதிவு முறை பின்பற்றப்படமாட்டாது. ( )

33. நிகழத்தக்கப்பொறுப்புக்கள் பொதுவாக ஐந்தொகையில் காட்டப்படுகின்றன. ( )

34. பரீட்சைமீதி நிதிக்கூற்றுக்களில் ஒன்றாகும். ( )

35. காணி எனும் சொத்திற்கு பயன்பாட்டு ஆயுட்காலத்தை வரையறுக்கக் கூடியதாக இருக்கும். ( )

* 36-40 வரையான வினாக்களுக்கு கீறிட்ட இடங்களை நிரப்புக.

36. எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிறுத்தப்படும்போது சொத்து ஒன்றின் .................... ஆனது ............................ கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

37. காசுப்புத்தக பெற்ற கழிவு நிரல் என்பது ............................ நிரலாக இருக்கும் அதேவேளை, அதன் மொத்தம் பொதுப்பேரேட்டில் உள்ள ............................ கணக் கில் பதியப்படுகின்றது.

38. வருமானச்செலவுக் கணக்கு ஒரு ............................ கணக்காகும்.

39. சமூகப் பொதுச் சேவைகளை, அங்கத்தவர்கள் நலன்களை நோக்காகக் கொண்டு செயற்படுவது ............................ அமைப்புக்களாகும்.

40. செலவீடுகள் என்பது பொறுப்புகள் எழுவதுமட்டுமன்றி சொத்துக்கள் .............. உட்படுவதுமாகும்.

## கணக்கீடு — பகுதி - II

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. ஏ.எம் சகோதரர்கள் என்னும் பங்குடைமையில் அபிலனும் முகிலனும் பங்காளிகளாவ தோடு அவர்களது பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறு:-
   1) அபிலனினதும் முகிலனினதும் இலாபப்பங்கீட்டு விகிதம் 3:2 ஆகும்.
   2) பங்காளிகள் யாவரும் நிலையான மூலதன மீதிக்கு 5% வீத வட்டியை பெறுவர் தவிர எடுப்பனவுகளுக்கோ நடப்பு கணக்கு நிலுவைக்கோ வட்டி அனுமதிக்கப் படுவதோ, விதிக்கப்படுவதோ இல்லை.
   3) பங்காளிகள் சம்பளங்கள், மாதாந்தம் முகிலனுக்கு ரூபா 1,500, அபிலனுக்கு ரூபா 1,000.
   4) மாதமொன்றிற்கு ரூபா 2,000 தொகையை சம்பளமாக பெற்றுவந்த வியாபாரத் தின் பொது முகாமையாளரான கபிலன் 2008.04.01 இல் பங்காளியாக சேர்ந் தார். அவர் ரூபா 10,000 காசையும், 40,000 ரூபாவாக மதிப்பிடப்பட்ட வாகனத் தையும் இவ்வியாபாரத்தில் உள்ளடக்கினார்.
   5) புதிய பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறாகும். இலாபப்பங்கீட்டு விகிதம் அபிலன், முகிலன், கபிலன் முறையே 3:2:1.
   2008.04.01 இல் நன்மதிப்பு 30,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது. நன்மதிப்பு கணக்குகளை பேணாமல் நன்மதிப்பு சீராக்கங்களை மூலதன கணக்குகளிற் பேண வேண்டுமென பங்காளர்கள் தீர்மானித்தனர்.
   2,000 ரூபா சம்பளம் கபிலனுக்கு கொடுக்கப்பட வேண்டியதோடு புதிய பங்குடை மையின் ஏனைய சட்டதிட்டங்கள் பழைய ஒப்பந்தத்திற்கு சமமானவை.

2009.03.31 இல் பங்குடைமை கணக்கேடுகளில் இருந்த பரீட்சை மீதி வருமாறு:-

| | | |
|---|---|---|
| மூலதனக்கணக்கு: அபிலன | | 150,000 |
| முகிலன் | | 100,000 |
| கபிலன் கணக்கு | | 50,000 |
| நடப்பு கணக்கு: அபிலன் | | 30,000 |
| முகிலன் | 10,000 | |
| காணி | 125,000 | |
| மோட்டார் வாகனம் | 90,000 | |
| பொறிவிருட்சம் | 40,000 | |
| தளபாட பொருத்தி | 15,000 | |
| தேய்வு ஏற்பாடு: 01.04.2008இல்: மோட்டார் | | 20,000 |
| பொறிவிருட்சம் | | 18,000 |
| தளபாடம் | | 4,000 |
| தொக்குகள் 01.04.2008இல் | | |
| மூலப்பொருள் (கிரயத்தில்) | 10,000 | |
| புத்துருவாகும் வேலை (தொழிற்கிரயத்தில்) | 12,000 | |
| முடிவுற்ற பொருள் | 8,000 | |
| மூலப்பொருள் கொள்வனவு | 280,000 | |
| உட்சுமை கூலி | 15,000 | |
| நேர் செலவுகள் | 11,000 | |
| தொழிற்சாலை செலவுகள் | 8,200 | |
| தனியுரிமை கட்டணம் (உற்பத்தியின் மீது) | 3,800 | |
| நிதிச்செலவுகள் | 8,400 | |
| தொழிற்சாலை வாடகை | 48,000 | |
| மின்சாரம் | 35,800 | |
| ஏனைய நிறுவன செலவுகள் | 60,000 | |
| விற்பனை விநியோக செலவுகள் | 25,300 | |
| சம்பளம் - கபிலன் | 24,000 | |
| விற்பனைகள் | | 580,000 |
| கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் | 40,500 | 43,000 |
| எடுப்பனவுகள்: அபிலன் | 12,000 | |
| முகிலன் | 12,000 | |
| கபிலன் | 6,000 | |
| அறவிடமுடியாக்கடன் | 1,200 | |
| ஐயக்கடன் ஏற்பாடு 01.04.2008இல் | | 3,200 |
| சென்மதி உண்டியல் | | 10,000 |
| வங்கி மேலதிக பற்று | | 15,000 |
| வங்கியிலுள்ள காசு | 122,000 | |
| | 1023,200 | 1023,200 |

1) 31.03.2009 இல் தொக்குகள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டன.

| | |
|---|---|
| மூலப்பொருள் கிரயத்தில் | 9,500 |
| புத்துருவாகும் வேலை (தொழிற்சாலை கிரயத்தில்) | 11,000 |
| முடிவுற்ற பொருள் கிரயத்தில் | 6,000 |

2) நிலையான சொத்துக்களின் தேய்மானம் பின்வருமாறு தேய்விடப்படும்.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | 20% |
| பொறி விருட்சம் | 10% |
| தளபாடம் | 5% |

3) ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு 1,600 ரூபாவாக சிறக்கப்பட வேண்டும்.
4) அட்டுறு செலவுகள் தொழிற்சாலை செலவுகள் 2,500
   மின்சாரம் 3,200
5) மின்சார செலவில் 2/3 பங்கு தொழிற்சாலைக்காகும்.
6) 2009.03.31 இல் முகிலன் பங்குடைமையிலிருந்து விலகிக்கொள்வதாக முடி வெடுத்தார். இதனைத் தொடர்ந்து பின்வரும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சொத்துக்கள் பின்வருமாறு மீள்மதிப்பிடப்பட்டன.

| | |
|---|---|
| காணி | 150,000 |
| மோட்டார் வாகனம் | 56,000 |
| பொறிவிருட்சம் | 35,000 |
| தளபாடம் | 10,000 |
| மீள்மதிப்பீட்டு செலவு | 1000 |

**தயாரிக்குக:**
31.03.09 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முடிவடைந்த வருடத்திற்கான உற்பத்தி வியாபார இலாபநட்ட கணக்கு, மீள் மதிப்பீட்டுக்கணக்கு, பங்காளர் மூல தனக்கணக்கு, பங்காளர் நடைமுறைக் கணக்கு.

02. அ. 1) மொத்த சொத்துக்கள் அவை குறித்த கால நேரத்தில் ரூபா 6,000 ஆல் குறைவடைந்தது. அதே காலத்தில் மூலதனம் ரூபா 12,000 ஆல் அதிகரிப் பின் மொத்த பொறுப்புக்களின் அக்காலத்திற்கான மாற்றத்தின் தொகை யையும் திசையையும் (அதிகரிப்பு/ குறைவு) காண்க.
   2) அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சீனிவாசன் நிறுவனம் சிறிதளவு கணினி களை விற்பனை செய்வதற்காக முழு அளவு நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு முன்னர் சில பூர்வாங்க கொடுக்கல்வாங்கலில் ஈடுபட்டது. கம்பனி யின் கணக்குச் சமன்பாட்டில் ஒவ்வொன்றினதும் நிலுவைகள் 12ஆம் திகதி மே மாதத்திற்கும் அதற்கு பின்னருமான 10 தொழில் நாட்களுக்கு பின்வரு மாறு காட்டப்படுகின்றன. ஒரு நாளில் ஒரே ஒரு கொடுக்கல்வாங்கல் மட்டும் நடை பெற்றதாக கருதி கீழ்வரும் நடவடிக்கைகளை விளக்குக.

| திகதி | காசு | கடன் பட்டோர் | கணினி சரக்கிருப்பு | பண்டகசாலை பொருத்தி | கடன் கொடுத்தோர் | மூலதனம் |
|---|---|---|---|---|---|---|
| மே 12 | 7,200 | 4,800 | 21,600 | 3,600 | 4,800 | 32,400 |
| மே 13 | 13,200 | 4,800 | 21,600 | 3,600 | 4,800 | 38,400 |
| மே 14 | 13,200 | 4,800 | 21,600 | 8,400 | 4,800 | 43,200 |
| மே 15 | 9,600 | 4,800 | 25,200 | 8,400 | 4,800 | 43,200 |
| மே 16 | 9,600 | 4,800 | 31,200 | 8,400 | 10,800 | 43,200 |
| மே 19 | 13,200 | 1,200 | 31,200 | 8,400 | 10,800 | 43,200 |
| மே 20 | 7,200 | 1,200 | 31,200 | 16,800 | 13,200 | 43,200 |
| மே 21 | 3,600 | 1,200 | 31,200 | 16,800 | 9,600 | 43,200 |
| மே 26 | 3,600 | 1,200 | 30,600 | 16,800 | 9,000 | 43,200 |
| மே 27 | 4,800 | 6,000 | 30,600 | 10,800 | 9,000 | 43,200 |
| மே 28 | 1,200 | 6,000 | 30,600 | 10,800 | 9,000 | 39,600 |

ஆ. கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய உமது அறிவின் அடிப்படையில் பின் வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடை களைத் தருக. இவ்வினாவுக்கு விடையளிப்பதில் இங்கு தரப்பட்டுள்ளவாறு அட்டவணையை வரைக.

| எண்ணக்கரு | அடிப்படையான கருத்து | இவ் எண்ணக்கருவினால் நிதிக்கூற்றுக்கள் மீது தோன்றும் ஓர் விளைவு |
|---|---|---|
| 1. கணக்கீட்டு அலகுசார் எண்ணக்கரு<br>2. இணைதல் எண்ணக்கரு<br>3. கால அளவு எண்ணக்கரு<br>4. செயற்பாட்டு அமைவு எண்ணக்கரு<br>5. புண அளவு எண்ணக்கரு<br>6. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு | | |

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் மறவா நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10.08.1926
உதிர்வு:01.03.2006

அமரர் முத்தையா
இராசரத்தினம்
(பத்தர்)

திதி: பூர்வபட்ஷ துதியை
(15.02.2010)
திங்கட்கிழமை

ஆண்டுகள் நாலு போனது
உங்கள் அன்பு முகம் எம்மைப் பிரிந்து
நீங்கள் எம் கண்முன்னே இல்லை உறவாட
எப்போதும் உங்கள் நினைவில்லாத
நாளே இல்லை
அன்பின் இலக்கணமாய்
பண்பின் பிறப்பிடமாய்
எம் எல்லோரையும் வாழ வைத்த
ஒளி விளக்கே!
எம் உயிர் உள்ளவரை அழியாது
உங்கள் நினைவு

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்:
என்றும் உங்கள் நினைவுடன்
வாழும் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
'மலர்வாசம்'
மகாஜனக் கல்லூரி வீதி, தெல்லிப்பழை. (94789)

தற்காலிக முகவரி:
இல.43 A, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி.
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவில்...

மலர்வு
1923 ★ 08 ★ 23



உதிர்வு
2009 ★ 02 ★ 26

அமரர் முருகன் சின்னவன்

திதி: பூர்வபக்கபிரதமை (15.02.2010)

எம் உணர்வில் உயிரில் இரண்டறக்
கலந்த குலவிளக்கின் நினைவுடன்

கைதடி வடக்கு,
கைதடி. (94784) குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 45வயதுடைய, கௌரவமான சுயதொழில் புரியும் ஒருவருக்கு வாழ்க்கைத்துணை ஒன்று தேவை. தாரம் இழந்தவர்களும் கவனத்தில் எடுக்கப்படும். முதற் கடிதத்திலேயே எல்லா விவரங்களையும் தரவும்.
தொடர்பு: மே/பா, உதயன் 3980. (94770)

## கலப்பினக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு

1நாள், 2கிழமை, 1மாதம், 2மாதம் நிரம்பிய கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0789148132 (94792)

## சாவகச்சேரி வைத்தியசாலை சிறுவர் விடுதி கட்டடப் பணிகள் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.15

கட்டடப் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக 2006ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்ட சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சிறுவர் விடுதிக் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்.பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முயற்சியினால் கட்டட வேலைகள் ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் ஜூன் மாதத்தில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜப்பானிய நிறுவனமொன்றினால் சிறுவர் விடுதி நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
(50-207)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.15

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோயினை ஒழிப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பிரதி புதன்கிழமைகளில் மு.ப.11 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்று வருகிறது.

பிரதேச செயலர் செ.சிறிநிவாசன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சிச்சபை செயலாளர்கள், தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள், பிரதேச பொது அமைப்புகளின் பிரதி நிதிகள் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.
(50-207)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1165 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 05 29 37 52

12-02-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 4,905,400/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 218,791 | 20/- | 4,375,820/- |
| 2 இலக்கங்கள் | 20,125 | 40/- | 805,000/- |
| 1 இல. + லக்கினம் | 19,980 | 60/- | 1,198,800/- |
| 2 இல. + லக்கினம் | 1,821 | 200/- | 364,200/- |
| 3 இலக்கங்கள் | 528 | 1000/- | 528,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 4,905,400/- | 4,905,400/- |
| மொத்தம் | | | 12,887,220/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 261,303 | | 13,387,220/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ
தங்கக்காசு வெற்றியாளர் : டீ.ஜீ.தனபால கண்டி
கைத்தொலைபேசி வெற்றியாளர்: ரசிகா பிரியதர்ஷினி அத்துருகிரிய

2010 பெப்ரவரி 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பதுளை | 500979560-0-36 |
| மொனராகலை | 500970589-6-03 |
| இரத்தினபுரி | 500974453-5-08 |
| அம்பாறை | 500975492-4-30 |
| கொழும்பு | 500971806-7-47 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை



Mahajana Sampatha
12.02.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2206

வெற்றி எழுத்து D வெற்றி எண்கள் 6 6 2 8 4 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D 6 6 2 8 4 6 | ரூபா.18,149,803/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 6 6 2 8 4 6 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 6 2 8 4 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | 2 8 4 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 136 |
| 4 பரிசுகள் | 8 4 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1406 |
| 5 பரிசுகள் | 4 6 | ரூபா. 100/= | பரிசுகள் 13964 |
| 6 பரிசுகள் | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 138132 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 6 6 2 8 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | 6 6 2 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 148 |
| 9 பரிசுகள் | 6 6 2 | ரூபா. 100/= | பரிசுகள் 1410 |
| 10 பரிசுகள் | 6 6 | ரூபா. 50/= | பரிசுகள் 13773 |
| 11 பரிசுகள் | D | ரூபா. 20/= | பரிசுகள் 55249 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தம் பரிசுத் தொகை ரூபா. 14,547,670.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு
Rs. 18,474,104.00

தேசிய லொத்தர் சபை


## காபறேற்றர் ஆனந்தனின் அன்பு மனைவியின்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



நீலா பாலசிங்கம்
(காபறேற்றர் ஆனந்தன்)

மலர்வு: 09.08.1948
உதிர்வு: 09.03.2008

உள்ளத்தால் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் தெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஆனதம்மா
உங்கள் அன்பு முகத்தை எங்கள்
உள்ளம் என்றும் மறப்பதில்லை
உங்கள் உருவம் மறைந்தது உண்மை
உங்களின் பிரிவு வேதனை
என்றுமே மறையாத உண்மை
உங்கள் பிரிவுத்துயரில் தத்தளிக்கும்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
சி.ஆனந்தன் (காபறேற்றர்)
130, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


திரு செ.இளங்கோ


திரு அ.ஆனந்தராஜா


திரு ந.கந்தவனச்செல்வன்

எமது பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு செ.இளங்கோ, திரு அ.ஆனந்தராஜா, திரு ந.கந்தவனச்செல்வன் ஆகியோர் அதிபர் தரம் 2-IIஇற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக்கல்லூரி. (C/564851)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஆசிரியர் இடமாற்றங்கள் குறித்து
# ஆளுநருக்கு கல்முனை சங்கம் அறிக்கை

அம்பாறை, பெப். 15

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் கல்முனைக் கல்வி மாவட்டத்திலுள்ள கல்முனை, சம்மாந் துறை, அக்கரைப்பற்று ஆகிய கல்வி வல யங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் அரசியல் ரீதியான பழிவாங்கும் நோக்கில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் இடமாற் றம் செய்யப்பட்டு வருகின்றமையை கல் முனை மாவட்ட ஆசிரியர் நலன்புரிச் சங் கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

அத்துடன், இவ்விடமாற்றங்கள் பாட சாலையிலும் சுமுகமான செயற்பாட்டிற் குப் பெரும் தடையாக இருக்கிறது எனவும் கிழக்கு மாகாண கல்வியமைச்சு ஒரு முறை யான திட்டமில்லாத ஆசிரியர் இடமாற்றம் செய்வதை உடனடியாக நிறுத்த உத்தர விடுமாறு மாகாண ஆளுநர் ஜகான் ஜய விக்ரமவை கல்முனை மாவட்ட ஆசிரியர் நலன்புரிச் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் விடுத்த அறிக் கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

கல்முனை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நில வுகையில் அங்குள்ள ஆசிரியர்கள் சம்மாந் துறை வலயத்திற்கும் சம்மாந்துறை வல யத்தில் பின்தங்கிய பிரதேசமான இறக் காமம் பிரதேச ஆசிரியர்கள் அக்கரைப் பற்று வலயத்திற்கும், கல்முனை வலயத் திலுள்ள ஆசிரியர்கள் சம்மாந்துறை, அக்கரைப்பற்றுப் பிரதேசங்களுக்கும் எவ்வித காரணமுமின்றி இடமாற்றம் செய் யப்பட்டுள்ளனர்.

கடந்த 03.02.2010 ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததன் பிற்பாடு எவ்வித ஆசிரியர் இடமாற்றங்களையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மாகாணப் பிரதம செயலாளர் தமது அனுமதியின்றி மாகாணத்தினுள் எந்தவொரு இடமாற்றத் தையும் மாகாணச் செயலாளர்கள் மேற்கொள் ளக் கூடாது எனவும் அறிவித்திருந்த நிலையில் வேலியே பயிரை மேய்ந்த கதையாக சுற்றறிக்கையை வெளியிட்ட கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செய லாளர் இடமாற்றங்களை மேற்கொண்டிருப் பது மிகவும் கவலையளிக்கக் கூடிய விட யமாகவுள்ளது.

இந்த பலவீனத்தை பயன்படுத்திக் கொண்ட இம்மாவட்டத்திலுள்ள சில வலயக்கல்விப் பணிப்பாளார்கள் தாம் விரும்பியவாறு ஆசிரியர்களை ஏற்கனவே தேவைக்கு மேலதிகமாகவுள்ள பாடசாலை களில் தமக்கு வேண்டியவர்களை இட மாற்றம் செய்து ஒருசமநிலையற்ற தன்மையை பாடசாலைகளுக்கிடையில் ஏற்படுத்தி வருகின்றனர். இவ்வாறான செயற்பாடு களைக் கிழக்கு மாகாணக் கல்வியமைச் சின் மாகாணக் கல்வித் திணைக்களமும் கண் டும் காணாது போல் இருந்து வருகிறது.

எட்டு வருடத்திற்கு மேற்பட்ட சேவையை உடைய ஆசிரியர்களை இடமாற்றுகிறோம் எனக் கூறிக்கொண்டு ஆசிரியர்களை விரட்டி விரட்டி இடமாற்றம் செய்யும் கல்வி அதிகாரிகளும் கிழக்கு மாகாணக் கல்வி யமைச்சும் இருபது வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் அதிபர்களா கக் கடமையாற்றுவோரையும், இருபது வருடத்துக்கு மேலாக ஒருகல்வி அலு வலகத்தின் எழுதுவினைஞராகவோ அல் லது வேறு பதவிகளிலோ இருப்பவர்களை யும் இடமாற்றம் செய்யாமல் செல்லப் பிள்ளைகளாக வைத்திருப்பது என்ன நியாயம் என கேட்க விரும்புகிறோம்.

எனவே, உடனடியாக பழிவாங்கும் நோக் கிலான - அரசியல் ரீதியான ஆசிரிய இட மாற்றங்களை ரத்துச் செய்து அப்பாவி ஆசிரி யர்களுக்கு நியாயத்தை வழங்குமாறு கேட் டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (லி)

## புதிய ஆயுர்வேத வைத்தியசாலை சாய்ந்தமருதில் அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பு, பெப். 15

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரி வில் அமைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத வைத் தியசாலை திறப்பு விழா நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம். தௌபீக் தலை மையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார, சுதேசவைத் தியத்துறை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா பிரதம அதிதியாகவும், முன் னாள் மக்கள் தோட்ட முகாமைத்துவ மற் றும் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எஸ்.நிஜா முதீன் கௌரவ அதிதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை மகாகாணப் பணிப்பாளர் டாக்டர். திருமதி ஐ.தர்மராஜா, பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் டாக்டர். எம்.எச். இப்றா லெப்பை, சாய்ந்தமருது பிரதேச செயலா ளர் ஏ.எல்.எம்.சலீம் ஆகியோர்கள் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். (லி)

# தேர்தல் கடமையில் கல்வி நிர்வாக சேவையினர் அம்பாறை மாவட்டத்தில் அவமதிக்கப்பட்டனராம்

## ஆணையாளருக்குக் கடிதம்

அம்பாறை, பெப். 15

ஜனாதிபதித் தேர்தலின் போது கடமை யில் ஈடுபடுவதற்கென உத்தியோகத்தர் களைத் தெரிவு செய்தமையில் திகாமடுல் லத் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டனர் எனக் கிழக்கு மாகாண இலங்கைக் கல்வி நிர் வாக சேவை அதிகாரிகள் சங்கம் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. இவ்வாறான புறக்கணிப்புக் கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நடைபெறக் கூடாது என அச்சங்கம் கேட்டுள்ளது.

இதுகுறித்து அச்சங்கம் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருப்பவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் வாக்குப் பெட்டி கள் விநியோகித்தல், பாரமெடுத்தல், வாக்கெண்ணும் கடமைகளில் ஈடுபடு தல், வலய உதவித் தெரிவத்தாட்சி அலு வல்களாக நியமித்தல் போன்ற பணிகளில் அகில இலங்கை சமாந்தர சேவை உத்தி யோகத்தர்களை மாத்திரம் நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளர் சுற்றறிக்கை மூலம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையா ளர்களை கேட்டிருந்தார்.

ஆனால், அம்பாறை மாவட்டத்தில் தேர் தல் ஆணையாளரின் சுற்றுநிருபம் முற்றாக மீறப்படும் விதத்தில் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு அவர்களது தரம் என்பன கவ னத்தில் கொள்ளப்படவில்லை. இது மிக வும் கவலை தரும் விடயமாகும்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோ கத்தர் வாக்குப் பெட்டி விநியோகித்தல், கடமையில் ஈடுபடுத்தப்பட்டார் அவரின் கீழ் பணியாற்றும் மூன்றாம் வகுப்பு உத்தி யோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவி யாளர் சேவை தரத்திலுள்ள அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் வலயத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலு வலராக நியமிக்கப்பட்டார் -இவ்வாறான சம்பவங்கள் அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் சேவை மூப்புக் கூடிய பல அதிகாரிகள் வாக்கெண்ணும் கடமை யிலும், வாக்குப்பெட்டி விநியோகித்தல் கடமையிலும் ஈடுபடுத்தப்பட்டதுடன் அண்மையில் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட சில உத்தியோகத்தர்கள் வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவல ராக நியமிக்கப்பட்டனர்.

தேர்தல் ஆணையாளரின் சுற்றுநிருபத் திற்கு மாறாக இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தோரும், இலங்கை ஆசிரியர் சேவை யைச் சேர்ந்தோரும் நாடளாவிய அகில் இலங்கை சமாந்தர சேவையை சாராதோ ரையும் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்குச் சமமாக உதவித் தெரிவத் தாட்சி அலுவலராக நியமித்ததன் மூலம் கல் விப் பணிப்பாளர் அவமதிக்கப்பட்டுள்ளார்.

எனவே, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என கிழக்கு மாகாண இலங்கைக் கல்வி நிர் வாக சேவை அதிகாரிகள் சங்கம் கேட்டுக் கொள்கிறது. -என்றுள்ளது. (லி)




# பாடசாலைகளின் பௌதிகவளத் தேவைகளை பூர்த்தி செய்ய கிழக்கு கல்வி அமைச்சு ஏற்பாடு

அம்பாறை, பெப். 15

பாடசாலைகளின் பௌதீக வளத் தேவைகளை நிறைவு செய்வது தொடர் பாக கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு இந்த ஆண்டு விசேட செயற்றிட்டமொன் றை அமுல்படுத்தவுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் 15 கல்வி வலயப் பிரிவுகளிலும் இயங்கிவரும் பாடசாலைகளின் தேவைகள் தொடர்பாக வலயக்கல்விப்பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக் கீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக ஆராயும் விசேட கூட்ட மொன்று கடந்த செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெற் றது. மாகாணக்கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும், கல்வி வலய பொறியியலா ளர்கள் மற்றும் பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கடந்த ஆண்டு கிழக்கு மாகாணப் பாட சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் முன்னேற்றம் தொடர்பாக வும், இந்தவருடத்திற்கான புதிய வேலை கள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. பாடசாலைகளில் வகுப் பறைகள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், மலசலகூடங்கள் மற்றும் தளபாட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நிதி உதவி களை வழங்குவதற்கு மாகாணக் கல்விய மைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (லி)

# நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் மட்டு.மாவட்டத்தில் மும்முரம்

அம்பாறை, பெப். 15

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிகரமாக நடத்திமுடிப்பதற்கான ஆரம்ப கட்ட நட வடிக்கைகளை மாவட்டத் தேர்தல் அலுவல கம் மேற்கொண்டுள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதன் பொருட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் அலு வலக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இது தொடர்பான தகவல்கள் தற் போது சேகரிக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.கிருஷ்ணானந்தலிங்கம் தெரிவித்தார்.

கடந்த ஜனாபதித் தேர்தலின்போது பெறப்பட்ட தகவல்களில் ஏதேனும் மாற் றங்கள் இருப்பின் அதுபற்றி அறிக்கை சமர்ப் பிக்குமாறு திணைக்களத் தலைவர்களைக் கேட்டுள்ளார் எனவும் அவர் கூறினார்.

கடந்த 2008 ஆம் ஆண்டிற்கான வாக் காளர் பட்டியலின் பிரகாரம் பொதுத்தேர் தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 3 லட்சத்து 33 ஆயிரத்து 644 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்கள் வாக்களிப்பதற்காக மாவட்டத்தின் கல்குடா, பட்டிருப்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கியதாக 362 வாக்கெடுப்பு நிலை யங்கள் நிறுவப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பொதுத் தேர்தல் மூலமாக 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் அத்துடன், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச் சைக் குழுக்களின் வேட்பாளர் பட்டியலில் 8 வேட்பாளர்கள் இடம்பெறவுள்ளனர். (லி)

## மட்டு.வெல்லாவெளிப் பகுதியில் காட்டுயானைகள் அட்டகாசம்

மட்டக்களப்பு, பெப். 15

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லா வெளிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் நெற்பயிர்கள் சேதமாக்கப் பட்டு வருகின்றன என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

35 ஆம் கொலனி, 37 ஆம் கொலனி, காக் காச்சி வட்டை, சின்னவத்தை இறக்கத்து வட்டை போன்ற பிரதேசங்களில் இரவு வேளையில் நெற்பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

நோயில் இருந்து பாதுகாத்து அறுவடை செய்யும் காலம் நெருங்கும் இந்த வேளை யில் யானைகள் நாசம் செய்வதால் அறுவடை செய்யமுடியாமல் போகலாம் என மக்கள் அஞ்சு கின்றனர்.

எனவே, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து யானைகள் கிராமங்களுக்குள் ளும், வயல்களுக்குள்ளும் வருவதைத் தடுக் குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (லி)

# தேசிய அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ் வாக்குப் பலத்தை இழந்து வருகிறதாம்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துல்கர் நயீம் கூறுகிறார்

அம்பாறை, பெப். 15

தேசிய அரசியலில் தமது வாக்குப் பலத்தை சிறிலங்கா முஸ்லிம் இழந்துள்ளது. நடந்து முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தல் இதந்கு முன்னுதாரணமாகும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எல். துல் கர் நயீம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த மருதமுனைப் பிரதேச மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் தேசிய காங்கிரஸின் ஏற்பாட்டில் அண்மையில் மருதமுனையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய போதே துல்கர் நயீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் ஜனா திபதிக்கு வாக்களிக்கவில்லை என்று றவூப் ஹக்கீம் சொல்லமுடியாது. கணிசமான முஸ் லிம்கள்ஜனாதிபதிக்கு வாக்களித்துள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சரத் பொன் சேகாவுக்கு ஆதரவு வழங்கியதால் கிழக்கு மாகாணத்தில் ரவூப் ஹக்கீம் தப்பிப் பிழைத் துக் கொண்டார். கடந்த கால தேர்தல்களு டன் ஒப்பிடும் போது முஸ்லிம் காங்கிரஸ் தனது வாக்குப்பலத்தை இழந்துள்ளது.

ரவூப் ஹக்கீம், முஸ்லிம் காங்கிரஸின் மரச்சின்னத்தையும் இழந்து முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக செயற்பட்ட சக்திகளு டன் இணைந்து முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுத்து முஸ்லிம்களை ஏமாற்றி பேரம் பேசும் சக்தியை இழந்து வருகிறார்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலின் போது இரவு பகலாக இணைந்திருந்து [illegible] வாக்களித்து தேசிய காங்கிரஸி [illegible] ஜனாதிபதியின் வெற்றியில் பங் காளர்களான அனைவருக்கும் எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன். -என்றார்.

## கிழக்கு மாணவர்கள் மத்தியில் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி

மட்டக்களப்பு, பெப். 15

கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர் களுக்கான கையெழுத்து சஞ்சிகைப் போட் டியை இந்த வருடத்திலும் நடத்துவதற்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பாடசாலை மாணவர்க ளின் கலை, இலக்கிய ஆக்கத் திறமைகளை விருத்தி செய்யும்வகையிலும், கூட்டு முயற்சி தலைமைத்துவம் மற்றும் ஆளுமையை ஏற் படுத்தும் நோக்கத்துடனும் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் கையெழுத்து சஞ்சிகைப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

தரம் 03 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் பங்குபற்றும்வகையில் 6 பிரிவு களாக இந்தப்போட்டி நடத்தப்படவுள்ளதாக கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பாடசாலை ரீதியாகவும், வல யம், மாகாண ரீதியாகவும் சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களும், சான்றி தழ்களும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 21ஆம் திகதிக்கு முன் பாகவும், வலய ரீதியான தெரிவுகள் எதிர் வரும் ஜூன் மாதம் 21ஆம் திகதிக்கு முன்பாக வும் நடத்தப்படுவதுடன், கிழக்கு மாகாணத் தின் சிறந்த கையெழுத்து சஞ்சிகைகளைத் தெரிவு செய்யும் போட்டிகள் ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாகவும் நடத்தப்படவுள் ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி... இராசி பலன் பெப் 14 முதல் 20 வரை

தருபவர் - வித்யா



## மேஷம்

சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, கவனக் குறைவு, வீண் அலைச்சல், வாக்கு வாதம், மன அமைதி பாதிப்பு போன்ற பிரச்சினை களைச் சந்திக்கலாம். எதிலும் முன்யோசனையுடன் செயற்பட்டால் இழப்புகளைத் தவிர்க்கலாம். கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உடல் உபாதைகளால் சோர்வு ஏற்படும். லாபஸ்தானத்தில் குருவும், ஆறாம் இடத்தில் சனியும் இருப்பதால், உங்களை பல வகையிலும் முடுக்கி விட்டுக் கொண்டிருப்பர். காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். வளர்ந்த பிள்ளைகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த கடன் பாக்கிகள் வரலாம். வழக்கு விவகாரங்களில் சாதகம் உண்டு. தொழில் புரிவோருக்கு நல்ல வேலையாள்கள் அமையலாம். பிள்ளைகளின் நன்மை கருதி, எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சூரியன் சாதகமாக இருப்பதால், அரசு தொடர்பான காரியங்கள், நல்ல விதமாக முடியும். நீங்கள் கேட்காமலேயே உங்களுக்கு தந்தை உதவி செய்ய முன்வரலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால் சந்தோஷம், மகிழ்ச்சி அடைவீர்கள். உங்களுக்காக அவர்கள் உதவி செய்யலாம். கடிதத் தொடர்புகள் சாதகமாக அமையும். பதவி உயர்வு வாய்ப்புகள் சாதகமாகும்.



## இடபம்

ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். நண்பர்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம் அல்லது நண்பர்களுக்கு நீங்கள் உதவி செய்யலாம். பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், எதிலும் அவசரப் படாமல் நிதானமாக செயல்பட வேண்டும். சிறிய வேலைகளுக்காக பல முறை அலையலாம். பேராசைகளால் இழப்பு நேரும். பத்தாம் இடத்தில் இருக்கும் குரு, உங்களுக்கு பண விடயங்களில் பற்றாக்குறையை உண்டாக்குவதோடு, தொழில் ரீதியாகவும், அடிக்கடி குற்றம், குறை, வீண் பழிகள், மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்றல், விரும்பாத இடமாற்றம், பிள்ளைகளால் தொல்லை, வாக்குறுதி கொடுத்தவர்கள் அதை காப்பாற்றாமல் இழுத்தடிப்பதால், மன உளைச்சல் போன்றவற்றையும் ஏற்படுத்துவார். மூன்றாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடலாம். இரண்டாம் இடத்தில் கேதுவும், எட்டாம் இடத்தில் ராகுவும் இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். மாற்று மதத்தினர் வழியிலும் தொல்லைகள் உருவாகலாம். அரசியல், மருத்துவம், அரசாங்கம் தொடர்பான விடயங்களும் சாதகமாக இல்லை. மாமன், மைத்துனர்களால் பலன் கிடைக்காது.



## மிதுனம்

எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். கடன் பாக்கிகள் வசூலாகும். உறவினர்கள் நன்மை கருதி, சில காரியங்களைச் செய்வீர்கள். நினைத்த வேகத்தில் காரியங்கள் நடப்பதால், சந்தோஷம் அடைவீர்கள். உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஒன்பதாம் இடத்தில் இருக்கும் குரு, உங்களின் முயற்சிகளுக்கு பல வகையிலும் ஊக்கம் கொடுத்து கொண்டிருப்பார். வங்கிகளில் கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். சிலர் உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். பிள்ளைகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம் அதிகரிக்கும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். இருப்பினும், நான்காம் இடத்தில் சனி இருப்பதால், தொழில் ரீதியான வேலை நெருக்கடிகள், உழைப்பு அதிகரிக்கும். உடன் பணிபுரிவோர், உங்கள் தலையில் வேலைகளை சுமத்திவிட்டு, அவ்வப்போது அவர்கள் தப்பித்துக் கொள்வர். புதன், சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் பெற வாய்ப்பு உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், உறவினர்கள் சந்திப்பு, கேளிக்கை கொண்டாட்டங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் உதவிகரமாக இருப்பர். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்கள் எதிர்பார்த்த வகையில் இருக்காது. அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல் வாங்கல்களிலும் கவனம் அவசியம்.



## கடகம்

இந்த வாரம் பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகளை தவறாக செய்து விட்டு, மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். உடல் ரீதியான சிறு உபாதைகளால், ஊக்கம், உற்சாகம் குறையலாம். பணவரவுகளைப் பெறலாம். சிலரை பாராட்டிப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். சூரியன், புதன், செவ்வாய் சாதகமற்ற நிலையில் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள் வகையில் சிரமங்களே. அரசியல்வாதிகள் எடுத்தோம், கவிழ்த்தோம் என, எந்த விடயத்திலும் செயல்படாமல் பொறுமை காட்டுவது நல்லது. தந்தை, பிள்ளைகள் இடையே பிரச்சினை வராமல் இருக்க அமைதியாக செயல்படுவது நன்மை தரும். ஏதோ ஒரு வகையில் அடிக்கடி கோபம், வேகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் நடக்கலாம் என்பதால், உணர்ச்சி வசப்பட்டு பேச வேண்டாம். நிலம், பூமி, வீடு பராமரிப்பு போன்ற விடயங்களும் சுற்றலில் விடலாம். அரசு தொடர்பான காரியங்கள், அதிகாரிகளை சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள், எதிர் பார்த்த உதவிகள் பெறுவது போன்றவற்றிலும் இடர்ப்பாடுகள் நேரும். சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.



## சிங்கம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆட்படலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம். கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆட்படலாம். கடன் பாக்கிகளை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். குழப்பங்கள், தடுமாற்றங்கள், தேவையற்ற பயம் போன்றவை ஆட்கொள்ளும். மற்றவர்களை நம்பி எந்தக் காரியங்களிலும் இறங்க வேண்டாம். விரயஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள், நிலம், பூமி வகையில் செலவுகள், சிரமங்கள் நேரும். பொறியியல் பணியாளர்கள் கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். சூரியன், புதன் சாதகமான நிலையில் இருப்பதால், தந்தை வழியில் உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் மூலம் முடிக்கமுற்பட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மருத்துவ சிகிச்சைகள் மனதிற்கு நிம்மதிதரும் வகையில் அமையும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கெடுபடிகளில் இருந்து விடுபட்டு, அவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அவர்களால் சந்தோஷ மான அனுபவங் களைப் பெறலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். குரு ஏழாம் இடத்தில் இருந்து ராசியைப் பார்ப்பதால், தேக ஆரோக்கியம் சிறப்பாக அமையும். மதிப்பு, கௌரவத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். வேலை வாய்ப்பை எதிர்நோக்கும் பிள்ளைகள் நல்ல வாய்ப்புகளைப் பெறலாம். சுப காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். கடன் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். பணவரவுகள் பெறலாம்.



## கன்னி

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். நாடி வந்தவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். எந்த வேலையையும் பிறகு என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். அலைச்சல், திரிச்சல் உண்டு. உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். ஜென்மத்தில் சனியும், ஆறாம் இடத்தில் குருவும் இருப்ப தால், எதிலும் நினைத்தது நடக்காமல் முட்டுக்கட்டை ஏற்படலாம். சுப காரிய விடயங்களும் திருப்திகரமாக இருக்காது. பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைப்பதும் கடினமே. மனைவி, பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் தள்ளி வைக்கலாம். கொடுத்த பணம் வராமல் இழுத்தடிக்கலாம். மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வராமல் இருக்க, எதிலும் எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும். சுக்கிரன் ஆறாம் இடத்தில் இருப்பதால், பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும்படாமல் நடந்து கொள்ளவேண்டும். திடீர் பயணங்களால் தண்டச் செலவுகள் ஏற்படலாம். கணவன், மனைவி உறவிலும் உரசல்கள் உண்டாகும். செவ்வாய் சாதகமான நிலையில் இருப்பதால், நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையும். சகோதரர்களுடன் ஏற்பட்ட பகை விலகி, பாசம் அதிகரிக்கும். அவர்களுக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் சிரமங்களே. சுபச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பாராத சம்பவங்கள் நடக்கலாம். திட்டமிட்ட வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம்.



## துலாம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். குடும்பத்திற்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் உங்களின் வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். புதியவர்கள் நட்பு கிடைக்கும். பெரிய மனிதர்கள் உதவிகரமாக இருப்பர். மன ஊக்கத்தை, உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். விரயஸ்தானத்தில் உள்ள சனி, உங்களை நினைத்த வேகத்திற்கு செயற்படவிடாமல் தடை போட்டுக் கொண்டிருப்பார். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் சிக்கலில் மாட்டாமல் இருக்க, எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். பாடுபடும் அளவுக்கு பலன் இல்லையே என்ற மனக்குறைகள் அடிக்கடி உங்களை ஆட்கொள்ளும். இருப்பினும், ஐந்தாம் இடத்தில் உள்ள குரு, தேவையான பணத்தை புரட்டிக் கொள்ள உதவி செய்வார். பெரிய பொறுப்புகளை உறவினர்கள் உங்களை நம்ப ஒப்படைக்கலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள் பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்க போட்ட திட்டமும் நிறைவேறும். புதன் சாதகமான நிலையில், வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். தந்தை வழி உறவுகள் வழியில் அன்புத் தொல்லைகளை எதிர்கொள்ளலாம். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர்.



## விருச்சிகம்

இந்த வாரம் அடுக்கடுக்காக குவியும் வேலைகளை அசராமல் செயது முடிப்பீர்கள். தம்பதியர் இடையே நெருக்கம் உண்டாகும். ஏதோ ஒரு வழியில் பண வரவுகளைப் பெறலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். அண்டை, அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். லாப ஸ்தானத் தில் சனி இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். வருமானம் அதிகரித்து வசதி, வாய்ப்புகள் கூடும். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விவகாரங்கள் சாதகமாக அமையும். கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகளை எல்லாம் இப்போது ஈடு செய்யும் வாய்ப்பு உருவாகும். நான்காம் இடத்தில் இருக்கும் குரு, தொழில் ஸ்தானமான பத்தாம் இடத்தைப் பார்ப்பதால், பதவி உயர்வு வாய்ப்பு சாதகமாகும். புதிய தொழிலுக்கு மாற மேற்கொண்ட முயற்சிகளில் சாதகமான முன்னேற்றம் காணலாம். சூரியன் மூன்றாம் இடத்தில் இருப்பதால், அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள், தந்தை தொடர்பான விடயங்கள் எல்லாம் தங்கு தடையின்றி முடிவுக்கு வரும். அரசியல்வாதிகளை நம் பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரும். எதிர்ப்புகள் விலகி ஏற்றம் பெறுவீர்கள். நான்காம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், பயணங்களால் செலவுகள் ஏற்படலாம். பொழுது போக்கு விடயங்கள், விலை உயர்ந்த பொருள்கள் வாங்குதல் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். இரண்டாம் இடத்தில் ராகு இருப்பதால், பேச்சில் கடுமை, குதர்க்கத்தை குறைத்து அன்பாகப் பேச வேண்டும்.



## தனுசு

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிறிய வேலைகளுக்காக பல முறை அலைய நேரிடலாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆட்படலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். அதே நேரத்தில் பணிபுரியும் இடத்திலோ, வீட்டிலோ உள்ள சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகளால் எரிச்சல் அடையலாம். பத்தாம் இடத்தில் உள்ள சனியால், எந்த வேலையையும் சுலபமாக செய்து சம்பாதிக்க முடியாத வகையில் வேலைப்பளு அதிகரிக்கும். மற்றவர்களின் வேலையைக் கூட நீங்கள் சேர்த்துசெய்யும் சூழ்நிலை உருவாகும். எதுவும் நினைத்த வேகத்திற்கு முடியாமல் இழுத்தடிக்கலாம். பத்தில் இருக்கும் சனி, நான்காம் இடத்தைப் பார்ப்பதால், தாயார் உடல் நலன் தொடர்பான விஷயங்களில் கவனம் அவசியம். மேலும், சுக சவுகர்யங்களை அனுபவிப்பதிலும் தடை ஏற்படலாம். ஜென்மத்தில் ராகுவும், ஏழில் கேதுவும் இருப்ப தால், கூட்டுத் தொழில் விவகாரங்களில் பொறுமை அவசியம். திருமண முயற்சிகளில் தடைகளை, இழுபறிகளைச் சந்திக்கலாம். கணவன், மனைவி உறவிலும் அவ்வப் போது உரசல்கள் உருவாகி நல்லிணக் கத்தைப் பாதிக்கலாம். இரண்டாம் இடத்தில் சூரியனும், எட்டில் செவ்வாயும் இருப்பதால், நிதானமாக செயல்பட முடியாமல் அவ்வப்போது கோபம், எரிச்சலுக்கு ஆளாக லாம். தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். பெண்களால் சந்தோஷம் உண்டு. பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள். அரசாங்கம், அதிகாரிகள், தந்தை தொடர்பான விடயங்கள் எல்லாம் தங்கு தடையின்றி முடிவுக்கு வரும். அரசியல் வாதிகளை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரும்.



## மகரம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். சிரமத்தில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு அவசர உதவி செய்வீர்கள். எதற்காகவும் அலட்டிக் கொள்ளாமல் எந்த வேலையையும் நிதானமாகச் செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடை யும். செலவு, அலைச்சல் உண்டு. ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம். ஒன்பதாம் இடத்தில் இருக்கும் சனியால் பெரிய அளவில் பிரச்சினைகள் இல்லை என்றாலும், கடன் பிரச்சினைகளால் சிலர் அவதிகளுக்கு ஆளாகலாம். சொத்தை விற்கும் முயற்சிகளில் ஈடுபடலாம். இரண்டாம் இடத்தில் குரு இருப்பதால், வருமானம் பல வழிகளில் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கலாம். குடும்பத்தில் பிள்ளைகளின் சுப காரியங்களை நடத்த முயற்சி எடுப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்போடு செயற்பட்டு உங்களுக்கு பெருமை சேர்ப்பர். ஜென்ம ராசியில் சூரியன், புதனும், ஏழாம் இடத்தில் செவ்வாயும் சஞ்சரிப்பதால், எதிலும் நிதானம் இழக்காமல் பொறுமையாக செயற்பட வேண்டும். மற்றவர்களிடம் சிடுசிடுப்பாக, கோபமாக நடந்து கொள்வதை தவிர்க்கவும், உடல் ரீதியான உபாதைகளால் அவ்வப்போது அவதிப்படலாம். கணவன், மனைவி உறவில் அடிக்கடி மோதல் உருவாகலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால் சந்தோஷம் உண்டு. உற்சாகம் கூடும். உதிரி வரவுகளைப் பெறலாம்.



## கும்பம்

இந்த வாரம் காரிய வெற்றி உண்டு. குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக வராமல் இழுத்தடித்த பணவரவுகள் வரலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். உறவினர்களை உபசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். அஷ்டமத்தில் சனியும், ஜென்மத்தில் குருவும் இருப்பதால், எந்தப் பிரச்சினையும் எளிதாக முடியாமல் சவ்வாக இழுத்தடிக்கலாம். பணிபுரிவோர் கவனக் குறைவான செயல்பாடுகளால் அடிக்கடி நிர்வாகத்தினரின் குற்றம் குறைகளுக்கு ஆளாகலாம். சிலர் விரும்பத்தகாத மாற்றங்களைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்கு கிடைத்த வாய்ப்புகள், வசதிகள் உங்களுக்கு கிடைக்கவில்லையே என வருத்தம் அடைவீர்கள். சிலர் கடனுக்கு வட்டி கட்டுவதாலும் கவலை அடையலாம். சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், சகோதரிகள், உறவுப் பெண்கள், மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். அவர்கள் கேட்ட உதவிகளையும் செய்வீர்கள். மற்றவர்கள் மத்தியில் பகட்டாக தோன்றும் வகையில், ஆடம்பரமான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். பொழுது போக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். சூரியன், புதன் விரயஸ்தானத்தில் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் சிரமங்களே. தந்தையின் செயற்பாடுகள் பிடிக்காமல் அடிக்கடி அவர் மீது கோபப்படலாம். ராகு சாதகமாக இருப்பதால் மாற்று மதத்தினர் உதவி கிடைக்கும். செலவு, அலைச்சல் உண்டு, மனக்குழப்பங்கள் அதிகரிக்கும்.



## மீனம்

இந்த வாரம் சந்தோஷமான, சங்கடமான அனுபவங்களை கலந்து எதிர்கொள்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். எதிர் பாராத பணவரவுகளைப் பெறலாம். ஏழாம் இடத்தில் சனியும், விரயஸ்தானத்தில் குருவும் இருப்பதால், பணம் வந்தாலும், அது வந்த வேகத்தில் கரைந்து கொண்டிருக்கும். தேக ஆரோக்கிய பராமரிப்பதற்காகவோ, வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் செல்லவோ, தொழில் விஸ்தரிப்பதற்காகவோ கணிசமான தொகையை செலவிடலாம். செய்யும் தொழிலில் திருப்தி இல்லாத நிலைமை பலருக்கு காணப்படும். அதனால், இதை செய்துவிடலாமா, அதை செய்து விடலாமா என, மனம் அலைபாயும். அகல கால் வைக்காமல் நிதானமாகச் செயற்படுவது அவசியம். எந்த விடயத்தையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நன்மைதரும். செவ்வாய் நீச்ச நிலையில் வக்கிர கதியில் இருப்பதால், பணத் தட்டுப்பாடு அதிகரிக்கும். உடன் பிறப்புகள் வழியில் தொல்லைகளைச் சந்திக்கலாம். நிலம், பூமி விவகாரங்களும் சாதகமாக அமையாது. சூரியன், புதன் லாபஸ்தானத்தில் இருப்பதால், அரச காரியங்கள் அனுகூலமாக முடியும். கடனுதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் செல்வாக்கைப் பெறுவர். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம்பொருள் உற்பத்தியாளர்களுக்குச் சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை

## நிர்வாக உத்தியோகத்தர் புவனேசமூர்த்தி தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.12

பனம் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் வாய்ப்புகளற்ற நிலையிலுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க யாழ்.மாவட்ட பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது என அதன் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.புவனேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

யாழ்.மாவட்டத்தின் பனம்பொருள் உற்பத்திகளுக்குத் தென்னிலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் அதிக கிராக்கி நிலவுகிறது.

நாட்டில் யுத்தம் நிறைவடைந்த நிலையில் - ஏ-9 வீதி திறந்ததன் பின்னர் - தென்னிலங்கைப் பயணிகள் மட்டுமன்றி, வெளிநாட்டவர்களும் எமது மாவட்டப் பனம் பொருள் உற்பத்திகளை அதிகம் விரும்பி நுகரும் நிலை தற்போது ஏற்பட் டுள்ளது.

இதன் காரணமாகப் பனம் பொருள் உற்பத்திகளுக்குத் தற்போது பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்த நிலையில் பனம் பொருள்களை அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதே வேளை உள்ளூர் உற்பத்தியாளர்களைத் தேடிச் செல்லும் சில வியாபாரிகள், மிகக் குறைந்த விலைக்கு அவற்றைக் கொள்வனவு செய்து பின்னர் அதிக இலாபத்துக்கு விற்று வருகின்றனர். இதன் காரணமாக உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உரிய வருமானம் கிடைக்காமல் போகிறது. தமது உற்பத்திகளுக்கு உரிய விலையும் சந்தைவாய்ப்பும் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அந்த உற்பத்தியாளர்கள் தமது தொழிலைக் கைவிடும் அபாய நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

எனவேதான் நுகர்வுக்கு ஏற்ப உற்பத்திகளை அதிகரிக்கும் அதேவேளை அதன் உற்பத்தியாளரும் பாதிப்படையாத வகையில் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதன் அங்கமாக பனம் பொருள் உற்பத்திகளுக்குச் சந்தை வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கும் அதேவேளை உற்பத்தியாளருக்கான பயிற்சிகள், தொழில்நுட்ப ஆலோசனைகள், சந்தைப்படுத்துவதற்கான நவீன உத்திகள் என்பனவற்றை வழங்க நாம் தயாராக இருக்கிறோம்.

பனம்பொருள் உற்பத்தியை மேற்கொள்ள சகல உற்பத்தியாளர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு பயனடைந்து கொள்ள முடியும் - என்றார். (04-14)

# 'ரெலிக்கொம்' வாடிக்கையாளர்களுக்கு 'பிரஸ்டிஜ்' அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.மாவட்டத்தில் 250 பேருக்கு 'பிரஸ்டிஜ்' அட்டைகள் விநியோகிக்கப் பட்டுள்ளன.

சிறிலங்கா ரெலிக்கொம்மின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவானந்தன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

'ரெலிக்கொம்' நிறுவனத்தில் நீண்ட கால வாடிக்கையாளர்களுக்கும் நிறுவனத்திற்கு அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுத்தவர்களுக்குமே இந்தப் 'பிரஸ்டிஜ்' அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த அட்டைமூலம் வாடிக்கையாளர்கள் தமது கொடுப்பனவு பட்டியலுக்கான தொகையினைச் செலுத்துதல் போன்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

ரெலிக்கொம் அலுவலகங்கள் மற்றும் 'ரெலிக்ஷொப்களில் தெரிவு செய்யப்பட்ட பொருள்களுக்கும் மற்றும் சேவைகளுக்கும் விசேட கழிவுகளையும் இந்த அட்டைமூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

அதனைவிட இந்த அட்டை மூலம் விசேட சலுகைகளும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும்- அவர் கூறினார். (04-224)

# இப்படியும் கொண்டாடலாம் காதலர் தினத்தை; இரத்ததானம் செய்தனர் 35 மாணவர்கள்!

காதலர் தினத்தை முன்னிட்டு சமூக சேவையை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் 35 பேர் நேற்று இரத்ததானம் செய்தனர்.

சமூக சேவையை நோக்கமாகக் கொண்டு இம்மாணவர்கள் குருதிக்கொடை வழங்கினர். இவர்களில் 5 பேர் பெண்களாவர்.

காதலர் தினத்தை முன்னிட்டு களியாட்டங்களிலும், ஆடம்பரக் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டு கலாசாரத்துக்கு குந்தகம் விளைவிக்கும் இளைஞர்கள் மத்தி யில் உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் இத்தகைய உயரிய செயற்பாட்டை பலரும் பாராட்டியுள்ளனர்.

காதலர் தினத்தை முன்னிட்டு வருடா வருடம் உயர் தொழில்நுட்ப மாணவர்களைக் கொண்டு இரத்ததானம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04-325)

# மழைநீரால் அழிந்துபோன வீதிக்கடவைக் குறியீடுகள்

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.நகரில் உள்ள பிரதான வீதிகளில் பலவற்றிலும் வரையப்பட்டிருந்த வீதிக் கடவைக்கான சமிக்ஞை வர்ணக்கோடுகள் அழிந்து காணப்படுகின்றன.

ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லிவீதி போன்ற போக்குவரத்து நெரிசல்மிக்க முக்கிய வீதிக் கடவைக் குறியீட்டு வர்ணங்கள் அழிந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்த வீதிக் கடவை வர்ணங்கள் அழிந்தால் பாதசாரிகள் வீதிகளை கடந்து செல்வதில் சிரமப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழையினாலேயே இந்த வீதிக் கடவைகளின் வர்ணம் அழிய காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-224)




# குடாநாட்டில் நிலவும் சில்லறைக் காசுத் தட்டுப்பாட்டால் தினமும் தமக்குரிய மீதிப்பணத்தை தாரைவார்க்கும் மக்கள்

நல்லூர்,பெப்.12

குடாநாட்டில் நிலவும் சில்லறைக் காசுத் தட்டுப்பாட்டினால் யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவான் செல்லும் பயணிகள் தாம் வழங்கும் பணத்திற்கான மீதியை வாங்க முடியாத நிலையில் உள்ளதாக யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவு, நயினாதீவு போன்ற இடங்களுக்குப் பிரயாணம் செய்யும் அரச உத்தியோகத்தர்கள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்கான பஸ் கட்டணம் 57/= ஆகும். இதற்காகப் பல பயணிகள் 60 ரூபாவை பஸ் நடத்துனரிடம் கொடுத்து தமக்குரிய பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு மிகுதியைக் கேட்டால் சில்லறை இல்லை இறங்கும்போது தருவதாகப் பதிலளிக்கிறார்கள்.

ஆனால் இறங்குமிடத்தில் சில்லறை இல்லை என்று கையை விரித்து விடுவதாகவும் சில நடத்துனர்கள் இந்தக் காசில் என்ன கோட்டையா கட்டி விடுவார். சில்லறை இல்லை உங்களிடம் இருந்தால் தாருங்கள் என்று கூறிச் சமாளித்து விடுவதாகவும் வேறு வழியில்லாமல் தாங்கள் மிகுதிப் பணத்தை வாங்காமலேயே திரும்புவதாகவும் கூறும் அரச ஊழியர்கள் பஸ் பயணத்திற்கான கட்டணமும் செலுத்தி பஸ்ஸில் ஏறியதற்குத் தண்டப் பணமாக மிகுதித் தொகையைக் கைவிட்டுத் திரும்ப வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

தற்போது குடாநாட்டில் சுமார் 70இற்கும் அதிகமான வங்கிக் கிளைகள் உள்ளன. இந்தக் கிளைகள் சில்லறை விடயத்தில் மக்களுக்கு உதவுவதில்லை எனவும் இதனால் சாதாரண மக்கள் தினமும் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஏதாவது ஒரு வர்த்தக நிலையம் உட்பட பலருக்குத் தாரை வார்க்க வேண்டியுள்ளதாகவும் இவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (ரி-111)

# 'றேசிங்' மோட்டார் சைக்கிள்களில் யாழ்.வரும் தெற்கு இளைஞர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

ஏ-9 தரைப்பாதையூடாக நேற்று முன்தினம் சனிக்கிழமை நூற்றுக்கணக்கான 'றேசிங்' மோட்டார் சைக்கிள் மூலம் தென்னிலங்கை இளைஞர்கள் பலர் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா மேற்கொண்டனர்.

வார இறுதிநாள் விடுதிமுறையை பயன்படுத்தி தென்னிலங்கை இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் யாழ்.குடாநாட்டுக்கு வந்து பல்வேறு இடங்களையும் சுற்றிப் பார்வையிட்டனர். அதேசமயம் தென்பகுதிச் சுற்றுலா பயணிகளின் வருகையும் கடந்த வாரத்தில் மீண்டும் அதிகரித்துக் காணப்பட்டது.


இந்தச் சுற்றுலா பயணிகள் நகரின் பல்வேறு இடங்களிலும் தங்கியிருந்து குடாநாட்டை பார்வையிட்டு செல்கின்றனர். இதனால் குடாநாடு கடந்த சில நாள்களாகக் களைகட்டிக் காணப்படுகின்றது. (04-224)

## கூட்டம்

கோப்பாய்,பெப்.15

யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (201-72)

# தென்னிலங்கைச் செவ்விளநீர் குடாநாட்டில் அமோக விற்பனை!



யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பம் வறட்சி மக்களை வாட்டி வதைத்தெடுக்கும் நிலையில் மக்களின் தாகத்தைத் தீர்க்க பெருமளவிலான செவ்விளநீர்கள் நகரின் பல இடங்களிலும் குவிக்கப்பட்டு விற்கப்படுகின்றன.

நேற்றும், நேற்றுமுன் தினமும் கனரக வாகனங்கள் மூலம் பெரும் எண்ணிக்கையான செவ்விளநீர்கள் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தச் செவ்விளநீரை மக்கள் ஆவலோடு வாங்கிப் பருகி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

சுற்றுலாப் பயணிகளும் குடாநாட்டு வெம்மையால் உண்டான தாகத்தைத் தணிக்கும் வகையில் செவ்விளநீர்களைக் குலையாக வாங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள செவ்விளநீர் ஒன்று 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (04-224)


# குமாரசுவாமி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்



முன்னாள் அதிபர் குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய 'ருவென்ரி - 20' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று யாழ்.இந்துக்கலல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கே.ஸி.ஸி.ஸி. அணியைத் தோற்கடித்து கிண்ணத்தை ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் சுவீகரித்துக்கொண்டது. இறுதியாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபர் ஈ.எஸ்.நாகரத்னம் ஆகியோர் உரைநிகழ்த்துவதை முதல் இரு படங்களிலும் ஜொலிஸ்ரார் அணித் தலைவரிடம் வெற்றிக்கிண்ணத்தை பிரதம விருந்தினர் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் இசுறு பாடசாலைக்கான புதிய கட்டடத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு, கல்லூரி அதிபர் வே.சிவ சிதம்பரம் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராசா, வடமாகாண அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப் பாளரும் திட்டமிடல் பொறுப்பாளருமான வி.எஸ்.சிவசுவாமிநாதன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திர சிறி மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: மூர்த்தி)*

# சரத் பொன்சேகா தமது நியாயங்களை இராணுவ நீதிமன்றில் முன்வைக்கலாம்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 15

இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா தமது தரப்பு நியாயங்களை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மூலமாகவோ இல்லையேல் சட்டத்தரணிகள் மூலமாகவோ இராணுவ நீதிமன்றத்தில் முன்வைக்கலாம் - என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவிற்கு எதிராக சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இராணுவமும் பாதுகாப்பு அமைச்சும் ஈடுபட்டுள்ளன. அதற்கு பின்னரே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியவை வருமாறு -

ஜெனரல் பொன்சேகா மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றும் முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு அதன் பிரகாரம் தயாரிக்கப்படும் குற்றப்பத்திரிகை தேவையான சட்ட நடவடிக்கைகளுக்காக இராணுவ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

### அரசியல் காரணத்துக்காக கைது செய்யப்படவில்லை

இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும்போது அவர் தான் விரும்பும் சட்டத்தரணிகளூடாக தம்மை நியாயப்படுத்துவதற்கான காரணங்களை முன்வைக்கவோ, மேன்முறையீடு செய்யவோ அல்லது இராணுவ நீதிமன்றத்தால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்குச் செல்லவோ முடியும். அதற்கான சட்ட அனுமதி அவருக்கு உண்டு .

ஜெனரல் பொன்சேகாவின் கைதானது இராணுவ ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்திட்டங்களுக்கமைய எடுக்கப்பட்டதேயன்றி எந்தவோர் அரசியல் சூழலுக்காகவும் மேற்கொள்ளப்பட்டதல்ல.

இராணுவ சட்டத்தின் பிரகாரமும், சட்டத்தை மீறிச் செயற்பட்டு வருகின்றார் என்பது உறுதியானதன் பின்னரே பொன்சேகா கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பொன்சேகா, தற்போது கடற்படையினரின் பாதுகாப்பின் கீழ் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் தங்கியுள்ள குடிமனையில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

### எந்தநேரமும் சந்திக்க அனுமதி

இந்நிலையில் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் தொடர்பில் எவருக்கும் தெரியாது என்று ஜெனரல் பொன்சேகாவின் மனைவியான அனோமா பொன்சேகா குற்றஞ்சாட்டியிருந்தார். அத்துடன் அவர் தனது கணவரைச் சந்திப்பதற்காக விடுத்திருந்த வேண்டுகோளை கருத்திற் கொண்ட பாதுகாப்பு அமைச்சு அதற்கு அனுமதி வழங்கியது. அவருடன் சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷவும் ஜெனரல் பொன்சோகவைச் சென்று சந்தித்தார்.

இதேவேளை ஜெனரல் பொன்சேகாவுக்கான உணவினை எடுத்துக் கொண்டு அவரை எந்நேரமும் போய் சந்திப்பதற்கான அனுமதியும் பாதுகாப்பு அமைச்சால் நேற்றுமுன்தினம் முதல் அனோமா பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருக்குத் தேவையான அதிகூடிய பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதிகள் போன்றன இராணுவத்தினரால் முழுமையாக வழங்கப்பட்டு வருகின்றன - என்றார்.

# கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆனைக்கோட்டை கலைஒளி சம்பியன்

வலி.வடக்கு, பெப். 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மாதகல் காந்தி ஜீ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகமும் ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் கலைஒளி விளையாட்டுக்கழகம் வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் கலையொளி விளையாட்டுக்கழகம் 25:19, 25:11, 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் தனதாக்கி, மாவட்ட மட்டப் போட்டியில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது. (4-86)

# ராணுவ அதிகாரியின் முன் தோன்ற முன்னாள் தளபதி பொன்சேகா மறுப்பு

## சிவிலியன் என்பதால் ராணுவச் சட்டம் செல்லாது என்கிறார்

கொழும்பு.பெப்.15

தம்மை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள ராணுவ அதிகாரியின் முன் தோன்றுவதற்கு முன்னாள் ராணுவத் தளபதியும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்டவருமான ஜெனரல் சரத்பொன்சேகா திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்து விட்டதாகத் தெரியவருகின்றது.

தாம் ஒரு பொது மகன் (சிவிலியன்) என்று தெரிவித்துள்ள ஜெனரல் பொன்சேகா, தம்மை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட ராணுவ உயர் அதிகாரியின் முன் தோன்ற மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ராணுவ நீதிமன்றின் முன் விசாரிக்கப்படுவதற்கு முன் சாட்சியங்களை சீர் படுத்துவதற்காக ராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரியா தமது பிரதம அதிகாரிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் தயா ரட்னாயக்கவை நியமித்துள்ளார். அரசை கவிழ்ப்பதற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்வதற்கும் சதி முயற்சியில் ஈடுபட்டமை தொடர்பான சாட்சியங்களை எழுத்து மூலம் பதிவு செய்து சமர்ப்பிப்பதற்காக இவ்வதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த சாட்சிகளின் வாக்கு மூலங்கள் ஜெனரல் பொன்சேகாவின் முன்னிலையில் பதியப்படவிருந்தன. அவர்களை குறுக்குவிசாரணை செய்வதற்கு ஜெனரல் பொன்சேகாவுக்கு சட்ட ரீதியான உரிமை உண்டு. ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த விசாரணையின் போது ஜெனரல் பொன்சேகா தாம் ஒருபொது மகன் (சிவிலியன்) என்பதால் ராணுவ சட்டத்துக்குக் கட்டுப்பட்டவன் அல்லன்றநிலைப்பாட்டை எடுத்து ராணுவ விசாரணையை எதிர்கொள்ள மறுத்து விட்டார்.

சாட்சியங்களின் பதிவுகள்மேஜர்ஜெனரல் ரட்னாயக்காவால் கூற்படைதலைமையகத்தின் அதிகாரிகள் பிரிவு மண்டபத்தில் மேற் கொள்ளப்படுவதாக இருந்தன.

ஜெனரல் பொன்சேகாவின் இந்த மறுப்பானது ஒரு சிக்கலான சட்டப்பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. அவர் தொடர்ந்து ஒத்துழைக்க மறுக்கும் நிலை ஏற்பட்டால் என்ன செய்வது என்பதே இப்போதுள்ள கேள்வி. (ப)


# மரண அறிவித்தல்

## செல்லத்துரை ஆனந்தராசா



அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் வடக்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஆனந்தராசா நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் பாசமிகு கணவரும் அஜந்தா (லண்டன்), நித்தியா (ஜேர்மனி), கார்த்திகா, ஜெயராஜ், சோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் முருகானந்தன் (லண்டன்), பிரதீப்குமார் (ஜேர்மனி), இராகவன் (தபாலகம், சுழிபுரம்) ஆகியோரின் மாமனாரும் யதிஷா, மகிஸ், மணாஸ், ரவீனா, கஜனி, வைஷ்ணவி, நிதிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான துரைராசா, சின்ராசா, இராசமணி மற்றும் இரத்தினமணி, செல்வமணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் வடக்கு, சுழிபுரம்.*
*தொ.பே: 0213008856*

(94868)

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14.04.1942



உதிர்வு
26.02.2009

திருமதி
## திவாகரமூர்த்தி பாக்கியலட்சுமி

திதி: பிரதமை

அன்பு மொழிபேசி அரவணைத்த அம்மாவே
காலனவன் செய்த கொடுமையினால் ஏங்கித்
தவிக்கின்றோம்.

வாசலிலே காத்திருந்து அரவணைத்தகைகள்
ஓர் ஆண்டாய் எம்மை விட்டு பிரிந்ததேனோ அம்மா
உன் மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ் நாளில்
காணக்கிடைக்குமோ?

உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

"அருள்நிதி வாசா",
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுடன்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(94866)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை

யாழ்.குடாநாட்டுக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள கிராமம் நாவாந்துறை. இக் கிரமத்திலே அமைந்துள்ள பாடசாலைகளில் ஒன்று நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை. 1871ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் மறைக் கல்வியைப் போதிக்கும் பாடசாலையாக ஆரம்பிக்கப் பட்டு படிப்படியாக எண் எழுத்து அடிப் படையை மாணவர்களுக்கு போதிக்கும் பாடசாலையாக மாற்றம் பெற்றது. காலப் போக்கில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்ட பாடசாலையாக பிரகடனப்படுத்தப் பட்டது. ஆரம்பத்தில் தரம் 5 வரையிலான வகுப்புக்களே இப்பாடசாலையில் இருந்துள்ளன. பின் கால மாற்றத்திலும், பாடசாலை வளர்ச்சியிலும் முன்னேற்றம் ஏற்பட்டதால் படிப்படியாக வகுப்புக்கள் உயர்வடைந்து தரம் 11 வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆரம்பத்தில் இருந்ததைவிட தற்போது இந்தப் பாடசாலை வளர்ச்சியடைந்ததற்குக் காரணமானவர்கள் இக்கிராம பிரமுகர்களும் அபிவிருத்திச் சங்கத்தினரும் மற்றும் பழைய மாணவர்களுமே என இப் பாடசாலையின் அதிபர் எவ்.எக்ஸ். அன்ரன் தெரிவித்துள்ளார். அதிபரின் முழுமையான பங்களிப்பாலும் இப்பாடசாலை முன்னேற்றம் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலையில் ஆண், பெண் அடங்கலாக 789 மாணவர்வரை கல்வி கற்கின்றனர். ஆரம்ப காலத்தில் 1200 மாணவர்கள் வரையில் கல்வி கற்ற போதிலும் 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தசூழல் காரணமாக மக்கள் புலம் பெயர்ந்து சென்றதால் இப் பாடசாலை மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. மீண்டும் தற்போது நாட்டின் அமைதிச் சூழ்நிலை காரணமாக மீள் குடியேறிய மக்கள் தங்கள் பிள்ளைகளை இப் பாடசாலையிலேயே இணைத்துள்ளனர். அதாவது 234 மாணவர்கள் இப் பாடசாலையில் இணைந்துள்ளனர். அதிக மீள் குடியேற்ற மாணவர்களை இணைத்த பாடசாலைகளில் யாழ். மாவட்டத்திலேயே இப் பாடசாலை முதாலாவது இடத்தை பெற்றுள்ளது. இதைத்தவிர பாடசாலையை இடைநிறுத்திய ஐந்து மாணவர்களை இப் பாடசாலையில் மீள் இணைத்து அவர்களின் எதிர்காலத்திற்கு வழி வகுத்துள்ளனர் இப் பாடசாலைச் சமூகத்தினர்.

இப்பாடசாலையில் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர் தொகை 35 ஆகும். இவர்களில் 9 ஆசிரியர்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளனர். இத்தற்காலிக ஆசிரியர்கள் பணிமாற்றம் செய்யப்பட்டு




வேறுபாடாசாலைக்கு மாற்றப்பட்டால் இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் வாய்ப்புள்ளது. மேலும் இப் பாடசாலையில் இணையும் மாணவர்கள் தொகை அதிகரித்துச் செல்வதனால் வகுப்பறைகள் கல்விகற்பதற்குப் போதுமானதாக வில்லையென்றும் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பிறிதொரு காணியில் போடப்பட்ட தற்காலிக கொட்டகையிலேயே நடக்கின்றது என்றும் அதிபர் குறிப்பிடுகின்றார். மூன்றிலொரு மாணவருக்குக் கூட தற்போதுள்ள கட்டடம் போதுமானதாக இல்லையென்றதால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது பன்முகப் படுத்தப்பட்ட நிதியுதவியினை நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்தும் பல நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொண்டு புதியகட்டடத் தொகுதியை கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.




இப்பாடசாலையில் மாணவர்கள் கல்வி பொதுப்பரீட்சைகளில் வருடா வருடம் சித்தியடையும் வீதம் அதிகரித்துச் செல்வது பாராட்டுதற்குரியது. புலமைப்பரிசில் பரீட்சைகளில் வருடா வருடம் ஒரு மாணவருக்கு மேல் சித்தியடைவதோடு 13 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். அத்தோடு கல்விப் பொது தராதர சாதாரணப் பரீட்சையிலும் ஒவ்வொரு வருடமும் 30 வீத மாணவர்கள் சித்தியடைகின்றனர். கடந்த ஆண்டு 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும் உயர்தரக் கல்வியை ஆரம்பிப்பதற்கான தகுதிகள் உள்ளபோதும் ஏன் இன்னும் உயர்தரம் ஆரம்பிக்கப்படவில்லை யென்று அதிபரிடம் கேட்டபோது இப்பிரதேச மக்கள் தங்கள் பிள்ளைகள் சிரமமின்றி தொடர்ந்தும் இப் பாடசாலையில் உயர்தரத்தை கற்பதற்குரிய வசதியை ஏற்படுத்தித் தரும்படி கூறியுள்ளனர். எனினும் கட்டடப் பற்றாக்குறை காரணமாக உயர்தரம் ஆரம்பிக்கப் படவில்லையென்று இக் குறையை சில ஆண்டுகளில் நிவர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் உண்டு எனவும் கூறினார். இப் பாடசாலையில் கணனி வசதியைக் கல்வியமைச்சு ஏற்படுத்திபாடசாலைக்கென 10 நவீன கணனியை கையளித்துள்ளது. இக்கணனி மூலமே மாணவர்கள் கணனிக் கல்வியைத் தொடர்கின்றனர். இதைத்தவிர பாடசாலையைவிட்டு இடைவிலகிய மாணவர்களுக்கு முறைசாராக் கல்வி பிரிவினரின் அனுசரணையோடு கணனி அறிவூட்டும் நிகழ்வும் இப்பாடசாலையில் நடைபெறுகிறது. விளையாட்டுத் துறையிலும் இப் பாடசாலை சாதனை படைத்துள்ளது. ஆரம்ப காலம் தொடக்கம் இன்றுவரை இப்பாடசாலை உதைப்பந்தாட்டத்தின் மூலம் பல சம்பியன்களை உருவாக்கி வெற்றிக் கிண்ணங்களையும் குவித்துள்ளது. இப் பாடசாலை மாணவர்கள் மெய்வலுநர் போட்டிகளில் கோட்ட மட்ட ரீதியாக பங்கு பற்றியும் வெற்றியீட்டியும் வருகிறர். கடந்த வருடம் உதைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபெறத் தகுதி பெற்றுள்ளார். என்பது இப் பாடசாலைக்குக்கிடைத்த வெற்றியாகும். மேலும் கலைத்திறனும் கொண்டவர்களாக இப் பாடசாலை மாணவர்கள் திகழ்கின்றனர். உதாரணமாக கடந்த வருடம் கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட போதைப் பொருள் பாவனைத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு வீதி நாடகப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இப் பாடசாலையின் எதிர்காலதிட்டம் பற்றி அதிபரிடம் வினவிய போது தங்கள் பாடசாலைக்குப் பெரும் பிரச்சினையாக உள்ள இடப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதோடு, நூலகம், ஆய்வுகூடம் போன்றவற்றை விருத்தி செய்யும் நடவடிக்கைத் திட்டமும் உள்ளதாக தெரிவித்துள்ளார். இப்பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கிய போது இவர்களுக் கொன்று சொந்தமான விளையாட்டு மைதானம் இல்லாததது பெரும் குறையாக உள்ளது. எனவே இப்பாடசாலை சமுகத்தினர் இப் பாடசாலையின் நலன் கருதி ஒரு விளையாட்டு மைதானத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக அக்கறை எடுத்தல் அவசியம் எனவே இப் பாடசாலையில் உள்ள சிறிய குறைகளை நிவர்த்தி செய்தால் எதிர் காலத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்கும் பாடசாலையாக இது திகழும் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு
தர்ஷா சந்திரகுமாரன்

# யாழ்.மக்களின் பொக்கிஷம் யாழ்.பொதுசன நூலகம்

யாழ். மண்ணிலுள் சர்வமத ஆலயங்களுக்கும் ஆலயமாக விளங்குவதோடு மட்டுமன்றி, யாழ்ப்பாண மக்களின் அறிவுப்பசியை தீர்க்கும் களஞ்சியமாகவும் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்தாகவும் திகழும் எம்பொக்கிஷம் யாழ். பொதுசன நூலகம். ஆரம்பகாலத்தில் 1933. 11.11 அன்று ஒரு கொட்டகையில் உருவாக்கப்பட்டு "பொதுமக்கள் நூல் நிலையம்" என்று இதற்குப் பெயரிடப்பட்டது. ஆரம்பத்தில் இப்பெயரோடு அழைக்கப்பட்டாலும் 1958.10.17 அன்று பொதுசன நூலகம் என்று பெயர் மாற்றம் பெற்றது. காலப் போக்கில்




உன்னதமான ஒரு நூல் நிலையமாக உருவெடுத்தது. அமெரிக்கக் காங்கிரஸ் நூல் நிலையம், பிரிட்டிஷ் நூல்நிலையம், ரஸ்யாவின் லெனின் நூலகம் போன்று ஈழத்தமிழருக்கான ஒப்பற்ற தேசிய நூல் நிலையம் ஒன்றினை கட்டியெழுப்ப வேண்டுமென்ற கொள்கைக்கமைவாக உருவாக்கப்பட்ட நூல்நிலையமே யாழ். பொதுசனநூலகம், வாசிப்பு செயற்பாடு மட்டுமன்றி வயோதிபர்களுக்கான பொழுது போக்கு நிலையமாகவும், முதுமாணிப்பட்டம் பெறுவதற்கான உசாத்துணைச்சாலையாகவும் பயன்படுத்தப்பட்டது. இந்நூலகத்தின் அங்கத்தவர்களாக 19,000 பேர் அங்கம் வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தென் ஆசியாவில் உள்ள நூலகங்களிலேயே சிறந்த நூலகமாக யாழ். பொதுசன நூலகம் விளங்கியது. ஆனால் கண திருஷ்டிபட்டது போல் ஒரு கொடிய சம்பவம இந்நூலகத்துக்கு ஏற்பட்டது. 01.06.1981 அன்று நள்ளிரவு வேளையில் சில தேசத துரோகிகளால் இந்நூலகம் எரியூட்டப்பட்டது. ஈவிரக்கமே இல்லாத இக்கொடியவர்களின் செயலால் நூலகத்திலுள்ள 97,000 நூல்கள கருகிப் போயின. உலகில் எங்கிருந்தும் பெறமுடியாத பல நூல்களும் இதில் அடங்கியிருந்தன. பண்டைய கால மருத்துவம், இலக்கியம், ஜோதிடம், சம்பந்தமான ஓலைச்சுவடிகள் நூற்றுக கணக்கில் சாம்பலாகின. அதுமட்டுமனறி தளபாடங்கள், ஜன்னல்கள், கதவுகள் போன்றவையும் எரிந்து நாசமாகின. சுவர்கள் வெடித்து உதிர்ந்து போயின என்பது குறிப்பிடத்தக்கது. நூல் நிலையம் தீப்பற்றி எரிவதாக அன்றிரவு சில விநாடிகளுக்குள் யாழ். மாநகர ஆணையாளர் அறிந்து கொண்டார். உடனே மாநகர சபைத்தண்ணீர் "பவுஸர்"களையும் மாநகரசபை ஊழியர்களையும் அழைத்து பொதுசன நூலகத்தில் ஏற்பட்ட தீ மேலும் பரவாது அணைக்குமாறு பணித்தார். எனினும் தீயை அணைக்கச் சென்றவர்களை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் தங்கியிருந்த பொலிஸார் தடுத்துள்ளனர் என்பதை காவலாளிகள் தெரிவித்தார்கள். மறுநாள் அது காலையில் யாழ். பொதுசன நூலகம் சாம்பல் ஆகிய



தைப் பார்த்த யாழ். மக்களுக்கு பேரிடியானது. இத்தகவலை அறிந்த "வணக்கத்துக்குரிய தாவீது அடிகள் அதிர்ச்குள்ளாகி மாரடைப் பேற்பட்டு மரணமானார். இவர் ஞானப்பிரகாசரின மாணவரும், ஒப்பியல் ஆய்வாளரும் ஆவார. நூலகப்புத்தகங்களின் பெறுமதியை அவர் நன்கு அறிந்தவர். மேலும் யாழ். நூலகத்தில் பணியாற்றிய பற்குணம் என்பவர் பிரமை பிடித்தவராகி சில நாள்களாக சித்தம் குழம்பிய நிலையில் காணப்பட்டார். யாழ். பொதுசன நூலகம் எரிந்தது. யாழ் மக்களுக்கு மட்டுமனறி இலங்கையில் உள்ள அனைத்து தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது பிரித்தானியாவின் மீது குண்டுகள் வீசச்சென்ற விமானப்படையினருக்கு "ஒக்ஸ்போட்" பல்கலைக்கழகத்தினை எக்காரணம் கொண்டும் குண்டுவீசி அழித்துவிடக் கூடாது என்று சர்வாதிகாரி ஹிட்லர் உத்தரவிட்டார். அதேபோல ஜேர்மனியின் "ஹைடல் பேர்க்" பல்கலைக் கழகத்தை தவிர்த்தே குண்டுகளை வீசுமாறு பிரத்தானியா தனது விமானப்படைக்கு பணிப்புரை வழங்கியது. அறிவுத்தளங்களைப் பாதுகாக்கும் எண்ணம் இக்கொடூரமாக எரிக்கும் அளவிற்கு இப்பாதகர்களிடம் வெறி மேலோங்கி இருந்துள்ளது. மீண்டும் யாழ். பொதுசன நூலகம் உயிர்பெற வேண்டுமென்ற எண்ணத்தில் பல பெரிய மனிதர்களின் உதவ! மூலம் துரித கதியில் நூலகத்தைப் புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் பலனாக மீண்டும் 1984.06.04 அன்று யாழ். பொதுசனநூலகம் புத்துயிர் பெற்றது. பின்பு படிப்படியாக புதுபபிக்கப்பட நூலகமாக காட்சியளித்ததோடு 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. நூலகம் புதுப்பித்த பின்பு நூல்நிலையத்துக்கு வருகைதரும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால் 2006ஆம் ஆண்டுக்கு பின் ஏற்பட்ட யுத்த சூழலின் காரணமாக வாசகர்களின் தொகையில் வீழ்ச்சிஏற்பட்டது. நூலகத்துக்கான பாதைகள் மூடப்பட்டு ஒருபாதை மட்டுமே மக்களின பாவனைக்காக திறந்துவிடப்பட்டது. ஆரம்பத்தில் 400 தொடக்கம் 600 வரையிலான மக்கள் யாழ். பொதுசன நூலகத்துக்கு வருகை தந்த போதும் யுத்தத்துக்குப்பின் 60 தொடக்கம் 100 வரையிலான வாசகர்களே நாளொன்றிற்கு வருகை தந்தார்கள். மீண்டும் தற்போது ஏற்பட்டுள்ள நாட்டு அமைதி சூழ்நிலை காரணமாக நாளொன்றிற்கு 100 தொடக்கம் 150 வரையிலான வாசகர்கள் வருகை தருகின்றனர். எனினும் இந்நூலகம் ஆரம்பிக்கபட்ட காலத்தில் நூலகத்துக்கு ஆயிரக் கணக்கானோர் வருகைதருவது வழக்கம ஆனால் இன்று நூற்றுக்கணக்கிலும் குறைவான வாசகர்களே வருகை தருகின்றார்கள என்பது வேதனையளிக்கும விடயமாகும். இதற்குக் காரணம் இன்றைய சினிமாவின் ஆதிக்கமும், கணனிகளில் காணப்படும் விளையாட்டுக்களும், கையடக்கத் தொலை பேசிகளின் தேவையற்ற பாவனையுமே என்பது குறிப்பிட வேண்டியது. அதுமட்டுமனறி யாழ். மக்களிடத்தில் வாசிப்புத்திறன் குறைவாக காணப்படுவதும் ஒரு காரணமாகும். யாழ். பொதுசன நூலகத்துக்கு போதியளவு நூல்களை அரசாங்கமும் பல்வேறுபட்ட நிறுவனங்களும் கொடுத்துள்ளன. மேலும் பல்துறை சார்ந்த புத்தகங்களும் சேர்ந்த வண்ண முள்ளது. இத்துடன் நூலகத்தில் அனைதது வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நூலகப் பாதைகளும் திறந்துவைக்கப பட்டுள்ளன. எனினும் மக்கள் நூலகத்தில் நாட்டம் கொள்ளத் தவறுகின்றனர். பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளும் தொழில நுட்பவியல்களை விட இலவசமாக பெற்றுக கொள்ளக்கூடிய வாசிப்புத்திறனை எமக்குள் ஏற்படுத்தினால் அறியாமையெனும் இருள்நீங்கும இதர பொழுதுபோக்குகளை ஒரு மணி நேரம் ஒதுக்கிவைத்துவிட்டு நூல் நிலையம் சென்று நூல்களை வாசிப்பதன மூலம எம் அறிவு வளர்வதோடு நூலகத்துக்கு மதிப்பு ஏற்படும் என்பது உண்மை. எரிந்து போன சாம்பல குவியலிலிருந்து உயிர்பெற்ற "பீனிக்ஸ்" பறவை போன்று கம்பீரமாக எழுந்து நிற்கும் நூலகத்தைபயன்படுத்துவோம்பயனடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்புக்கு உள்ளாகும் இராணுவக் கட்டமைப்பு

நாலாவது ஈழப்போர் முடிவுக்கு வந்த போது படையினரின் எண்ணிக்கைகளில் சிறீலங்கா இராணுவம் பிரித்தானியா இராணுவத்தை விட 70,000 வீரர்களால் உயர்ந்திருந்தது.

அதாவது சிறீலங்கா இராணுவம் 175,000 படையினரை கொண்டிருந்தது (பிரித்தானியா இராணுவத்தின் அளவு 106,000) ஏறத்தாழ 20 படையணிகளை (டிவிசன்கள்) கொண்ட இந்த இராணுவம் தனது ஆளணி வளங்களையும், அதீத சுடுவலுவையும் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை முறியடித்திருந்தது.




இருந்த போதும் அதற்காக அவர்கள் செலுத்திய விலையும் அதிகம், அதனை படை வளம், ஆயுதவளம், பொருளாதார வளம், நாட்டின் நன்மதிப்பு என பல வரையறைகளுக்குள் உட்படுத்திக் கொள்ளலாம்.

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் வன்னியில் மேற்கு மற்றும் கிழக்கு பகுதிகளினூடாக ஆரம்பமாகிய வன்னி படை நடவடிக்கையில் இராணுவம் பல தடவைகள் தனது களநிலை கட்டளை தளபதிகளை மாற்றிக் கொண்டது. மிகச்சிறந்த அதிகாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர், வலிமையற்ற அதிகாரிகள் மாற்றப்பட்டனர்.

இவ்வாறு படை நடவடிக்கையின் ஊடாகத் தன்னை பலப்படுத்திக் கொண்ட இராணுவம் தற்போது மிகப்பெரும் சீரழிவை சந்தித்துள்ளதாக படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ஜெனரல் பொன்சேகா அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டமை அரசுக்கும், இராணுவக் கட்டமைப்புக்கும் இடையில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதுடன், அதன் கட்டமைப்பும் சிதைவைச் சந்தித்துள்ளது.

மூன்று நட்சத்திர (ஜெனரல்) அதிகாரியான பொன்சேகாவை பொறுத்தவரைக்கும் அவருக்கு இராணுவத்தின் படை சிப்பாய் தொடக்கம் ஒரு நட்சத்திர அதிகாரிகள் வரைக்கும் (மேஜர் ஜெனரல்) அதிக செல்வாக்கு உண்டு. ஏறத்தாழ 40 வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றிய அனுபவம், சிறீலங்காவின் வரலாற்றில் நீண்டகாலம் இராணுவத்தளபதியாக பணியாற்றிய காலம் மற்றும் களமுனைகளில் நான்கு தடவைகள் காயமடைந்தவர் என்ற சாதக அம்சங்கள் அவருக்குப் படையினர் மத்தியில் உண்டு.

இந்த நிலையில் தான் தேர்தலில் வெற்றிபெற்ற சிறீலங்கா அரசு தனது இராணுவத்தை கண்டு அச்சமடைந்துள்ளது. இராணுவத்தை களையெடுத்து, முற்றாக மறுசீரமைத்தாலே தனது பதவியைத் தக்கவைக்கலாம் என அரசுத் தலைமை நம்புகின்றது.

எனவேதான் தேர்தல் முடிந்ததும் இராணுவக்கட்டமைப்பில் மிகப்பெரும் மாற்றங்களை அது கொண்டுவந்துள்ளது. ஏறத்தாழ 40 உயர் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்;14 உயர் அதிகாரிகள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளனர். காவல்துறை கட்டமைப்பிலும் 150 இற்குமேற்பட்ட அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அரசுக்கு எதிராக சதிசெய்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள 14 இராணுவ அதிகாரிகளில் ஐந்து மேஜர் ஜெனரல்கள், ஐந்து பிரிகேடியர்கள், ஒரு கேணல், ஒரு லெப்டினன்ட் கேணல், இரண்டு கப்டன் தர அதிகாரிகள் உள்ளடங்கியுள்ளனர். ஒரு நாளிலேயே அவர்களுக்கான விலகல் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேஜர் ஜெனரல் டி லியனகே, மேஜர் ஜெனரல் ஜெயநாத் பெரேரா, மேஜர் ஜெனரல் ராஜிதா சில்வா, மேஜர் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கா, மேஜர் ஜெனரல் சூரியபண்டாரா, பிரிகேடியர் டி டி டயஸ், பிரிகேடியர் கெப்பிட்டிவலனா, பிரிகேடியர் மகோத்தி, பிரிகேடியர் ஹென்னெடிகே, பிரிகேடியர் குமாரபெருமா, கேணல் திலக் உபயவர்த்தனா, லெப். கேணல் ஜெயசூரியா, கப்டன் ரணவீரா, கப்டன் கிரிசாந்தா ஆகியோரே இராணுவத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளவர்கள்.

1962 ஆம் ஆண்டு அன்றைய சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசை கைப்பற்றுவதற்கு முனைந்தனர் எனக் கூறப்பட்டு சில இராணுவ உயர் அதிகாரிகள் படையில் இருந்து விலக்கப்பட்டிருந்தனர் அதற்கு பின்னர் சிறீலங்காவின் வரலாற்றில் பெருமளவான படை அதிகாரிகள் இராணுவத்தை விட்டு விலக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

மேலும் பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் அவரின் உதவியாளராகப் பணியாற்றிய பிரிகேடியர் துமிந்த கெப்பட்டிவலன உட்பட 20 இற்கு மேற்பட்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டு இனம்தெரியாத இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கெப்பட்டிவலன அம்பாறை மாவட்டத்தின் இராணுவப் பயிற்சி கல்லூரியின் கட்டளை அதிகாரியாக வழிநடத்தியிருந்தார். அன்று புதிதாக உருவாக்கப்பட்ட 57 ஆவது படையணியின் முதலாவது கட்டளை தளபதியாக அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

பம்பைமடுப்குதியில் இருந்து நகர்வை மேற்கொண்ட இந்த படையணி மீது விடுதலைப்புலிகள் 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஊடறுப்பு தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த தாக்குதலில் பெருமளவான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பெருமளவானோர் காயமடைந்திருந்தனர். இரண்டு பவள் கவசவாகனங்கள் உட்பட பெருமளவான ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியிருந்தனர். எனினும் படைத்தரப்பு 117 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்திருந்தது.

இந்த தாக்குதலின் போது தப்பியோடிய பிரிகேடியர் சுமித் மானவடு பொன்சேகாவினால் அதற்காகத் தண்டிக்கப்பட்டிருந்தார். அவர் இராணுவ தலைமையகத்திற்கு மாற்றப்பட்டதுடன், 57 ஆவது படையணியின் கட்டளை தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

பொன்சேகாவின் இந்த நடவடிக்கைகளினால் ஆத்திரமடைந்த மானவடு தற்போது பொன்சேகாவுக் எதிரான நடவடிக்கைகளை வழிநடத்திவருகிறார் எனவும், அவரை

தலையீட்டைத் தொடர்ந்து பிரசன்னா சில்வா 2008 ஆம் ஆண்டு மீண்டும் இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன், முகமாலை களமுனையில் 55 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் 55 ஆவது படையணியே சாலை பகுதி ஊடாக நகர்வில் ஈடுபட்டிருந்தது. இவ்வாறு இராணுவத்திற்கு மீண்டும் கொண்டுவரப்பட்ட பிரசன்னா தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் அரச தொலைக்காட்சியில் தோன்றி பொன்சேகாவுக்கு சேறடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா இராணுவத்தை பொறுத்தவரையில் அதன் வளர்ச்சி என்பது விரலுக்கு மிஞ்சிய வீக்கமாகவே கருதப்பட்டது.




ஆனால் தற்போது அதன் கட்டளை அதிகாரிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள மோதல்கள் இராணுவத்தின் உளவுரணையும், போரிடும் வலுவையும், அதன் ஒழுக்கத்தையும் பாதிக்கும் என கருதப்படுகின்றது.

ஒழுக்கம் கட்டுப்பாடுகளை பொறுத்தவரையில் சிறீலங்கா இராணுவத்தின் தரம் மிகவும் குறைவானது. பல்லாயிரக் கணக்கானோர் ஈழப்போர் வரலாற்றில் இராணுவத்தை விட்டு தப்பியோடியுள்ளனர். அவர்களில் கணிசமானோர் ஆயுதங்களுடன் தப்பியோடியுள்ளனர்.

அவர்களே தேர்தல் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கு

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளும், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளும் அடங்குகின்றனர் எனத் தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா அரசின் இந்த நடவடிக்கைகளினால் வெளியேற்றப்பட்ட அதிகாரிகளில் பலர் வன்னி படை நடவடிக்கைளில்



களமுனைகளில் அதிக பங்களிப்பை வழங்கியவர்கள் எனவும், ஆனால் சிறீலங்கா அரசு அவர்களைப் புறம் தள்ளி வன்னி படை நடவடிக்கையின் போது திறமையாகச் செயற்படாது பொன்சேகாவினால் தண்டனைக்குட்படுத்தப்பட்ட அதிகாரிகளை பொன்சேகாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் பயன்படுத்தி வருகின்றது எனவும் தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவினால் முன்னர் தண்டனை வழங்கப்பட்ட பிரிகேடியர் சுமித் மானவடுவே தேர்தல் தினத்தன்று (26) இரவு 'சினமன் லேக்' ஆடம்பர விடுதி (முன்னர் டிரான்ஸ் ஏசியா விடுதி) மீதான முற்றுகை நடவடிக்கைகளை நெறிப்படுத்தியிருந்தார்.

ஒரு பற்றாலியன் சிறப்புப்படையினரின் தலைமையில் அவர் அந்த முற்றுகையை மேற்கொண்டிருந்தார். வன்னியில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் போது 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 57 ஆவது படையணியை பிரிகேடியர் மானவடுவே

பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்தி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொன்சேகாவுக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரிகேடியர் மானவடு பொன்சேகாவிற்கு ஆதரவான இராணுவத்தினரைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் எனப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலப்பகுதியில் அவரின் தண்டனைகளுக்கு உள்ளாகிய பல இராணுவ அதிகாரிகளை கோட்டாபய பொன்சேகாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருகின்றார்.

பொன்சேகாவுடன் ஏற்பட்ட கருத்துமோதல்கள் காரணமாக 2007 ஆம் ஆண்டு இராணுவத்தில் இருந்து சுயமாக விலகிச் சென்ற மேஜர் ஜெனரல் (அப்போது பிரிகேடியர்) பிரசன்னா

**-வேல்ஸில் இருந்து அருஷ் -**

சில்வாவும் தற்போது பொன்சேகாவுக்கு எதிரான நடவடிக்கைகளை நெறிப்படுத்தி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகரை மீதான படை நடவடிக்கையின் போது சிறப்பு படையணியை வழிநடத்திய பிரசன்னா, மன்னார் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையில் சிறப்பு படையணிகளை களமிறக்க மறுப்புத் தெரிவித்தமை இருவருக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் பின்னர் கோட்டாபயவின்

காரணம் என அரசு தெரிவித்திருந்தது. அவர்களில் சிலரை அரசும் பயன்படுத்திக் கொண்டது.

எனவே ஏற்கனவே ஒழுக்கமற்ற ஒரு இராணுவத்திற்குள் ஏற்படும் பிளவுகள் தென்னிலங்கையின் அரசியல் உறுதித்தன்மையை அதிகம் பாதிக்கலாம் என்றே கருதப்படுகின்றது. தென்னிலங்கையில் ஏற்பட்ட முன்னைய கிளர்ச்சிகளை நோக்கினால், 1972 ஆம் ஆண்டிலும், 1988 ,1989 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும் ஜே.வி.பியினர் கிளர்ச்சிகளை மேற்கொண்ட போதும் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பு உறுதியாகவே இருந்தது.

அவர்களால் இராணுவத்தின் கட்டமைப்புக்குள்ளும், அதன் கட்டளை பீடங்களுக்குள்ளும் அதிகம் ஊடுருவ முடியவில்லை. அன்றைய காலத்தில் பெருமளவான இராணுவ உயர் அதிகாரிகள் படையில் இருந்து நீக்கப்படவும் இல்லை, கைது செய்யப்படவும் இல்லை.

ஆனால், தற்போதைய நிலை மிகவும் ஆபத்தானது என அரசு உணர்ந்துள்ளது. 175,000 இராணுவத்தினரில் ஒரு குறிப்பிட்ட தொகையினரை விட ஏனையவர்களை சந்தேகக்கண் கொண்டு தான் அரசு பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இரண்டு தடவைகள் கிளர்ச்சிகளை மேற்கொண்ட ஜே.வி.பி. உறுப்பினர்களின் தரத்துடன் ஒப்பிடும் போது அரசின் மீது விரக்தி கொண்ட இராணுவத்தில் உள்ள பெருமளவானவர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள் என்பதும் ஆபத்தானதே.

பெரும்பான்மைச் சிங்கள சமூகதிற்குள் எற்பட்டுள்ள இந்த மோதல்கள் மேலும் விரிவாக்கம் பெறுமாக இருந்தால், ஜே.வி.பியின் கிளர்ச்சி காலத்தை போல பல ஆயிரம் சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்படும் நிலையும் வரலாம்.

ஏனெனில் சிங்கள பௌத்த துறவி ஒருவரே சிங்கள இனத்தை சேர்ந்த பிரதமரான எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்காவை சுட்டு படுகொலை செய்திருந்தார். அந்த கசப்பான வரலாற்றையும் சிறீலங்கா அரசு மறந்துவிடப்போவதில்லை.

நன்றி:- 'ஈழம் ஈ நியூஸ்' இணையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பயன்தரு பழமரக்கன்றுகளை வளர்க்கும் போக்கு குடாநாட்டில் ஊக்குவிக்கப்படுதல் அவசியமானது!

யாழ். மாவட்டத்தில் பழமரச் செய்கை மற்றும் பயன்தரு மரங்களின் செய்கையினை ஊக்குவிக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் 2008 இல் ஏற்பட்ட நிஷா புயல் மற்றும் வெள் ளப் பெருக்கு காரணமாக பழமரங்கள், மற் றும் பயன்தரு மரங்கள் போன்றன பெரு மளவில் பாதிப்புக்குள்ளாகின. இதன் தாக்கம் காரணமாக எதிர்காலத்தில் 22,617 மெற்றிக் தொன் உற்பத்தி இழப்பு ஏற்படு மெனவும், இதன் பெறுமதி ரூபா 428.5 மில்லியன் ஆகவும் மதிப்பிடப்பட்டது.

| இல | பிரதேச செயலகம் | பழமரச்செய்கையை ஊக்குவித்தல் திட்டம் | | மரநடுகைத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | பயனாளிகள் எண்ணிக்கை | கன்றுகளின் எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை | கன்றுகளின் எண்ணிக்கை |
| 01 | பருத்தித்துறை | 125 | 875 | 175 | 1400 |
| 02 | கரவெட்டி | 125 | 1625 | 175 | 1925 |
| 03 | மருதங்கேணி | 125 | 875 | 75 | 525 |
| 04 | உடுவில் | 125 | 875 | 125 | 875 |
| 05 | சண்டிலிப்பாய் | 125 | 1625 | 200 | 1400 |
| 06 | தெல்லிப்பளை | - | - | 175 | 1400 |
| 07 | சங்கானை | 125 | 875 | 200 | 2800 |
| 08 | யாழ்ப்பாணம் | - | - | 50 | 400 |
| 09 | நல்லூர் | 125 | 1625 | 125 | 1000 |
| 10 | கோப்பாய் | 250 | 2250 | 20 | 80 |
| 11 | ஊர்காவற்றுறை | 125 | 875 | - | - |
| 12 | வேலணை | 125 | 875 | 100 | 700 |
| 13 | நெடுந்தீவு | - | - | 75 | 525 |
| 14 | காரைநகர் | 125 | 875 | 75 | 1250 |
| 15 | சாவகச்சேரி | - | - | 105 | 525 |
| மொத்தம் | | 1500 | 13250 | 1625 | 14605 |

அத்துடன் கூடுதலான மற்றைய பயன்தரு மரங்களும் கடும் காற்றின் தாக்கத்தினால் வேரோடு சாய்ந்துள் ளன. இந்த நிலையிலிருந்து மீள்வதற்கும், பழமரங்கள் மற்றும் வன மரங்களின் விஸ்தீரணத்தை அதிகரிப்பதற்குமாக தேச நிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் கம நெகும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவற்றின் மீள்நடுகை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.



இதற்கான திட்டங்கள் அரசாங்க அதிபரின் முயற்சியினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பழமரச்செய்கையை ஊக்குவித்தல் திட்டத்திற்கு ரூபா 1.2 மில்லியனும், மரநடுகைத் திட்டத்திற்கு ரூபா 1.29 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.



கமநெகும திட்டத்தின் கீழ் பப்பாசிச் செய்கையை ஊக்குவித்தல் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கன்றுகளின் ஒரு தொகுதி

திட்டத்தின் கீழ் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 1,500 பயனாளிகள் பழமரச் செய்கைக்கும், 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 1,625 பயனாளிகள் மரநடுகைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

பழமரச் செய்கை திட்டத்தில் மாதுளை, கொய்யா, பப்பாசி போன்ற பழமரக் கன்றுகளும், மரநடுகைத் திட்டத்தில் ஜம்பு, சமண்டலை, தென்னை, பலா, சண்டி, மாதுளை, கமுகு, சவுக்கு, கொய்யா, மா, எலுமிச்சை போன்ற கன்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையும் வழங்கப்பட்டுள்ள கன்றுகளின் எண்ணிக்கையும் மேலுள்ள அட் டவணையில் காட்டப்பட்டுள்ளது.

திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பழமரக் கன்றுகளும், வனமரக் கன்றுகளும் தனியார் நாற்று மேடையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு பார வூர்தி மூலம் ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் பழமரக் கன்றுகள் மற்றும் வன மரக் கன்றுகள் விநியோக நிகழ்வுகள் பிரதேச விவசாயப் போதனாசிரியர் களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன. இந் நிகழ்வுகளில் பிரதேச செயலகத்தின் அலுவலர்கள், விவசா யத்திணைக்கள உத்தியோகத்தர்கள், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமக்காரர் அலுவலர்கள், கமக்காரர் அமைப்புக்கள், சமூக மட்ட அமைப் புக்களின் உறுப்பினர்கள் ஆகி யோர் கலந்து கொள்கின்றனர் இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களால் கன்றுகளை நடுகை செய்தல், பராமரித்தல் தொடர்பான விளக்கங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவதுடன் அவை தொடர்பான கையேடு களும் விநியோகிக்கப்படுகின்றன.


பழமரக்கன்றுகள், பயன்தரு மரக் கன்றுகளை நடுகை செய்யும் பயனாளிகள் ஒவ்வொருவரும் பின்வரும் நடவடிக்கைகளை பின்பற்றுதல் அவசிய மானதாகும்.

**1.இடத்தெரிவு**

* நிலமட்டத்தில் இருந்து மண்ணின் ஆழம் 6'ஆக இருத்தல் வேண்டும்
* நீர் வடிப்பியல்புள்ள மண்ணாக இருத்தல் வேண்டும்

**2. நடுகைக்குழி தயாரித்தல்**

* 60 செ.மீ×60 செ.மீ× 60 செ.மீ நீள அகல ஆழமுள்ள குழிகளைத் தோண்டவும்.




குழிக் கலவையால் மூடப்பட்ட குழி

* கன்றுகளை நடுகை செய்வதற்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப் பசளை, மேல் மண் ஆகியவற்றை 1:1 என்ற விகிதத்தில் இட்டு குழியை நிரப்பவும்.


நடுகைக்குழி தயாரித்தல் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது.

* சில மரங்கள் நீர் தேங்குவதைச் சகிக்கமாட்டா. ஆதலால், மரத்தின் வகைக்கேற்பவும் மண்ணின் தன்மைக் கேற்பவும் வடிகால் அமைத்தல் அவ சியம்.

**3.கன்றுகளை நடுகை செய்தல்**


பொலித்தீன் அகற்றல்

* நடுவதற்கு முன்பொலித்தீனை கூரிய பிளேட் ஒன்றினால் மெதுவாக வேர்கள் சிதைவுறாமல் கீறி அகற்றவும்
* பொதிமண் சிறிது உலர்வாக இருந்தால் மண் உருளை தளர்ந்து வேர்கள் பாதிப் படையமாட்டாது. பொதிமண் உலர் வாக இருப்பது நன்று


கன்றினது மண் மட்டமும் குழியினதும் மணல் மட்டமும் சமமாயிருக்க வேண்டும்.

## கமமும் புலமும்

* நடுகைக் குழியில் வைத்தே கொள்கலன்களை அகற்றவும்
* நடுகையை மேற்கொள்ளல்

**4. நீர்ப்பாசனம் செய்தல்**

* கன்றுகள் தழைத்து துளிர்க்கும் வரை ஈரம் காயாமல் பார்த்து நீர் ஊற்றவும்.
* நட்டவுடன் பாத்தி அமைத்து பாத்தியினுள் நீர்ப்பாசனம் செய்யவும்
* வேர்த்தொகுதி முற்றாக நனையக் கூடியவாறு நீர்ப்பாசனம் செய்யவும்
* ஆழமான வேர்த்தொகுதி உருவாகக் கூடியவாறு வேர் விருத்தி தூண்டக் கூடிய வகையில் சீரான கால இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்யவும்.

**5.பாதுகாத்தல் நடவடிக்கைகள்**

* கன்றுகள் நிமிர்ந்து நிற்கக்கூடியவாறு ஆதாரம் வழங்கவும்
* வெயிலில் இருந்து பாதுகாக்க நிழல் வழங்கவும்
* கன்றைச் சுற்றிக் களைகளைக் கட்டுப்படுத்த பத்திரக்கலவை இடவும்
* உரிய முறையில் கத்தரித்து வளர்க்கவும்
* கால்நடைகள் கடிக்காமல் பாதுகாக்கவும்
* பூச்சி, பீடைகளிலிருந்து பாதுகாக்கவும்

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு பழமரக்கன்றுகள், பயன் தருமரக் கன்றுகள் ஆகியவற்றை சிறப்பான முறையில் நடுகை செய்து பராமரிப்பதன் மூலம் பழப் பயிர்களின் உற்பத்தியையும், விஸ்தீரணத்தையும் அதிகரிக்க முடியும் இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுவதுடன் நுகர்வோரும் தமக்கு தேவையான பழங்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

பழங்கள் மேலதிகமாக கிடைக்கும் காலங்களில் இவற்றை ஜசுபி போன்ற பதப்படுத்தல் நிலையங்க ளுக்கு வழங்குவதன் மூலம் மேலதிக வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

க.தனபாலசிங்கம்
பாடவிதான உத்தியோகத்தர்
பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி)அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





கரணவாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் பாடசாலை பற்சிகிச் சையாளரான திருமதி நந்தினி உதயகுமார், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கந்தையா அம்பலவாணர், பாடசாலை அதிபர் சி.நற்குணலிங்கம் ஆகியோர் பாடசாலைச் சமூகத்தால் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும்

மாணவர்களின் அணி நடைக் காட்சியை இரண்டாவது படத்திலும் இடைவேளை நிகழ்வாக மாணவிகளின் தேகப் பயிற்சிக் காட்சியை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### சின்னையா திருநாவுக்கரசு



தோற்றம் 09★10★1948

மறைவு 14★01★2010

எமது குடும்பத் தலைவரின் மறைவைக் கேட்டு நேரிலும், தொலைபேசியிலும், தந்தி மூலமும் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன்

இன்று (15.02.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (94862) குடும்பத்தினர்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2096 திகதி 13 – 02 – 2010

ஆங்கில எழுத்திற்கும் X

வெற்றி எண்கள் 36 41 43 48

போனஸ் இல: 67

ஜக்பொட் பரிசு ரூ. 16,850,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 195602 | 20/- | 3,912,040/- |
| 2 இல | 13985 | 100/- | 1,398,500/- |
| 3 இல | 287 | 1,000/- | 287,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7767 | 40/- | 310,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 537 | 1,000/- | 537,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,850,200/- | - |
| 1 இல + போனஸ் இல | 9171 | 100/- | 917,100/- |
| 2 இல + போனஸ் இல | 414 | 500/- | 207,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 434 | 200/- | 86,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 30 | 1,500/- | 45,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | • | | 9,421,120/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 228256 | | 10,021,120/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - A.A. கசுன் அகலங்க - மதுகம.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - L.R. உபேக்ஷா ரொட்ரிகு - பிலியந்தலை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 301635261-4-34 |
| அம்பாறை | 301626443-1-02 |
| காலி | 301627319-8-06 |
| கேகாலை | 301626671-4-39 |
| கொழும்பு | 301634958-3-22 |
| அநுராதபுரம் | 301636636-1-16 |
| மட்டக்களப்பு | 301641365-5-42 |
| திருகோணமலை | 301632206-0-16 |
| நுவரேலியா | 301623023-7-16 |
| களுத்துறை | 301630465-6-26 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 17,383,850/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


## வைக்கோலுக்கு வந்த 'கிராக்கி'!

சுழிபுரம்,பெப்.14

சுழிபுரம் பகுதியில் அறுவடை செய்யும் வைக்கோலை கால்நடை வளப்போர்கள் அதிக விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். வைக்கோலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது.

சுழிபுரம் காட்டுவயல் பகுதியில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகின்றது. தினமும் பத்துக்கு மேற்பட்ட வயல்களில் அறுவடை செய்யப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (28)

## மெய்வன்மை போட்டிகள்

கோப்பாய்,பெப்.15

ஊரெழு கணேச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக்கிளை சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை ஆசிரியர் செ.குணராசா மற்றும் ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி த.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர். (201-72)

* * *

ஆனைக்கோட்டை,பெப்.15

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ந.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (201-20)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பொறியியலாளர் சோ.அனந்தசயனன் அவரது பாரியார் .திருமதி சிவமலர் அனந்தசயனன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பிப்பார்கள். (201-224)

* * *

சுழிபுரம்,பெப்.15

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் இந்த ஆண்டுக்கான இல்லங்களுக் கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் நாளை செவ்வாய்க் கிழமை பி.ப.1 மணிக்கு கல்லூரியின் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளையின் தலைமையின் கீழ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உடற்பயிற்சி உதவிப்பணிப்பாளர் திரு.எம்.நடராசா தமது பாரியாருடன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக ரி.துரைஎங்கரசு, இளைப்பாறிய ஆசிரியர் [illegible] ஆகியோர் கலந்து கொள்வர். (8-28)

## மின்விநியோகம் வழங்கப்படவில்லை

கைதடி, பெப். 15

உரும்பிராய் கிழக்கு கரந்தன் வீதியிலுள்ள முதலாம் ஒழுங்கைக்கு மின்விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதிக்கென மின்னிணைப்புக்காக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து கடந்த வருடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் இதுவரை மின்னிணைப்பு வழங்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து இப்பிரதேசத்திற்கு மின்விநியோகம் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (50-288)

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதம் நாகேசு

(உரிமையாளர், S.P.N அன் கொம்பனி)
கெய்சர் வீதி, கொழும்பு-11



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் 5ஆம் வட்டாரம் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வாழ்ந்து வந்தவருமான வேலாயுதம் நாகேசு 13.02.2010 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- நாகமுத்து (நயினை) தம்பதிகளின் அன்பு மகனும் அமரர் முத்துவேலு தம்பதிகளின் (புங்குடுதீவு)அன்பு மருமகனும், அமரர் இராசமணி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை), அவர்களின் அருமை கணவரும் கீதா, கிருபாகரன், மாலா, திபாகரன், ஜீவா,பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,சதாரூபன் (ஆசிரியர், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), தர்சினி, [illegible] லிங்கம்,சிவமலர், சந்திரசேனன் (சீலன்), கீர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீப், தீபிகா, சங்கீத், கீர்த்தனா,அ[illegible] நிவேதா, ரஜிதன்,நகியா, அபிசா, தர்விதன், நயன், த[illegible] ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர்களான நாகம்ம[illegible]னம்மா, நல்லையா, சிவக்கொழுந்து,பொன்னம்மா [illegible] கண்மணி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் [illegible]களான தம்பையா, சின்னத்துரை, முத்தையா, ராஜரத்[illegible] சண்முகலிங்கம் மற்றும் கமலாதேவி, பொன்னையா, அ[illegible]களான செல்வநாயகம், ராஜேஸ்வரன் மற்றும் தனபாலசிங்கம் (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 131. A1/2,புதுச்செட்டி வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
பிரபு (மகன்).

T.P:0777-410696 (சி/564890)

### திருமதி பிரணவன் சியாமளா

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரணவன் சியாமளா நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பிரணவனின் (Branch Manager, Kreston MNS& Co) அன்பு மனைவியும், யாகவியின் அன்புத் தாயாரும், சங்குவேலியைச் சேர்ந்த Dr.இலட்சுமணன் - விஜயலக்சுமி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) தம்பதியரின் அன்பு மகளும், குமணன் (ஆசிரியர்), ரமணன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர்களாகிய ஹற்றன் S.சிவலிங்கம் - மனோரஞ்சனி தம்பதியரின் மருமகளும், K. கேசினி (M.O.H.Office, சங்கானை), S.பிரசாத் (நோர்வே) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (15.02.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கஜபதி",
சங்குவேலி, மானிப்பாய். (94855)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்துவீச்சிலும், துடுப்பாட்டத்திலும் அசத்தி யூனியனை வீழ்த்தியது யாழ். இந்து!

வலி. வடக்கு, பெப்.15

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 19 வயதுப் பிரிவினருக்கிடையே நடத்திவரும் 'டெஸ்ட்' கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இனிங்ஸ்சினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 70.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 350 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் டிலக்ஸன் 74 ஓட்டங்களையும் செந்தூரன் 50 ஓட்டங்களையும் சஜீவன் 41 ஓட்டங்களையும் பிரகாஷ் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 47 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரியைச் சேர்ந்த பானுஜன் 20 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 104 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் சுகந்தன் 15.02 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 89 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் தினேசன், தர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 32.2 ஓவர்களில் 94 ஓட்டங்களை மாத்திரமே பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் டினேஸ்கரன் 38 ஓட்டங்களையும் சுகந்தன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அனோஜன் 05 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் சிவேந்திரன் 05 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் நிரூஜன் 09 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 33 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 06 ஓட்டங்களுக்கு ஒருவிக்கெட்டையும்கைப்பற்றினார்கள்.

இந்நிலையில் யூனியன் கல்லூரியைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடும்படி யாழ். இந்துக் கல்லூரி பணித்தது. இதனால் இரண்டாவது இன்னிஸ்சிலும் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 61.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

நிலோசன் 68 ஓட்டங்களையும் டினேஸ்கரன் 33 ஓட்டங்களையும் விஜிதரன் 26 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிவேந்திரன் 14 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 36 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 10 ஓவர்கள் பந்து வீசி 50 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் அமலன், செந்தூரன், அனோஜன் ஆகியோர் தலா 01 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். இதனால் யாழ்.இந்துக் கல்லூரி இன்னிஸ் மற்றும் 36 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (86)

# இன்றைய ஆட்டங்கள்

மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஆதரவுடன் அமரர் மாணிக்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மருதனார்மடம் மயிலிட்டி கலைமகள் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டி யில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் எதிர் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக பி அணி. (04-86)

★ ★ ★

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கிடையேயான உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக்கழகம் எதிர் அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக்கழகம்.

தெல்லிப்பழை யுத் யூனியன் விளையாட்டுக்கழகம் எதிர் அளவெட்டி கலை ஒளி விளையாட்டுக்கழகம். (04-86)

# வீதியோட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம்

வலி. வடக்கு, பெப்.15

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற 10 கிலோ மீற்றர் தூர வீதி ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டு முதல் பத்து இடங்களைப் பெற்ற வீரர்களின் விவரங்கள் வருமாறு:-

சி. திசாந்தன்,ஞா.யூட்லாஸ், வி.இளமாறன்,ர. ரஞ்சித்,பா.விஜேந்திரன், பா.வினோத், இ.மஜீவன், ஜெ. நஜீர், வி.சிரஞ்சீவன், பா.சஞ்சீவன்.

இப்போட்டியில் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொண்டதுடன் பெரும்பான்மையான வீரர்கள் இறுதிவரை குறித்த தூரத்தை ஓடி நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த சில வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த வீதி ஓட்டப்போட்டி மீண்டும் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (04-86)

# குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# பரபரப்பான எல்லே போட்டியில் நாணயச் சுழற்சியால் எஸ்.எம்.எஸ் சம்பியன்

வலி.வடக்கு,பெப்.15

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் மல்லாகம் எஸ். எம்.எஸ். விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக்கழகமும் மல்லாகம் எஸ். எம்.எஸ். விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய எஸ்.எம்.எஸ். விளையாட்டுக்கழகத்தினர் ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தார்கள். இரண்டு ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு விளையாடிய ஆபிரகாம் விளையாட்டுக் கழகத்தினரும் ஓர் ஓட்டத்தைப்பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர். இதனால் ஆட்டம் சம நிலையில் காணப்பட்டது.

எனவே வெற்றி தோல்வியை தீர்மானிக்க இரு அணிகளுக்கும் தலா15 பந்துகள் விளையாட அனுமதிக்கப்பட்டது. இரு அணிகளும் 15 பந்துகளின்போது எவ்வித ஓட்டங்களையும் பெறாத நிலையில் தொடர்ந்தும் ஆட்டம் சம நிலையிலேயே காணப்பட்டது.

எனவே இறுதியாக வெற்றி தோல்வி நாணயச் சுழற்சி மூலம் தீர்மானிக்கப் பட்டது இந்த நாணயச் சுழற்சியில் எஸ். எம்.எஸ். விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனாக தெரிவு செய்யப் பட்டது. (04-86)

## இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி

வலி.வடக்கு, பெப் 15

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாட நெடுந்தீவு ஜோன்சன் விளையாட்டுக் கழகமும் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் தகுதி பெற்றுள்ளன. (04-86)

# மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் பரீட்சையில் சித்திபெற்றோர் விவரம்



யாழ்ப்பாணம், பெப்.15

இலங்கைமெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலகருக்கான பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த ஐந்து பேர் சித்தியடைந்துள்ளனர். இதில் சிவராஜா கோபிநாத் 88 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்தினை பெற்றுள்ளார்.

அத்துடன் முசாந்தி மார்க்கண்டு 82 புள்ளிகளையும் பி.நேசரூபன் 76 புள்ளிகளையும் ஆனந்தகிருஸ்ண கமலகுமாரன் 74 புள்ளிகளையும் என்.சிறிகாந் 76 புள்ளிகளையும் பெற்றுச் சித்தியெய்தியுள்ளனர்.

மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் பரீட்சையில் 90 பேர் தோற்றியிருந்த போதும் ஐந்து பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04-23)

யாழ்.மாவட்டத்தில்

# பெண்களுக்கான கபடிப் போட்டியும் வலிகாமம் வலயத்தில் அறிமுகம்

வலி.வடக்கு, பெப். 15

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே 2010ஆம் ஆண்டு முதல் இலங்கைக் கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு அமைவாகப் பெண்களுக்கான கபடிப் போட்டி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

முதல் தடவையாக வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே இந்தக் கபடிப்போட்டி நடைபெறவுள்ளமையால், மிகச் சொற்ப அளவிலான பாடசாலைகளே கலந்து கொள்ளவுள்ளன.

இதனால் இந்தக் கபடிப் போட்டிகள் இந்த வருடம் வலய மட்டத்தில் நடைபெறவுள்ளன.

எனினும் அடுத்த வருடம் மேலும் சில பாடசாலைகள் கபடிப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள நிலையில் போட்டிகள் கோட்ட மட்டத்தில் நடைபெற்றுப் பின்னர் வலய மட்டத்தில் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (04-86)

# நெடுந்தீவு பிரதேச உதைபந்தாட்டச் சம்பியனானது உதயசூரியன் வி.க.


வலி.வடக்கு, பெப். 15

நெடுதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உதய சூரியன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் சீக்கியான் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகமும், உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை ஒன்றுக்கொன்று சளைக்காத வகையில் மோதிக்கொண்ட போதிலும் ஆட்டம் நிறைவு பெறும்வரை இரு அணிகளினாலும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட தண்டனை உதைகளைச்சரிவரப் பயன்படுத்திக் கொண்ட உதய சூரியன் விளையாட்டுக் கழகம் 01:00 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (04-86)



சிறிதர்மலோக சென்றல் கல்லூரி, யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டம் அண்மையில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. இதன் ஆரம்ப நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்களே இவை.

இரு கல்லூரிகளின் அணித்தலைவர்களும் நாணய சுழற்சியில் ஈடுபடுவதை முதலாவது படத்திலும், யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர் அருட்திரு. ஜெறோ செல்வநாயகம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், சிறிதர்மலோக சென்றல் கல்லூரியின் கிரிக்கெட் முகாமையாளரும் விளையாட்டுப் பொறுப்பாசிரியருமான அனுர விக்கிரசிங்க உரையாற்றுவதையும் அவருக்கு யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும் அடுத்துள்ள இருபடங்களிலும், சிறிதர்மலோக சென்றல் கல்லூரி [illegible] இசைப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் எனும் அடையாளத்தை நாகரிகத்தால் தொலைத்து நிற்கும் தற்காலத் திருமணங்கள்

''வேட்டி கட்டிய தமிழன்தான் இம்முறை டெல்லியில் இந்திய ஆட்சியைத் தீர்மானிக்கப் போகின்றான்'', இது கடந்த 2001ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறிய வசனம். சொன்னபடியே நடந்தது.

வேட்டி- தமிழன் என்ற இன அடையாளத்தின் குறியீடு.

மதத்தில் இந்து ஆனால் என்ன, கிறிஸ்தவன் ஆனால் என்ன தமிழ்ப் பண்பாடு என்பது வேட்டி என்ற ஆடையால் தமிழனாக எம்மை அடையாளப்படுத்தியது. தமிழனின் தேசிய உடை வேட்டிதான்.

எனது சிறுபராய நினைவுகளை இரைமீட்டிப் பார்க்கிறேன். அப்போது கிறிஸ்தவர்களும்கூடப் பெருமளவில் வேட்டியுடன் திருமணம் செய்ததைக் கண்டுள்ளேன்.

காலமாற்றத்தால் இன்று அனைத்து கிறிஸ்த வர்களும் முற்றிலும் ஆங்கிலப் பாணியில் கோட், சூட் ஆடைக்கு மாறி விட்டனர். ஆசியாவில் உற்பத்தி யாகிய கிறிஸ்தவ மதம் மேற்குலகக் காலனி ஆட்சி வழியாக எம்மை வந்ததால் போலும் அவர்கள் கோட், சூட்டுக்கு முற்றாக மாறிவிட்டனர்.

வேட்டி என்பது தனியே இந்து மதத்தவர்களாகிய தமிழர்களிடம் மட்டும் அதுவும் கோயில், திருமணம் போன்ற நிகழ்வுகளில் மட்டும் அணியும் ஆடையாகச் சுருங்கிச் செல்கிறது. பழைய தலைமுறையினர் வேட்டி என்பதனுள் பெருமளவில் வழுவாது நிற்கின்றனர்.

இளையதலைமுறையினர் கோயில்களிலும் நீளக் காற்சட்டை அணிவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விடயம். இந்து திருமணங்களின்போது ஆண் வேட்டி என்ற தமிழ்ப் பண்பாட்டைத் துறந்து குர்தா, சர்வாணி என வட இந்தியப் பண்பாட்டுக்கு மாறுவது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதாகும். இனத்தின் பண்பாட்டு நிகழ்வொன்றில் இனப் பண்பாட்டு ஆடையைத் துறந்து நாகரிகம் என்ற பெயரில் அந்நியரைப் பிரதி செய்து நிற்பது வருந்தத்தக்கது.

தமது இனத்தின் வேர்களைத் தேடி ஐரோப்பிய, அமெரிக்கக் கண்ட நாடுகளிலிருந்து ஆபிரிக்காவுக்குச் சென்ற கறுப்பர்களின் வரலாற்றுக் கதைகளை, விவரணச் சித்திரங்களை, சினிமாப்படங்களை அறிந்துள்ளோம். பார்த்தவர்களும் எம்மில் உண்டு.

இனம் ஒன்று தமது பூர்வீகம் என்ன, பரம்பரை என்ன, இனத்தின் இருப்பைக் கூறும் அடையாளச் சின்னங்கள் எவை, எங்கே உள்ளன என்பதை அறிவதற்கு ஆர்வம் காட்டுகின்றது. அறிந்தவற்றைப் பேண முயல்கின்றது. அடையாளச் சின்னங்களின் இழப்பை விரும்பாமல் பாதுகாக்க முயல்கின்றது.

ஆங்கிலேயர்களை எடுத்துக் கொண்டால் தமது பெயருடன் குடும்பப் பெயரையும் இணைத்தே வைத்துக் கொள்ளுவார்கள். குடும்பப் பெயரைக் கொண்டு தலைமுறை முழுவதையுமே அறிந்துகொள்ளும் வாய்ப்பு உள்ளது.

ஆனால் தமிழர்களாகிய எமக்கு அவ்விதமான பண்பும், பற்றும் உள்ளனவா எனப் பார்த்தால் அது கேள்விக்குரியது தான்.

திருமணங்களின்போது இனத்துவ அடையாளம் கூறும் வேட்டி அணிவது என்ற பண்பாட்டை ஆண் பெருமளவுக்குத் தொலைத்து வருகின்றான்.

வட இந்திய ஹிந்திக்காரர்களின் ஆடை அணிவதுதான் நாகரிகம்.- ''லேற்றஸ்ற் ஸ்ரைல்ஸ்'' என நினைக்கின்றான். எமது பிரதேசங்களின் திருமணங்கள் பெருமளவில் குர்தா அல்லது சர்வாணி அணிந்த திருமணங்களாகவே உள்ளன.

ஆனால் திருமணத்தில் பெண் அதாவது மணமகள் அன்றும் சேலை (கூறை) இன்றும் அதேதான். ஏன் அவள் வடஇந்தியப் பாணியிலோ, மேற்கத்தியப் பாணியிலோ ஆடையை மாற்றவில்லை. மாற்ற முயற்சிக்கவில்லை. இது பலத்த கேள்விக்குரிய விடயம். என் மனதைக் குடைந்த இவ்விடயத்திற்கு விடைகாணப் பெண்களிடம் கேள்வி கேட்டபோது பலவித விடைகள் வந்தன.

''பெண்தான் இனத்தின் பண்பாட்டைச் சுமந்து வருகின்றாள். பண்பாட்டு அம்சத்தின் குறியீடு அவள்தான். அதனால் தான் அவள் மாற்றம் எதுவுமின்றி கூறைச் சேலை திருமணத்தின்போது அணிகின்றாள். பெண்களுக்குத் திருமண நாளில் மணமகள் ஆடையாகக் கூறைச் சேலை அணிவதுதான் விருப்பம். அதுதான் அழகு அதனால் அவள் மாற்றத்தை விரும்பவே இல்லை!''

''பால்நிலை சமத்துவம் பேணப்படாத சமூக அமைப்பு இது. மார்ச் 8 ஆம் திகதி மகளிர் தினத்தன்று மட்டும், ஊடகங்களிளில் மட்டும் பால்நிலை சமத்துவம் கூறும் சமூகம். பெண் திருமண ஆடையை மாற்ற விரும்பினால் ஏற்றுக்கொள்ளப்போவ

**மருதன்**

தில்லை. துணிந்த மணமகள் உடையை மாற்றினால் அவளை முற்றாக ஒதுக்கி விடும். அதனால்தான் ஆடை மாற்றம் பெண்ணால் நிகழ்த்த முடியாதுள்ளது.


''ஆடை மாற்றத்தை சமத்துவமாகக் கருதி ஏற்றுக்கொள்ளும் மணமகன் எனக்குக் கிடைத்தால் நிச்சயம் நான் என் விருப்பத்துக்குரிய ஆடை அணிந்து திருமணம் செய்வேன்.'' இவைதான் பெண்கள் தரப்பிலிருந்து வந்த விடைகளில் பிரதானமானது.

பெண்களால் அளிக்கப்பட்ட விடைகளில் இருந்து ஆய்வைத் தொடங்குவோம். பெண்தான் பண்பாட்டைச் சுமக்க வேண்டும். ஆண் பண்பாட்டை மாற்றலாம் அல்லது சீரழிக்கலாம். ஆணாதிக்க சமூகத்தை அப்படியே தக்கவைக்கும் பதில் இது.

பெண் தனக்கு கூறைச் சேலைதான் அழகு என நினைப்பது விருப்பத்தையோ இயலாமையையோ குறிக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அடுத்த பதிலில் பால்நிலைச் சமத்துவம் இல்லையென்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

தனது மணமகன் ஆடை மாற்றத்தை ஏற்றால் தானும் மாற்றுவேன். அப்போதும் ஆணின் தயவில் தான் வாழ வேண்டியுள்ளது என்று இறுதி விடை உள்ளது. இங்கு நான் ஆண், பெண் சமத்துவம், சமத்துவமின்மை என்பதைப் பிரதான விடயமாகச் சொல்லவரவில்லை.

திருமண ஆடைத் தெரிவில் பெண்மட்டும் பாரம்பரியம் என்ற பெயரில் தெரிவு உரிமையின்றி இருப்பதைப் பெண்ணிலைவாதிகள், பெண்கள் இயக்கங்கள் பொருட்படுத்தாமலிருப்பது கவலைக்குரி



யது. தமிழன் என்ற இன அடையாளங்களில் ஒன்றாகியுள்ள வேட்டி என்ற ஆடையைத் திருமண நாளில் துறந்து போகும் நிலையை எண்ணி வருந்தித் தான் இதை எழுதுகின்றேன். மேற்கு நாட்டுப் பாணியில் பலவற்றுக்கும் மாறி விட்டோம். இன அடையாளத்தை எமது பாரம்பரியச் சடங்குகளில் ஏன்துறக்க வேண்டும்? அண்மையில் கொழும்பில் பொறியிலாளராக பெரிய கட்டட நிர்மாணக் கம்பனியை நடத்தும் அன்பரின் திருமணத்திற்கு ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குச் சென்றிருந் தேன். அங்கு எமது யாழ்ப்பாண மணமகன் பட்டு வேட்டியுடன் திருமணம் செய்ததைக் காண ஆனந்தமாக இருந்தது.

ஐரோப்பிய, வட அமெரிக்க, ஓசானிக் நாடுகளில் இருந்து வரும் எம்மவரைக் கேட்டால் அங்கு பலரும் வேட்டி என்ற தமிழர் அடையாளத்துடன்தான் திருமணம் செய்வதாகக் கூறுகின்றனர். அந்திய நாட்டவருக்கு தமது தமிழர் அடையாளத்தைக் காட்டுவதில் பற்றாக உள்ளனர். எமது நாட்டிலும் சிங்களவர்களையும், முஸ்லீம்களையும் எடுத்துப் பார்ப்போமாயின் திருமணம் அவர்கள் இனம் சார் பண்பாட்டு ஆடைகளுடன்தான் நிகழுகின்றது.

அவர்கள் தமது பிள்ளைகளுக்கு வைக்கும் பெயர்கள் கூட பண்பாட்டை விட்டு விலகாத பெயர்கள் தான்.

ஆனால் நாம், டில்சி, டிலிசாந், றஸ்மி, றஜீஸ் எனப் பலர் மாறிவிட்டோம். மொழி தெரியாத, இனம் புரியாத பெயர்களைத் தான் பெரும் பாலானோர் வைக்கின்றனர். அதுதான் நாகரிகம் எனவும் நினைக்கின்றோம். தமிழ் நிலா, தமிழினியன் இலக்கியன், செந்தாமரை, சீராளன், தரங்கினி எனப் பெயர் வைக்கும் பெற்றோர் சிலர் இருப்பது ஆறுதலாகத் தான் உள்ளது.

எமது முன்னைய பெற்றோர், சுப்பிரமணியம், சிவபாக்கியம், கந்தையா யோகம்மா எனவும் சற்றுப்பின் சாரங்கன், தமிழ்ச் செல்வி, இளமதி எனவும் பிள்ளைகளுக்குப் பெயர் வைத்தனர். தமிழாக அல்லது தெய்வப் பெயராக அது இருந்தது. ஆனால் இப்போது பெயரிலும் தமிழனைத் தொலைத்தோம், பண்பாட்டுச் சடங்குகளிலும் தமிழனை அழிக்கின்றோம்.

கால மாற்றத்தை உள்வாங்கி நவீன இலத்திரனியல் சாதனங்களையும், வாழ்க்கை வசதிகளையும் உள்வாங்குகின்றோம் தானே. அதுபோல நவீன நாகரிகம் என்று ஆணின் திருமண உடையையும் மாற்றினால் என்ன எனக் கேட்பவரும் எம்மிடையை பலர் உள்ளனர். ஏன்தான் பெண்ணுக்கு வழங்க முன்வரவில்லை? வளர்ச்சியைக் காண நவீன உலகத்தை எமக்குள் உள்வாங்கத்தான் வேண்டும். அதற்காக எமது இனத் துவ பண்பாட்டு அம்சங்களை, பாரம்பரியம் கூறும் சின்னங்களை, வாழ்ந்த வாழ்க்கையின் எச்ச சொச்சங்களை இழக்க வேண்டுமா? நாமே இழிவாக நினைக்க வேண்டுமா? இனத்தின் இருப்பைக் கூறும் அடையாளங்களை இழந்துதான் உள்வாங்க வேண்டுமென்றில்லை.

உலகில் பலநூறு இனங்கள் உள்ளன அவை தமக்குரிய தனித்துவங்களைப் பேணுவதிலும், காணுவதிலும் எவ்வளவு அக்கறை காட்டுகின்றன.

ஆனால் தமிழர்களாகிய நாம் காலம் தின்றதையும், யுத்தம் தின்றதையும் விட நாமாகவே தின்னக் கொடுத்து இனத்தின் அடையாளத்தை இழப்பதில்தான் அக்கறை காட்டுகின்றோம். வேட்டி கட்டியவன்தான் தமிழன் என்பதை திருமணத்தில் நிலை நிறுத்துங்கள். தமிழ், தமிழன் என்ற பண்பாட்டு அம்சங்களை மீள வலியுறுத்தும் விழிப்புணர்வைக் கட்டியெழுப்ப பண்பாட்டு ஆர்வலர்களே அணிதிரளுங்கள். பூமிப் பந்தில் தொலைந்து போகாத இனமாக எம்மை நாமே மீளுருவாக்கத்தில் ஈடுபடுவோம்.

# டோங்கா தீவில் நேற்றுமுன்தினம் நில நடுக்கம்

லண்டன்,பெப்.15

தெற்கு பசுபிக்கடல் பகுதியிலுள்ள டோங்கா என்ற தீவுகள் அடங்கிய நாட்டில் நேற்று முன்தினம் காலை நிலநடுக்கம் ஏற் பட்டது.

இந்த நாடு 169 சிறுசிறு தீவுக் கூட்டங் களைக் கொண்டது. சுமார் 500 மைல் சுற்றளவுக்குள் இந்தத் தீவுகள் அடங்கியுள்ளன.


டோங்கா தீவின் தலைநகரில் இருந்து தென்கிழக்குப் பகுதியில் சுமார் 60 மைல் தொலைவில் நேற்றுமுன்தினம் காலை இந்த அனர்த்தம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 6.3 ரிச்டர் புள்ளியாகப் பதிவாகியிருந்தது.

இந்த நிலநடுக்கம் பூமியில் அதிக ஆழம் இன்றி உருவாகியமையால், டோங்காவில் கட்டடங்கள் கடுமையாகக் குலுங்கி நடுங்கின. மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டுச் சிதறி ஓடினர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரம் தெரியவில்லை.

டோங்கா தீவுக் கட்டடங்கள் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் அபாயப் பகுதியில் உள் ளன. கடந்த செப்ரெம்பரில் அங்கு8 ரிச்டர் அளவு கோலுக்கு ஏற்பட்ட முதல் பெரும் நிலநடுக்கத்தில் சிக்கி 8 பேர் பலியானார்கள்.

(ஓ)


**கண்ணீர் அஞ்சலி**



இலங்கை செஞ்சிலுவைச் சங்க
நெடுந்தீவு கிளைத் தலைவர்
எட்வேட் அருந்தவசீலன் (சீலன்)
அவர்களின் அன்புத் தந்தையார்
நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எட்வேட் J.P
அவர்கள் இறைபதம் அடைந்தமையை யொட்டி அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை. செஞ்சிலுவை சங்க
தென்மராட்சிக் கிளை.

(சி/564892)


# புதுப்பொலிவுபெறும் புல்லுக்குளம் தூர்வாரும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.15



முற்றவெளி பகுதியில் உள்ள புல்லுக் குளத்தை ஆழப்படுத்தி சுத்தம் செய்து தூர்வாரும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பொழுது போக்கு இடமாக மாற்றியமைக்கும் பொருட்டு யாழ்.நகரில் உள்ள மூன்று குளங்களை நவீன முறையில் புனரமைப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நட வடிக்கை எடுத்துள்ளார்.

இதன் முன்னேற்பாடகவே புல்லுக்குளத்தைத் துப்புரவு செய்யும்பணிகள்நடைபெற்றுவருகின்றன.

குளத்தில் உள்ள சேறு, தாம ரைக்கொடிகள் மற்று ம் புல்கள் என்பன கனரக வாகனங்கள் மூலம் அகற்றும் பணிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட ஆரியகுளம் நகரின் மத்தியில் உள்ள வண்ணார்குளம் போன்றவையும் புனரமைப்புச் செய்யப்பட்வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களின் கோட்டையாகத் திகழ்ந்த ஆப்கானிஸ்தானின் தென்நகரம் மீட்பு

## கூட்டுப்படைகள் அதிரடிப் பாய்ச்சல்

காபூல், பெப்.15

ஆப்கானிஸ்தானின் தெற்கிலுள்ள மார்ஜா நகரை தலிபான்களின் கட்டுப்பாட் டுக்குளிருந்து 'நேட்டோ' இராணுவப் படைகளும், ஆப்கானிஸ்தானிய துருப்புகளும் சனிக்கிழமை அதிகாலை மீட்டன. இந் நகரம் ஹெல்மாந்த் மாகாணத்திலுள்ளது. மார்ஜா நகரம் காபூலுக்கு தென் மேற்கில் 610 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது.

'நேட்டோ' துருப்புகளின் எண்ணிக்கை 15 ஆயிரத்துக்கும் மேல் இருக்கும். என்றாலும் இந்த நடவடிக்கையின்போது தலிபான்கள் தரப்பில் 20 பேரே இறந்துள்ளனர். 11 பேர் ஆயுதங்களுடன் பிடிபட்டுள்ளனர். வீடுகள் மீதோ, நகரின் மீதோ 'நேட்டோ' படைகள் துப்பாக்கிகளாலும், பீரங்கிகளாலும் சுடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்காங்கே வாகனப்போக்கு வரத்துக்கு இடையூறாக இருந்த (மண்) சுவர்கள் மட்டுமே சிறு வெடிகள் மூலம் தகர்க்கப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான 'நேட்டோ' படைகள் 2001 ஆம் ஆண்டு நுழைந்ததற் குப் பின்னர் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும்.

சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட ஹெலிகொப்டர்களும் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டன. 'நேட்டோ' படைகளின் விமானப் படைப் பிரிவும் தரைப்படைப் பிரிவுகளும் இணைந்து நகரைச் சுற்றி வளைத்துத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன.

தலிபான்களின் கட்டுப்பாட்டிலிருந்த இந்த நகரின் மக்கள் எண்ணிக்கை சுமார் 1 இலட்சத்து 25 ஆயிரமாகும். இந்த ஊரின் வறிய நிலைமை காரணமாகத் தலிபான்கள் தரும் ரொக்கக் கூலிக்காக அவர்களுடைய ஆதரவாளர்களாக ஏராளமானோர் செயற்படுகின்றனர். இந்த ஊரைச் சுற்றி போதை மருந்து தயாரிக்கப் பயன்படும் கஞ்சா செடிகள்தான் அதிகம் சாகுபடி செய்யப்படுகின்றன.

எனவே, இந்த ஊரில் தலிபான்கள் தங்களுடைய கஞ்சா கிட்டங்கிகளை அமைத்து அவற்றிலிருந்து சரக்கை வெளிநாடுகளுக்கு அனுப்பி தங்களுக்குத் தேவைப்பட்ட ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் வாங்கி வந்தனர். கஞ்சா கடத்தலுக்கும், படைக்கு ஆள் சேர்ப்புக்கும் அவர்களுக்கு இந்த நகரம் மிகப்பெரிய மையமாக இருந்து வந்தது.

பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியான பின்னர் ஆப்கானிஸ்தானில் செயற்பட மேலும் 30 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்படுவார்கள் என அறிவித்திருந்தார்.

அதேவேளை, ஆப்கானிஸ்தானிலிருந்து தலிபான்களை ஒழிக்காமல் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற முடியாது என உணர்ந்திருந்த அமெரிக்கா, தலிபான்களின் செல்வாக்கு மிக்க தெற்குப் பகுதி நகரமான மார்ஜாவைக் கைப்பற்ற வேண்டும் என்றும் திட்டம் தீட்டியிருந்தது.

அதற்கு ஏற்பப் படைகள் திரட்டப்பட்டு, தென் பகுதி நோக்கி அனுப்பப்பட்டன. துருப்புகளை நகருக்குள் இறக்குவதற்கும், எதிரிகள் அமைத்த தற்காப்பு அரண்களைத் தாக்கித் தகர்ப்பதற்கும் விமானப் படை ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

உலக அரங்கில்

வீடுகள் மீதோ சிவிலியன்கள் மீதோ குண்டுகளை வீசினால் அவர்களுடைய ஆதரவு கிடைக்காமல் போய்விடும் என்பதால் குண்டுவீச்சு நடத்தாமலேயே படையினர் நகரைத் தாக்கினர் என்பதே இந்த நடவடிக்கையின் தனிச் சிறப்பு.

தலிபான்கள் அவ்வளவு எளிதில் இந்த நகரை விட்டுக்கொடுத்துவிடவில்லை. நகரின் எல்லா வீதிகளிலும், வயல்வெளிகளிலும், திறந்தவெளிகளிலும் கண்ணிவெடிகளையும் நாட்டு வெடிகுண்டுகளையும் ஏராளமாகப் புதைத்து வைத்துள்ளனர். அத்துடன் ஆங்காங்கே பெரும் பள்ளங்களையும் வெட்டி அதில் இராணுவ வாகனங்கள் கவிழ்ந்துவிழ ஏற்பாடு செய்துள்ளனர்.

நகரை முதலில் சுற்றி வளைத்த 'நேட்டோ' படைகள் நண்பகலில் அங்குள்ள மிகப்பெரிய கடை வீதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன. வீடுகளுக்குள் தலிபான்கள் மறைந்திருக்கின்றனரா என்று தேடுதல் வேட்டையில் ஈடுபட ஆப்கானிஸ்தான் இராணுவச் சிப்பாய்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

நகரில் இப்போது பொதுமக்கள் தங்கள் வீட்டு ஜன்னல்களையும், வாசல் கதவுகளையும் ஓரளவுக்கு அவ்வப்போது திறந்துவைத்துக்கொண்டு வெளியில் என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்கின்றனர்.

# தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தச் சதித் திட்டம்; சுற்றுலாப் பயணிகளுக்கு அமெ. எச்சரிக்கை

வாஷிங்டன், பெப். 15

''அமெரிக்கர்களை இலக்கு வைத்து, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள். எனவே, வெளிநாடுகளில் சுற்றுலாக்களை மேற்கொண்டுள்ள அமெரிக்கர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அறிக்கையொன்றின் வாயிலாக அறிவுறுத்தியுள்ளது.

''அல்-குவைதா, தலிபான் இயக்கம், இவற்றுடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்புகள் ஆகியவை ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளன'' என அமைச்சகம் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

''தற்கொலைப் படை, கார்க் குண்டு, ஏவுகணை, வெடிகுண்டு, கடத்தல், விமானக் கடத்தல் ஆகியவை மூலம் தாக்குதல் நடத்த இவை திட்டமிட்டுள்ளன. எனவே, வெளிநாடுகளில் சுற்றுலா சென்றுள்ள அமெரிக்கர்கள் இந்தத் தாக்குதலிலிருந்து தப்பிக்க எந்த நேரமும் உஷார் நிலையில் இருக்கவேண்டும்'' என்றும் அது மேலும் விவரித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்கர்களுக்கு உலக அளவில் அல்-குவைதாவினால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என உளவுத் துறை எச்சரித்துள்ளது.

குறிப்பாக தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலுள்ள அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்த அல்-குவைதா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என அமெரிக்க உளவுத்துறை சனிக்கிழமை மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# பாக். தலிபான் இயக்கத்தின் புதிய தலைவராக டூபான்!

இஸ்லாமாபாத், பெப். 15

பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தின் புதிய தலைவராக மவுல்வி டூபான் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தலிபான் இயக்க ஆரம்பத் தலைவராகவிருந்த பைதுல்லா மசூத், தன் மாமனார் வீட்டில் தங்கியிருந்தபோது, அந்த வீட்டின் மீது அமெரிக்க இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் அவர் பலியானார்.

இதைத் தொடர்ந்து ஹக்கிமுல்லா மசூத் புதிய தலைவரானார். அவரையும், அமெரிக்க இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி பலி கொண்டது. இப்போது புதிய தலைவராக மவுல்வி டூபான் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் ஒரக்ஷி, குர்ரம் மலைப் பகுதிகளில் தலிபான் கொமாண்டராக இருந் தவர். மிகக் கொடூர குணம் கொண்ட இவர் கோழியை அறுப்பது போல எதிரிகளின் கழுத்தை அறுத்து கொலை செய்பவர்.

கடந்த பொதுத் தேர்தலின்போது முன்னாள் பிரதமர் பெனாஸிர் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் இவரும் ஒரு குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஜிமெயில் சேவைக்கு ஈரானில் தடைவிதிப்பு

தெஹ்ரான், பெப். 15

கூகுள் ஜிமெயில் சேவைக்கு ஈரான் அரசு திடீரென் தடைவிதித்துள்ளது. அதற்குப் பதிலாக அரசே ஓர் ஈமெயில் சேவையைத் தொடங்கவுள்ளது என வோல் ஸ்டிரீட்ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரான் அரசு ஜிமெயில் சேவைக்குத் தடைவிதித்துள்ளது. அதற்குப் பதில் மக்களுக்கும், அரசுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையிலான மாற்று மெயில் சேவையை தொடங்க அது திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கையை ஈரானின் தொலைத்தொடர்புத்துறை எடுத்துள்ளது என்றும் அச்செய்தியில்குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீப காலமாக பேஸ்புக், ட்வீட்டர், யூடியூப் ஆகியவற்றைப் பயன்படுத்தும் எதிர்க்கட்சியினரின் செயல்களை அரசு உளவு பார்க்கிறது என ஈரானிய எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்தப் பின்னணியில் ஜிமெயிலைத் தடைசெய்ய ஈரான் அரசு முடிவு செய்துள்ளது.

ஈரானில் மிகவும் பிரபலமான மெயில் சேவையாக ஜிமெயில் திகழ்கிறது. குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஜிமெயில் தான் உச்சநிலையில் உள்ளது. அதேபோல எதிர்க்கட்சியினரும் கூட ஜிமெயிலைத் தான் பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.

இது ஈரான் அரசுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. அதனால் இந்தத் தடை நடவடிக்கையை அது மேற்கொண்டுள்ளது. தங்களது மெயில் சேவைக்கு ஈரான் அரசு தடைவிதித்திருப்பது குறித்து கூகுள் நிறுவனம் இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை.

சமீபத்தில்தான் சீனாவில் கூகுளுக்குச் சிக்கல் வந்தது. இப்போது ஈரானிலும் அதற்குத் தடை வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மண்டேலா - ஒபாமா வாஷிங்ரனில் சந்திப்பு

வாஷிங்டன், பெப்.15

நெல்சன் மண்டேலாவை அமெரிக்க ஜனாதிபதிபராக்ஒபாமாசனிக்கிழமைவெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகையின் ஊடகத்துறைச் செயலர் ரொபார்ட் கிப்ஸ் குறிப்பிடுகையில், ''தென் ஆபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா (வயது - 91) சிறையிலிருந்து விடுதலையான 20 ஆம் ஆண்டு நிறைவு கொண்டாடபட்டு வருகிறது. இந்நிலையில், அவரை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்தித்துப் பேசினார்'' என்றார்.

''இச்சந்திப்பின்போது, மண்டேலாவின் விடுதலை நிகழ்வை அமெரிக்க மக்களும் மகிழ்ச்சியோடு கொண்டாடி வரவேற்கின்றனர் என ஒபாமா தெரிவித்துக் கொண்டார்'' என்றும் ரொபார்ட் கிப்ஸ் குறிப்பிட்டார்.

தென் ஆபிரிக்காவில் நிலவிய இன வெறியை எதிர்த்துப் போராடிய நெல்சன் மண்டேலா, 27 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார். இதன் பின்னர் 1990 ஆம் ஆண்டில் அவர் விடுதலையானார்.

# மியான்மர் எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் விடுதலை

யாங்கூன், பெப். 15

மியான்மரில் கடந்த 7 ஆண்டுகளாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் டின் ஓ (வயது - 82) சனிக்கிழமை விடுவிக்கப்பட்டார்.

இவர் மியான்மரில் ஜனநாயகத்துக்காகப் போராடி வரும் ஆங் சான் சூகியின் கட்சியைச் சேர்ந்தவர். கடந்த 2003 ஆம் ஆண்டு அவரை மியான்மர் இராணுவ அரசு வீட்டுக் காவலில் வைத்தது. இதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அவரது வீட்டுக் காவல் நீட்டிக்கப்பட்டு வந்தது.

மியான்மரில் இராணுவ ஆட்சியின் கீழ் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள ஐ.நா. சிறப்புத் தூதர், இன்று திங்கட்கிழமை இங்கு வருகை புரியவுள்ளார்.

இந்நிலையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆங் சான் சூகி தொடர்ந்து வீட்டுக் காவலிலேயே வைக்கப்பட்டுள்ளார்.


## கண்ணீர் அஞ்சலி



தென்னிந்தியத் திருச்சபையின் மகாசபை உறுப்பினரும் (Synod) தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆதீன நிர்வாக சபை உறுப்பினருமான எட்வேட் அருந்தவசீலன் (சீலன்) அவர்களின் தந்தையான

நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எட்வேட் J.P.

அவர்களின் மறைவினால் துயருற்று வேதனையில் வாடும் அவரின் குடும்பத்தினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

தென்னிந்தியத் திருச்சபை,
யாழ். ஆதீனம்,
வட்டுக்கோட்டை.

ஆயர், குருமார்கள்,
நிர்வாக சபை உறுப்பினர்கள்

## துயர் பகிர்கின்றோம்



எமது குடும்ப நண்பராகிய திரு எட்வேட் அருந்தவசீலன் (சீலன்) அவர்களின் அன்புத் தந்தை

நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எட்வேட் J.P.

அவர்கள் இவ்வுலக வாழ்வுறவை விட்டு விண்ணுலக வாழ்விற்குள் சென்றுள்ளமையினால் அன்னாரின் பிரிவினால் வேதனையுறும் அவரின் குடும்பத்தினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தென்னிந்தியத் திருச்சபை வளாகம்,
கொக்குவில்.

அருட்பணி. இ.ராஜ்குமார் குடும்பத்தினர்,
ஸான்.ஆறுமுகம் வரதராஜன் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புனே நகரில் குண்டுவெடிப்பு 12 பேர் பலி; 40 பேர் காயம்!

புனே,பெப்.15

மராட்டிய மாநிலம் புனே நகரில் நேற்று முன்தினம் இரவு குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில்12 பேர் பலியானார்கள். 40 பேர் காயமடைந்தனர்.

மராட்டியத்தின் தலைநகரான மும்பை மாநகரம் தொடர்ந்து தீவிரவாதிகளின்.தாக்குதல் இலக்காக இருந்து வருகிறது.

இந்த நிலையில் தீவிரவாதிகளின் கவனம், மராட்டியத்தின் கலாசார தலைநகரும், தொழில் நகருமான புனேயின் பக்கம் திரும்பி உள்ளது.

புனே நகரில் கோரேகான் பார்க் பகுதியில் வெளிநாட்டினர் வந்து செல்லும் பிரசித்தி பெற்ற ஓஷோ ஆசிரமம், தர்கவின் பிரார்த்தனை மையம் போன்றவை உள்ளன. அதே பகுதியில் பிரபல உணவு விடுதியுள்ளது.

இந்த உணவு விடுதியில் எப்போதும் கூட்டம் நிரம்பி வழியும். நேற்றுமுன்தினம் இரவு 7.15 மணிக்கு அங்கு கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது அங்கு திடீரென பயங்கர சத்தத்துடன் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதனால் அந்தப் பகுதியே அதிர்ந்தது. குண்டு வெடித்ததும் அங்கிருந்தவர்கள் பதற்றத்துடன் அங்கும் இங்குமாக சிதறி ஓடினர்.

இந்தக் குண்டுவெடிப்பில் சிக்கி 12 பேர் உடல் சிதறி ரத்த வெள்ளத்தில் பலியானார்கள். மேலும் சுமார் 40 பேர் படுகாயம் அடைந்தனர்.

அந்த இடம் முழுவதும் ஒரே ரத்த வெள்ளமாக காட்சி அளித்தது. குண்டு வெடிப்பில் துண்டிக்கப்பட்ட சிலரது கை கால்கள் ஆங்காங்கே சிதறி கிடந்தன.

இந்த சம்பவம் பற்றிய தகவல் அறிந்ததும் மராட்டிய தீவிரவாதத் தடுப்புப் பொலிஸ் படையினரும், வெடிகுண்டுத் தடுப்புப் படையினரும், உள்ளூர் பொலிஸாரும் அங்கு விரைந்து வந்தனர். சம்பவ இடத்தை அவர்கள் சுற்றி வளைத்தனர். இதற்கிடையே அம்புலன்ஸுகளும் வரவழைக்கப்பட்டன.


குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் பொலிஸார் ஆய்வு நடத்தியபோது.........

பலியானவர்களின் உடல்களை பொலிஸார் மீட்டு பிரேத பரிசோதனைக்காக சிவில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். படுகாயமடைந்தவர்களை மீட்டு, புனே சாஸ்சூன், உத்ரானி, ஜஹாங் கிர் வைத்திய சாலைகளுக்கு அனுப்பினர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக் கப்பட்டு வருகிறது.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

குண்டுவெடிப்பில் பலியானவர்களில் 2 பேரும், காயம் அடைந்த வர்களில் சிலரும் வெளிநாட்டினர் எனத் தெரியவந் துள்ளது. அவர்கள் எந்தெந்த நாட்டைசேர்ந் தவர்கள் என்பதைக் கண்டுபிடிக்கும் பணியில் விசாரணை அதிகாரிகள் ஈடுபட்டு உள்ளனர்.

இந்த குண்டு வெடிப்பு குறித்து டில்லியில் மத்திய உள்துறை செயலாளர் ஜி. கே. பிள்ளை கூறுகையில், இதுதீவிரவாதிகளின் கைவரிசைதான். சி.பி.ஐ. தடயவியல் குழுவினர் புனேவுக்கு அனுப்பிவைக் கப்பட்டு உள் ளனர். தேசிய புலனாய்வு அமைப்பினரும் புனே விரைந்திருக்கிறார்கள் - என்றூர்.

இந்தக் குண்டுவெடிப்பை நடத்தியது இந்திய முஜாகிதீன் இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதிகளாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதுகுறித்து விசாரணை நடந்து வருகிறது.

## சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு உலகம் அழிய வாய்ப்பேயில்லை

அரக்கோணம், பெப்.14-

இன்னும் 450 கோடி ஆண்டுகளுக்கு உலகம் அழியாது - என்று பிர்லா கோளரங்க விஞ்ஞானி அய்யம்பெருமாள் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

வரும் 2012ஆம் ஆண்டில் உலகம் அழியும் என்று சமீபகாலமாக உலகம் எங்கும் தகவல் பரவி வருகிறது. இது வதந்தியா? அல்லது உண்மையா என்று பலர் கேள்விகள் எழுப்பி வருகின்றனர். சூரியனில் இருந்துதான் கிரகங்கள் தோன்றி பிரபஞ்சத்தில் இயங்கி வருகின்றன. சூரியன் தோன்றி 450 கோடி ஆண்டுகள் ஆகின்றன. சூரியனில் இருந்து வினாடிக்கு 750 தொன் ஹைட்ரஜன் ஆவி வெளியாகி 746 தொன் ஹீலியமாக வெளிப்படுகிறது. மீதமுள்ள 4 தொன் ஒளியாகவும், வெப்பமாகவும் வெளிப்படுகிறது.

விஞ்ஞானிகளின் அதிநுட்ப ஆராய்ச்சியில் இன்னும் 450 கோடி ஆண்டுகளுக்கு உலகம் அழிவதற்கு வாய்ப்பே இல்லை. பலர் கூறுவதுபோல் 2012 இல் கண்டிப்பாக உலகம் அழியாது. 2020 ஆம் ஆண்டு ஒரு குறுங்கோள் பூமியைத் தாக்கும் என்று கூறுகிறார்கள். அவ்வாறு தாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. குறுங்கோள் இடம் பெயர்ந்து பூமியைத் தாக்கும் நிலை ஏற்பட்டால் அக்னி ஏவுகணை மூலமாக குறுங்கோளை பொடிப்பொடியாக தகர்க்கும் சக்தி உலக ஆய்வுக்கூடத்தில் உள்ளது. ஆகவே எந்த சூழ்நிலையிலும் பூமிக்கு ஆபத்து ஏற்படாது - என்றார்.

# இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்காவிடின் தி.மு.க. வேடிக்கை பார்க்காது

## கருணாநிதி திட்டவட்ட அறிவிப்பு



சென்னை,பெப்.15

தமிழர்களுக்கு இலங்கை அரசு அதிகாரப் பகிர்வு அளிக்கவில்லை - என்றால் தி.மு.க. அதை வேடிக்கை பார்க்காது என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர்களுக்கு அளித்த வாக்குறுதி களை நிறைவேற்ற அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வருவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளைத் தேர்தல் முடிந்த பின்னர் நிறைவேற்றுவதுதான் நியாயமான, நாணயமான ஜனநாயகமாக இருக்க முடியும்.

அதிலும் குறிப்பாக, இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு என்ற அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையென்றாலும், தாமதப்படுத்தினாலும் தி.மு.க. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது.

இங்குள்ள தி.மு.க. அரசின் சார்பாக மத்திய அரசை வலியுறுத்தி ஆவன செய்யத் தயங்காது.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் கைது செய்யப்பட்டுள்ள சரத் பொன்சேகாவுக்கு மரணதண்டனை விதிக் கப் போக்கின்றனர் எனத் செய்திகள் பரவுகின்றன.

இலங்கை வரலாற்றில் அந்தக் காலத்திலும், இந்தக் காலத்திலும் யார் யாரெல்லாம் பழி வாங்கப்பட்டார்கள், கொலையுண்டார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியும்.

அதேநேரத்தில், இந்திய வரலாற்றில் அலெக்சாண்டரிடம் தோல்வியுற்ற புருஷோத்தம மன்னனை, அலெக்சாண் டர் எப்படி நடத்தினார் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இந்தச் சரித்திரக் குறிப்பை இலங்கை ஆட்சியாளர்கள் மறந்திருக்க நியாயமில்லை. - என்றுள்ளது.

# இந்தியச் செய்திகள்

# நம் இனம் - மொழியைக் காக்க தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போரிடுவோம்

## அக்கினிப்புயல் சீமான் அறைகூவல்

நம் மொழி, இனம் காப்பதற்காக தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம். உலகம் முழுவதும் நாம் இருக்கிறோம். உலகம் பெருமைப்பட்டுப் பார்க்கும் இனமாக தமிழ் இனம் உள்ளது - என்று நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்காக உயிர் நீத்த முத்துக்குமாரின் முதலாம் ஆண்டு நினைவை போற்றும் வகையில் சேலத்தில் 'நாம் தமிழர்' இயக்கம் சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

வரும் மே 18 ஆம் திகதி 'நாம் தமிழர்' இயக்கத்தை அரசியல் இயக்கமாக அறிவிக்க இருக்கிறேன். இதுதான் எனது இலக்கு. இதன் பின்னர் 2016 இல் ஒரு பெரிய அரசியல் புரட்சி ஏற்படுத்திக் காட்டுவேன்.



தமிழ் இனத்திற்காக முத்துக்குமார் போன்ற பலர் உயிர் நீத்துள்ளார்கள். நம் நாட்டில், காட்டில் எவ்வளவு புலிகள் உள்ளன என்பதை கணக்கிடுகிறார்கள். மிருகங்களை வதை செய்யக் கூடாது என்று கூறுகிறார்கள்.

ஆனால் ஒரு இனமே அழிந்துகொண்டு இருக்கிறது. ஒன்றரை லட்சம் பேர் இலங்கையில் கொன்று குவிக்கப்பட்டனர். உலகம் முழுவதும் நாம் உள்ளோம். உலகம் பெருமைப்பட்டுப் பார்க்கும் இனமாக தமிழ் இனம் உள்ளது. நம் மொழி, இனம் காப்பதற்காக தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம் - என்றார்.

# தெலுங்கானாப் பகுதியில் முழு அடைப்பு ரயில் மறியல் - கல்வீச்சில் பஸ்கள் சேதம்

## 10 மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஐதராபாத், பெப். 15

தெலுங்கானாவில் நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டத்தால் 10 மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கல்வீச்சில் பஸ்கள் சேதமடைந்தன.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து, தனித் தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பாக குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது. இந்தக் குழு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த அறிவிப்பை மத்திய அரசு கடந்த வெள்ளியன்று வெளியிட்டது.

அதில், தெலுங்கானா மாநிலக் கோரிக்கை மட்டுமின்றி, தற்போதைய ஐக்கிய ஆந்திர மாநிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட 7 அம்சங்கள் குறித்து குழு ஆராயும் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இக்குழு தனது அறிக்கையை தாக்கல் செய்வதற்கு டிசம்பர் 31 ஆம் திகதிவரை நீண்டகால அவகாசமும் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்புக்கு தெலுங்கானாக் போராட்டக் குழுவினர் கடும் கண்டனம் தெரிவித்து உடனடியாக போராட்ட அறிவிப்பை வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து ஏற்கனவே கடந்த சில மாதங்களாக தீவிரமாக நடைபெற்று தற்காலிகமாக சற்று ஓய்ந்திருந்த தெலுங்கானாப் போராட்டம் மீண்டும் தீவிரம் அடைந்தது.

போராட்டத்தின் மையப்பகுதியாக விளங்கிவரும் ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர் கூட்டு நடவடிக்கை குழு, மத்திய அரசின் அறிவிப்பை கண்டித்து நேற்றுமுன்தினம் முழு அடைப்பு (பந்த்) போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

தெலுங்கானா பிராந்தியத்தில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு தெலுங்கானாப் போராட்ட அரசியல் நடவடிக்கை குழுவும் ஆதரவளித்திருந்தது. ஆனால், குழுவில் இடம்பெற்றிருந்த் காங்கிரஸ் கட்சி கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

முழு அடைப்பு நடைபெற்ற ஐதராபாத், அடிலாபாத், வாரங்கல், கம்மம் உட்பட 10 மாவட்டங்களில் இந்தப் போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

பஸ், ரயில்கள் இயக்கப்பட்டாலும், பல இடங்களில் வீதி மற்றும் ரயில் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. வாரங்கல் மாவட்டம் நர்கம்பேட்டையில் 10 பஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அடிலாபாத்தில் 4 பஸ்களும், மேடக்கில் 7 பஸ்களும் கல்வீச்சில் சேதமடைந்தன.

# காதலர்கள் தினக் கொண்டாட்டத்தை கண்டித்து நாய்களுக்குத் திருமணம்!

## திருப்பூரில் விநோதம்

திருப்பூர்,பெப். 15

காதலர் தினம் என்ற பெயரில் கலாசாரம் மீறப்படுவதைக் கண்டித்து, இந்து முன்னணி சார்பில் நாய்களுக்கு திருமணம் செய்து வைக்கும் நிகழ்ச்சி திருப்பூரில் நேற்றுமுன்தினம் நடந்தது.

திருப்பூர் பழைய பஸ் நிலையம் முன்பாக நடந்த, 'நாய் திருமண' நிகழ்ச்சிக்காக, பல்வேறு பகுதிகளில் இருந்து நாய்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. பல்வேறு இன நாய் ஜோடிகளுக்கு, புரோகிதரால் திருமணம் செய்து வைக்கப்பட்டது. கூடியிருந்த தொண்டர்கள், திருமண ஜோடிகளுக்கு அட்சதைத் தூவி வாழ்த்தினர்.

இதுகுறித்து இந்து முன்னணி கோட்ட ஒருங்கிணைப்பாளர் கிஷோர்குமார் கூறியவை வருமாறு -

காதல் என்பது மிகவும் புனிதமானது. வள்ளுவரும், வாசுகியும் வாழ்ந்த புண்ணிய பூமியில், காதலர் தினம் என்ற பெயரில், ஆண்டு தோறும் ஒவ்வொரு நபர்களுடன் அட்டூழியம் நடக்கிறது. உண்மையான காதலர்கள் இவ்வாறு கொட்டம் அடிப்பதில்லை.

இத்தகைய கலாசாரச் சீர்கேடுகளை களைய வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்து முன்னணி, நாய்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறது. காதலர் என்ற பெயரில் பல நாய்கள் செய்யும் வேலையைத்தான், இளைய சமுதாயத்தில் சிலர் செய்து வருகின்றனர் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமம், கிளிநொச்சி, வவுனியா செல்லும்
# போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள் வீதி மாறிச் செல்வதால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், பெப்.15

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து கொடிகாமம், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்குச் செல்லும் போக்குவரத்துச் சபையின் பஸ்களில் சில வழமையான - சபையினரால் அறிவிக்கப்பட்ட பாதையை விடுத்து வேறு வீதி வழியால் செல்வதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பஸ் நிலையத்தில் இருந்து வேம்படிச் சந்தியை அடைந்து பிரதான வீதியூடாகவே போக்குவரத்துச் சபை பஸ்கள் செல்ல வேண்டும் என்பதே நடைமுறையாகும். ஆனால் இந்த நடைமுறையை மீறி சாரதிகளில் சிலர் யாழ்.ஆஸ்பத்திரி வீதி வழியாக பஸ்களைச் செலுத்துகின்றனர்.

இதனால் சின்னக்கடை, மடத்தடி, பஸ்தியான் சந்தி போன்ற இடங்களில் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து ஏமாற்றமடைகின்றனர். பின்னர் அவர்கள் ஓட்டோக்களைப் பிடித்து கச்சேரியடிக்குச் சென்று அங்கிருந்து பஸ்களில் பயணிக்க வேண்டி ஏற்படுகின்றது.

அறிவிக்கப்பட்டவாறு பிரதான வீதியூடாகவே பஸ்கள் செல்ல வேண்டும் என்று போக்குவரத்துச் சபையின் உயரதிகாரிகள் பணித்துள்ள போதும் அதனைக் கவனத்தில் எடுக்காது சில சாரதிகள் செயற்பட்டு வருகின்றனர் என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் நோக்கி வரும் பஸ்களும் பிரதான வீதி வழியாகவே உள்ளே வரவேண்டும்.அந்த நடைமுறையும் உரியவாறு பின்பற்றப்படுவதில்லை என்றும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ)

# யாழ்.நூலகத்திற்குள் நாளாந்தம் கும்பலாக பிரவேசிக்கும் சுற்றுலாப்பயணிகள்.
## வாசகர்கள், மாணவர்கள் பெரிதும் சிரமம்

யாழ்ப்பாணம், பெப்.15

தென்னிலங்கையில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு நாளாந்தம் பெரும் எண்ணிக்கையில் வந்துசேரும் உல்லாசப் பயணிகள் யாழ்.நூலகத்தையும் விட்டு வைப்பதாக இல்லை.

ஒரே நேரத்தில் திரண்டுவரும் மக்கள் பெரும் கூச்சலிட்ட படி நூலகத்தின் அனைத்துப் பகுதிகளுக்குள்ளும் கண்டபடி சென்று புகைப்படங்களையும் எடுக்கின்றனர்.

இதனால் நூலகத்தில் அமைதியாக இருந்து கண்ணும் கருத்துமாகப் படித்து வரும் மாணவர்கள் பெரும் சிரமமப்படுகின்றனர். அங்கு பணிபுரிபவர்களும் கூட அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

நேற்றைய தினம் அங்கு வந்திருந்தவர்களில் ஒருவர், வாசிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவரை படம் எடுக்க முற்பட்டவேளை இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. "என்னைப் படம் எடுக்க வேண்டாம் எனது அனுமதியின்றி படம் எடுக்க முடியாது" என்று அந்த வாசகர் கூறினார்.

சுற்றுலாப்பயணியும் விடுவதாக இல்லை "நூலகரின் அனுமதி பெற்றே நாங்கள் இங்கு வந்துள்ளோம். உமது அனுமதி எமக்குத் தேவையில்லை" என்று அவரும் வாதாடினார்.

இரு தரப்புக்களிலும் வாக்குவாதம் முற்றி முறுகல் நிலை ஏற்பட்டது. அவ்வேளை நூலகரும் ஏனைய பணியாளர்களும் நிலைமையை ஒருவாறு சமாளித்து சுமூக நிலையை ஏற்படுத்தினர்.

உல்லாசப்பயணிகளால் நூலகத்திற்கு ஏற்படும் பாதக, அசௌகரிய நிலைமைகள் குறித்தும் மாணவர்கள் மற்றும் வாசகர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்தும் நூலகர் நேற்று யாழ்.மாநகர மேயருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது. (ஒ)

# தபாலகங்களுக்குத் தளபாடங்கள்; 4லட்சத்து 35ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப்.15

வடமாகாணத்தில் உள்ள தபாலகங்கள் பலவற்றுக்குப் புதிதாகத் தளபாடங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கென 4லட்சத்து 34ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


யாழ்.குடா நாட்டில் உள்ள அனேக தபாலகங்களில் நீண்ட காலமாக தளபாடங்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனால் ஊழியர்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே பணியாற்றி வருகின்றனர். (04-224)

# இணையங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை?

கொழும்பு, பெப். 15

செய்தி இணையத்தளங்களை இலக்கு வைத்துத் தடைசெய்யும் நோக்குடன் அரசு சீன நிபுணர்களை இலங்கைக்கு அழைக்கவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சீனாவின் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் இலங்கை வரவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)



செலிங்கோ ஆயுள் காப்புறுதி நெல்லியடிக்கிளையின் வாடிக்கையாளரான ந.கிருபாகரனின் அகால மரணத்தையடுத்து அவருக்கான அவரின் இழப்பீட்டுத் தொகையான 2 லட்சத்து 7ஆயிரத்து ஐநூற்று பதினெட்டு ரூபா பெறுமதியான காசோலையினை அவரது மனைவி திருமதி கே.யோகேஸ்வரியிடம் பிராந்திய விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் ரி.நிரோஜன் கையளிப்பதையும், அருகில் நெல்லியடிக்கிளை முகாமையாளர் பீ.பாஸ்கரன், விற்பனை நிறைவேற்று அதிகாரி பி.சுபாசினி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். [ஒ 16]

# சுவாமி விபுலானந்தரின் 'யாழ் நூல்'; கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஆய்வரங்கு

கொழும்பு, பெப்.15

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 'யாழ் நூல்' ஆய்வரங்கு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கொழும்பு தமிழ்ச் சங்க கல்விக்குழுச் செயலாளர் மா.கணபதிப்பிள்ளை வரவேற்புரையையும், சங்கத் துணைத்தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தொடக்க உரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

'இயற்பியல் நோக்கில் யாழ் நூல்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நாகலிங்கம் சிவயோகனும்,'தமிழியல் நோக்கில் யாழ் நூல்' எனும் தலைப்பில் பேராதனைப்பல் கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரனும், 'இசை இயல் நோக்கில் யாழ் நூல்' எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் பிரமீளா குருமூர்த்தியும் ஆய்வுரைகளை வழங்கவுள்ளனர்.

ஒவ்வொரு ஆய்வுரைகளின் இறுதியிலும் புலமை நிலையிலான கலந்துரையாடல் நடைபெறும். அத்துடன் நூற்கண்காட்சியும் நூல் விற்பனையும் இடம் பெறும்.

மாலை ஆறு மணிக்கு 'இசை அரங்கம்' நிகழ்வு இடம்பெறும். இதில் முனைவர் பிரமீளா குருமூர்த்தி இசைவிருந்தளிக்கவுள்ளார். (ஒ-04-14)

# ஜெனரல் பொன்சேகாவை விடுவிக்குமாறு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர்கௌரவக்குறைவாகஎம்மைநடத்தினர்.

சரத் இராணுவத் தளபதியாகப் பதவி வகிக்கவே விரும்பினார். அவர் முப்படைகளின்தலைமையதிகாரியாகவிரும்பவில்லை.

அவர் யுத்த வீரர்களின் நலன்புரி விடயங்களில் கவனம் செலுத்த விரும்பினார். ஆனால் அவர்கள் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

இராணுவத் தளபதியாகத் தொடர்ந்து பதவி வகிக்க முடியுமா என அவர் கோத்தபாயவிடம் கேட்டார். அவர்கள் அதற்கும் அனுமதிக்கவில்லை. அதுவே அனைத்து நெருக்கடிகளுக்கும் முக்கியமானதாக அமைந்தது.

ஏனைய விடயங்கள் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இதுவே முக்கியமானது. படையினர் மரங்களின் கீழ் வாழ்வதை அவர் விரும்பவில்லை. அவர்களுக்கு வீடொன்று அவசியம் எனக் கருதினார்.

**கேள்வி:-** இராணுவத்தில் பணிபுரியும் வேளையே அவர் தனது அரசியல் வாழ்க்கைக்கான முயற்சிகளில் ஈடுபட்டார் என்பது உண்மையா?

**பதில்:-** அவர் தனது சீருடைகளைத் துறந்த பின்னரே அரசியலில் நுழைந்தார். அவர் மிகவும் நாகரிகமான முறையில் அரசியலில் நுழைந்தார். கடந்த நவம்பரில் ஓய்வுபெற்ற பின்னர் அவர் சாதாரண பொதுமகன் ஆகிவிட்டார்.

எனினும் அவர்கள் அவரை இராணுவச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப் போகிறார்கள் என மிரட்டுகின்றனர்.

### சதிப்புரட்சி என்பது கட்டுக்கதை

**கேள்வி:-** சதிப்புரட்சியொன்றை மேற்கொள்ள அவர் திட்டமிட்டிருந்தார் என்பது குறித்து உங்களுக்கு ஏதாவது தெரியுமா?

**பதில்:-** அவர் அதனைச் செய்ய நினைத்திருந்தால் எப்போதோ செய்திருக்கலாம். பிரபாகரன் கொல்லப்பட்ட உடனேயே அவர் இதனைச் செய்திருக்கலாம். அப்போது அனைவருக்கும் அவர் மாவீரனாகத் தென்பட்டார்.

சதிப்புரட்சி என்பது கட்டுக்கதை. அவர் ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் முழு மரியாதை கொடுத்தார்; நம்பினார்; கட்டுப்பட்டார்.

எனினும் பின்னர் அவர் ஏமாற்றமடைந்தார். ஜனாதிபதியையும்பாதுகாப்புச் செயலாளரையும் சுற்றியிருந்தவர்கள் சரத்தைப் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தினர்.

**கேள்வி:-** சரத் பொன்சேகா தன்னை எதிர்த்த பத்திரிகையாளர்களைக் கொலை செய்தார், காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுக் குறித்து என்ன தெரிவிக்கிறீர்கள்?

### லசந்த கொல்லப்பட்டபோது யுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்

**பதில்:-** இது எப்போதுமே இடம்பெறவில்லை. லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்ட வேளை சரத் பொன்சேகா நேரடியாக யுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்.

அவருக்கு வேறு விடயங்களுக்கு நேரமிருக்கவில்லை. இது குறித்து என்னால் உத்தரவாதமளிக்க - உறுதிகூற - முடியும்.

அவர் இராணுவ நடவடிக்கைகளில் மும்முரமாக இருந்தார். எந்நேரமும் வரைபடங்களுடனேயே இருந்தார். அவரது மனதில் வரைபடமொன்று இருந்தது.

பொதுமக்களைக் கொல்வதற்குச் சதித் திட்டமொன்றைத் தீட்டுவதையும், யுத்தத்தையும் ஒரே நேரத்தில் முன்னெடுக்க முடியாது.

இளம் அதிகாரியொருவரை எனது கணவருக்கு எதிராகச் சாட்சியமளிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட அதிகாரி எனது கணவரின் கீழ் சிறப்பாகப் பணியாற்றியவர்.

கொலைக் குற்றச்சாட்டுப் பொய்யானது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

**கேள்வி:-** இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக அவர் தனது நிலைப்பாட்டை மாற்றியமை குறித்து என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்? தமிழ் மக்களைத் துரிதமாக மீளக்குடியமர்த்துவதை எதிர்த்த அவர் அரசியலில் நுழைந்த பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டாரே?

**பதில்:-** வடபகுதி முழுவதும் நிலக்கண்ணி வெடிகளால் நிரம்பியிருந்தது. அவர் நிலக்கண்ணி வெடிகள் நூறு வீதம் அகற்றப்பட வேண்டும் என விரும்பினார். அதற்குச் சில காலம் எடுத்திருக்கும். இதன் காரணமாகத் தமிழர்களை இடம் பெயர்ந்த முகாம்களில் வைத்திருக்க வேண்டும் என்றார்.

தற்போது கூட அவர்களை மிக வேகமாகக் குடியமர்த்துகிறார்கள் என்றே அவர் தெரிவிக்கிறார். அது அவருக்கு கவலையளிக்கிறது.

தேர்தலுக்காகவே அவர்கள் இவ்வாறு செய்கின்றனர். மக்களை மீளக் குடியமர்த்தும் முறை இதுவல்ல.

### அவர் துணிச்சல் மிக்கவர், உறுதியாளவர்

• **கேள்வி:-** அவரது மனோநிலை எவ்வாறுள்ளது?

**பதில்:-** அவர் மிகுந்த துணிச்சல் உள்ளவர். மனோரீதியாகவும் அவர் நூறு வீதம் நல்ல நிலையில் உள்ளார். அவர் மிகவும் உறுதியானவர். தன்னம்பிக்கை உள்ளவர். எவராலும் அதனைக் குறைக்க முடியாது.

**கேள்வி:-**அவரது சிறை நிலைமை எவ்வாறுள்ளது?

**பதில்:-** திருமணமான கனிஷ்ட தர அதிகாரிகளுக்கான விடுதியிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அரசு தெரிவிப்பது போன்று ஆடம்பரமான இடத்தில் அவர் இல்லை. இராணுவத்தில் இருந்தவர் என்ற வகையில் எனக்கு இது தெரியும்.

**கேள்வி:-** ராஜபக்ஷ குடும்பத்தினரும் நீங்களும் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான வாய்ப்புள்ளதா?

**பதில்:-** அவர் தான் நியாயமான முறையில் விடுதலையாவதையே விரும்புகிறார். சட்டம் சரியான பதிலைப் புகட்டும். அவர் எந்தத் தவறும் செய்யவில்லை. ஏன் நான் அவர்களிடம் கெஞ்சவேண்டும்? நான் கூட அதற்கு இணங்கமாட்டேன். உண்மை ஒருநாள் வெளிவரும்.

### ஷிராந்தியும் நானும் நல்ல நண்பர்கள்

**கேள்வி:-** பொன்சேகாவின் கைதுக்குப் பின்னர் ஜனாதிபதியின் மனைவியுடன் நீங்கள் உரையாடினீர்கள் எனத் தெரிவிக்கப்படுவது உண்மையா?

**பதில்:-** ஆம் நாங்கள் நல்ல நண்பர்கள். நான் அவரைத் தொடர்பு கொண்ட போது ஷிராந்தி மொஸ்கோவிலிருந்தார். இரண்டு மணித்தியாலத்தின் பின்னர் என்னைத் தொடர்புகொண்டார்.

சரத் கைது செய்யப்படவில்லை. அவர் கடத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தேன். மிருகத்தைக் கொண்டு செல்வது போலக் கொண்டு சென்றார்கள் என்றேன்.

அவரது உயிரைக் காப்பாற்றுமாறு கோரினேன். ஷிராந்தி தான் ஏதாவது செய்வார் எனக் கூறினார். அவர் செய்தார் என நினைக்கிறேன்.

பெண்களுக்கு இடையில் இன்னமும் தொடர்புகள் உள்ளன. நாங்கள் தாய்மார்கள், மனைவியர். நான் அவருக்கு (ஷிராந்திக்கு) நன்றி தெரிவிக்கிறேன். - எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவிலும் பதுளையிலும் தனித்து களம் இறங்கும் மலையக மக்கள் முன்னணி

## மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானம்

கொழும்பு,பெப். 15

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திலும், பதுளை மாவட்டத்திலும் அரசுத் தரப்புடன் சேராமல் - தனித்து - மண்வெட்டிச் சின்னத்தில் களம் இறங்குவதற்கு மலையக மக்கள் முன்னணி தீர்மானித்திருக்கின்றது என நம்பகரமாக அறிய வருகின்றது.

நேற்று முன்தினம் கட்சியின் ஊழியர்கள், தேசிய நிர்வாகிகள், அமைப்பாளர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஹற்றனில் மூடிய அறைகளுக்குள் நடைபெற்ற போதே இவ்வாறு சொல்லப்பட்டது என நம்பகரமாக அறியவந்தது.

நுவரெலியா மாவட்டத்தில் கட்சியின் தலைவியும், காலஞ்சென்ற அமைச்சர் பெ.சந்திரசேகரனின் துணைவியாருமான திருமதி சாந்தினி சந்திரசேகரன் தலைமையிலும், பதுளையில் மாகாணசபை உறுப்பினர் அரவிந்தகுமார் தலைமையிலும் கட்சியின் மண்வெட்டிச் சின்னத்தில் வேட்பாளர் அணிகளை இத்தேர்தலின் போது இறக்குவது என நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின் றது.

எனினும், நுவரெலியா மாவட்டம், பதுளை மாவட்டம் ஆகியவற்றுக்கு வெளியே அரசுத் தரப்புடன் - வெற்றிலைச் சின்னத்தின் கீழ் - ஒன்றுபட்டுச் செயற்படுவது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது.

மலையக மக்கள் முன்னிணியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் பெரும்பாலும் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் நிற்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படி இல்லாவிட்டால் அவருக்கு தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் பெற்றுக்கொடுப்பது குறித்து அரசுத் தலைமையுடன் மலையகமக்கள்முன்னணியின் அரசியல் பீடம் பேச்சு நடத்தும் என்றும் கூறப்பட்டது. (சி)

# பொதுத் தேர்தலில் அரசாங்கத்துக்கு அறுதிப் பெரும்பான்மையும் கிடைக்காது

## ரணில் விக்கிரமசிங்க சொல்கிறார் இப்படி



கொழும்பு,பெப். 15

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தனக்குக் கிடைக்குடம் என்கிறது அரசு. ஆனால் தனிப் பெரும்பான்மையைக் கூட அரசினால் பெற முடியாது என்று ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சமயமே அவர் இப்படிக் கூறினார். அங்கு அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை அடிப்படையாக வைத்து சரத் பொன்சேகாவைக் கைதுசெய்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிப்பது பிரயோசனமற்ற ஒன்று என்று இக் கைது மூலம் அரசு நாட்டு மக்களுக்குக் கூற விரும்புகின்றது.

இந்நாட்டில் ஜனநாயகத்தை உருவாக்க இந்நாட்டு மக்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எம்முடன் ஒன்றிணைய வேண்டும். இத்தேர்தலில் அரசால் மூன்றில்இரண்டு பங்கு பெரும்பான்மையை மட்டுமல்ல தனித்துப் பெரும்பான்மையைக் கூடப் பெற முடியாது.

எதிர்வரும் தேர்தலில் வாக்குகள் எண்ணப்படும் முறைமை பற்றி நாம் தேர்தல்கள் ஆணையாளரிடம் கேட்கவுள்ளோம். வாக்குகள் எண்ணும்போது இடம்பெறும் மோசடிகளைத் தடுப்பதற்கான நட வடிக்கைகள் பற்றி நாம் ஆராயவுள்ளோம்.

இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்று எமது கட்சியின் மாவட்டத் தவிசாளர்கள் ஆலோசனை தெரிவித்தனர். அந்த ஆலோசனையின்படி யானைச் சின்னத்தில் போட்டியிடுவதென்று கட்சியின் செயற்குழு முடிவெடுத்தது. இருப்பினும், நாம் இன்னும் பல கட்சிகளுடனும் பேசி வருகின்றோம். மாற்று யோசனைகள் கிடைத்தால் அதை நான் செயற்குழுவிற்குச் சமர்ப்பிப்பேன்.

அத்தோடு கைதுசெய்யப்பட்டிருக்கும் சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்காக 20 மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அவரை விடுவிக்கும்வரை ஆர்ப்பாட்டங்கள் தொடரும். அதேபோல் இது தொடர்பாக நாம் சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் - என்றார். (அ-சி)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜகத் ஜயசூரிய இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி மேஜர் ஜெனரல் தயாரட்ண நாயக்காவைப் பணித்திருந்தார்.

அரசைக் கவிழ்க்க முயன்றமை, ஜனாதிபதியைக் கொலை செய்யத் திட்டமிட்டமை மற்றும் ஆயுத ஊழல்கள் தொடர்பாக எழுத்து மூலமான சுருக்கமான சாட்சியத்தை பொன்சேகாவிடம் பெறுமாறு அவர் தயா ரட்ணநாயக்காவைப் பணித்திருந்தார்.

எனினும், தான் தற்போது ஒரு சிவிலியன் எனத் தெரிவித்துள்ள ஜெனரல் பொன் சேகா தாம் இப்போது இராணுவச் சட்டத் திற்குக் கட்டுப்பட்ட வரல்லர் என வலியு றுத்தியுள்ளமையுடன் அதனால் இராணுவ அதிகாரிக்கு சுருக்கமான சாட்சியத்தைத் தாம் வழங்க மாட்டார் எனவும் தெரிவித்துவிட்டார்.

கடற்படைத் தலைமையகத்தில் உள்ள விடுதியொன்றில் சரத் பொன்சேகாவின் சாட்சியத்தைப் பெறுவதற்கே மேஜர் ஜெனரல் தயா ரட்ணாயக்கா திட்டமிட்டிருந்தார். பொன்சேகா அங்கேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஜெனரல் பொன்சேகா ஆரம்பக் கட்ட இராணுவ விசாரணைகளில் பங்குபெற மறுத்துள்ளதன் காரணமாக சட்டச் சிக்கலொன்று உருவாகியுள்ளது. அவர் தொடர்ந்தும் ஒத்துழைக்க மறுத்தால், என்ன செய் வது என்ற கேள்வி எழுந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைகின்றார் என்று அவர் சொன்னார்.

மேலும் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாகவும் அங்கு செய்தியாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை- தமிழர்களுக்கு இலங்கை அரசு அதிகாரப்பகிர்வு வழங்காவிடில் தி.மு.க. அதை வேடிக்கை பார்க்காது என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி நேற்றுமுன்தினம் கூறியமை குறிப்பிடத்தக்கது. (21ஆம் பக்கம் பார்க்கவும்)

## பொதுச்சின்னத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு செயற்குழுவால் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி அடுத்த வாரமளவில் நாம் இறுதித் தீர்மானத்தை எடுப்போம். ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் மற்றும் நல்லாட்சியை ஏற்படுத்துதல் என்ற அடிப்படையின் கீழ் நாம் பொதுக் கூட்டமைப்பாகக் களமிறங்கத் தயார்.

நாம் தேர்தலில் ஈடுபட முடியாதவாறு எமது அரசியல் தலைவர்கள் மிரட்டப்படுகின்றனர். எமது எம்.பிக்களின் வீடுகளைச் சோதனை செய்ய அரசு முற்படுகிறது. எமது பிரதித் தலைவர் கரு ஜயசூரியவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது.

அதுபோல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விஜயதாஸ ராஜபக்ஷ தொலைபேசி மூலம் மிரட்டப்படுகின்றார். பொன்சேகாவின் விடுதலைக்காகப் பாடுபடவேண்டாம் என்று அவர் கேட்கப்படுகின்றார்.

மனித உரிமைகளை இவ்வாறு மீறுவதற்குத் நாம் மஹிந்தவின் அரசை அனுமதிக்க முடியாது. அரசுக்கு எதிராக எழுதும் ஊடகவியலாளர்களும் காணாமல்போகின்றனர். எதிர்காலத்திலும் இவ்வாறான அடக்குமுறைகள் தொடர நாம் அனுமதிக்கப் போவதில்லை. - என்றார். (அ-சி)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈழமக்கள் புரட் சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் செயலாளர் செல்வம் அடைக்கலநாதன் ஆகிய ஐவரும் கூடி தற்போதைய அரசியல் நிலைப்பாடு குறித்து ஆராய்ந்தனர்.

அப்போது அடுத்துவரும் தினங்களில் கட்சித் தலைவர்கள் மீண்டும் ஒன்று கூடி வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான பொறிமுறை குறித்து விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்று இரா.சம்பந்தன் அங்கு கருத்துத் தெரிவித்தர் என அறிய வருகிறது.

இதேவேளை நாடாளுமன்றம் கலைக் கப்பட்டுவிட்டதால் இனிமேல் நடைபெறவுள்ள புதிய வேட்பாளர் தெரிவு பற்றும் ஆலோசனைக் கூட்டங்களுக்கு இதுவரை எம்பிக்களாக இருந்த 22 பேரையும் அழைக்கும் நடைமுறை பின்பற்றப்பட மாட்டாது என்று கூட்டமைப்பின் உயர் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, இதுவரை எம்.பிக்களாக இருந்த எம்.கே. சிவாஜிலிங்கம், என்.ஸ்ரீ காந்தா, பத்மினி சிதம்பரநாதன், செல்வராஜா கஜேந்திரன், சிவநாதன் கிஷோர், கனகசபை, கனகரட்ணம், தங்கேஸ்வரி கதிரமன், சந்திரநேரு. ஜெயானந்தமூர்த்தி உட்பட குறைந்த பட்சம் 12 பேருக்கு இந்தத் தடவை வேட்பாளர் நியமனம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் அந்தத் தலைவர் கோடிகாட்டினார். (ஒ-சி)

## தங்காலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


சந்தேகநபர்கள் ஆறுபேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந் ஜெயகொடி தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டமையால் அவர்களை வீதியிலிருந்து விலகுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளாதமையை அடுத்து பொலிஸார் அவர்கள் மீது தடியடித் தாக்குதல் நடத்தினர் எனப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயகொடி தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரும் சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)




IBM Computers for Sale
@
UNI - COMPUTER WAREHOUSE

Original IBM Think Center (Ex-Lease) (With Lock)

Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom

நம்ப முடியாத விலையில் !!!

Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!

System மட்டும் Rs.22000/=

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

# வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் தொழில் நிறுவனத்திற்கு முன் அனுபவம் உடைய இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்கள் தேவை.

ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யவிரும்புபவர்களும், பழக விரும்புபவர்களும் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீராம் எலக்றோனிக்**
105, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

(94858)

# மரண அறிவித்தல்

## திருச்செல்வம் தவநாதன் (மூளாயூர் தவம்)

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசாவிளானை நிரந்தர வசிப்பிடமாகவும் இணுவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் தவநாதன் நேற்று (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான திருச்செல்வம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சிங்கராசா, அமரர் நேசரத்தினம் மற்றும் சிறில்மகிபரத்தினம், தேவபாஸ்கரன், மரியசஞ்சீவி ஆகியோரின் சகோதரனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் றொபேட் மதிசேகரன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், உள்ளூராட்சித் திணைக்களம், முல்லை.), றோபேட் அருட்சேகரன் (விரிவுரையாளர், யாழ். பல்கலை.), தமிழினி வலன்ரீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிகலா, ஜோசப்மேரி, மயூரா ஆகியோரின் அன்பு மாமனாரும் சயந்தி, ஹாய்ரந்திரி, ரிஷார்த்தன், ஹரிநந்தனன் ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.ஆவார்.

இன்று (15.02.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னாரின் பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தெட்சணாமணி இல்லம்*
*4 ஆம் கட்டை,*
*இணுவில். தொ. பே: 021 222 7200.* (94877)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2010இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org